(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஹு சித்திரைமீ —APRIL 1913. | ஸஞ்சிகை 4. No. 4.

பொருளடக்கம்.

விசேஷ வ்யாஸங்கள்.— பக்கம்.
பலாமரம்.
—தி. பி. ஸுப்பராயர் ... 170
நோயாளிகளைப் பாதுகாக்கும் விதம்.
—எஸ். எம். க்ருஷ்ணஸாமி ... 172
பசுந்தாள் உரம். ... 176
கண்ணைக்கெடுக்கும் பாடப் புஸ்தகங்கள். ... 178
மகாதேவ கோவிந்த ரானடே. ... 181
விசேஷத்திரட்டு.—
கூட்டு வியாபாரம் ... 185
பெற்றோரின் உத்தரவாதம் ... 186
பயிர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகள் ... 188
தற்காலம் உபயோகத்திலிருக்கும் விவஸாயக் கருவிகளை அபிவ்ருத்தி செய்ய வேண்டியது அவசியம் ... 189
ஆடு மாடுகளுக்குத் தீனி போடுவது ... 191
பத்ரிகை ஆராய்ச்சி. ... 193
பையன்கள் பகுதி. ... 197
ஸ்த்ரீகள் பகுதி. ... 199
பகுதிக்குறிப்புள்.—
விவஸாயம்—வ்யாபாரம்--கைத்தொழில்--பொருளாதாரம் — கோவாபரேஷன்—இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள் சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன சற்பிதமும்—சட்டம்--வைத்யம்—வேடிக்கையும் துக்கடாச்சதைகளும்—விநோதங்கள்--யுக்திகளும் முறைகளும் ...201—217
தினவர்த்தமானம். ... 218
காலஸ்திதி. ... 223
பஞ்சாங்கம். ... 224

CONTENTS.

Special Articles— PAGE.
THE JACK TREE
—T. P. Subbarayar ... 170
NURSING OF THE SICK
—S. M. Krishnasami ... 172
GREEN MANURE ... 176
SCHOOL BOOKS THAT RUIN EYESIGHT ... 178
MAHADEVA GOVINDA RANADE ... 181
Selections—
Partnership ... 185
Responsibilities of Parents ... 186
Insect Pests ... 188
Necessity of Improving Existing Agricultural Implements ... 189
Feeding Cattle ... 191
Review of the Press ... 193
Boys' Section ... 197
Ladies' Section ... 199
Departmental Notes—
Agriculture ... 201
Commerce ... 203
Industry ... 204
Economics ... 205
Co-operation ... 206
Banking ... 207
Insurance ... 208
Education ... 209
Economic Products ... 210
Business Methods ... 211
Science, Machinery and Invention ... 212
Law ... 213
Medicine ... 214
Fun and Anecdote ... 215
Curiosities ... 216
Hints and Recipes ... 217
Diary of the Month ... 218
Season ... 223
Calendar ... 224

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# இந்தியர்களே!
# விழித்துக்கொள்ளுங்கள்.

உங்கள் ஸ்வதேச கைத்தொழில்களை ஆதரியுங்கள். ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வேலைசெய்கிறதும், அதனால் உங்கள் தேசத்து செல்வ அபிவ்ருத்திக்கு ஸாதகமாயிருக்கிறது மான ஒரு கம்பெனியில் உங்கள் உடுப்புக்கு வேண்டிய துணி களை வாங்கி உங்கள் ஸ்வதேச அபிமானத்தைக் காட்டுங்கள்.

## லாலிம்லி

கலப்பில்லாத கம்பளித்துணி

இந்தியாவிலேயே, இந்தியர்களுடைய ப்ரயாஸையால், இந்தியர்களுடைய உபயோகத்துக்காகச் செய்யப்படுகிறது. இந்தக் கம்பளித்துணி உடுப்புகள் தைக்க மகா ச்லாக்யமான தென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தியாவுக்கு இது ஒரு கீர்த்தியாகும்.

லாலிம்லி ஸூட் தைக்கும் துணிகள், சட்டைத்துணி கள், ட்வீட்கள், கம்பளிகள், உள் சட்டை முதலியவைகளுக்குத் துணிகளின் மாதிரியும், விலையும் எழுதிக் கேளுங்கள். இனாமாய் அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர் | G. A. Vaidya Raman, B.A, EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஹு சித்திரைமீ, APRIL 1913. | ஸஞ்சிகை 4. No. 4.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும. பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

# SPECIAL ARTICLES.

## விசேஷ வ்யாஸங்கள்.

### THE JACK TREE

BY

T. P. SUBBARAYAR.

#### பலாமரம்.

இம்மரம் ஸகலத்திற்கு மாகும். இம்மரத்தின் விசேஷத்தை எழுத நமக்கு புத்தி போதாது. இது தேவர்களாலும், மகரிஷிகளாலும் வியந்து சொல்லப்பட்டது. இம்மரத்தின் இலை, பிஞ்சு, காய், பழம், இவைகளும், மரமும், மனிதருக்குப் பலவகையாகப் பயனைத் தரும். பழமும், மரமும் தேவாலயங்களுக்கு உபயோக முள்ளவை.

பலாவின் இலைகளை சிறு ஈர்க்கைக்கொண்டு தைத்து வாழையிலை யற்ற விடங்களில் போஜன பாத்ரமாக உபயோகிக்கிறார்கள். ஒரு அடிப்பருமனுக்குக்குறைந்த சிறு கொம்புகள் அடுப்புக்கும், அதற்கு மேற்பட்டவைகள் வீடு கட்டவும், 3, 4, 5, 6, 7, 8 அடி சுற்றளவுள்ள மரங்கள் பலகையாக்கப்பட்டு, அலமாரிகள் (பீரோ) விசிபலகைகள், ஊஞ்சல் பலகைகள், ஆஸனப்பலகைகள், உடுப்புப் பெட்டிகள், கைப்பெட்டிகள், ஸாமான்கள் வைக்கும் அஞ்சறைப் பெட்டிகள், இன்னும் பலவிதத் தட்டு முட்டு ஸாமான்கள் செய்யவும் உதவும். முதிர்ந்த மரப்பலகைகளின் வர்ணம் சிவப்பு. அவைகளை வேலைக்கு உபயோகப்படுத்தும்போது தச்சர்கள் இழைத்தால், வழவழப்புக் கொடுக்கும். வார்னிஷ் என்னும் எண்ணெய் அடிக்கப்பெற்றால் கண்ணாடிக்கு மேலுள்ள பளபளப்பிருக்கும். மரம் கடினமற்றது. ஆனால் வலுவுள்ளது. இப் பலாமரம் தென்ஜில்லாக்களில் தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணம், மாயவரம் இவைகளில் அதிகமகப்படாது. பட்டுக்கோட்டை தாலூக்காவில் ஏராளமாக அகப்படும். இம்மரம் தேக்கமரத்தின் விலையில் முக்காலே மூன்று வீசம் விலை உண்டு. பருமனதிகப்பட்ட மரங்களின் க்ரயம் ஜாஸ்தி. ஒரு கஜ அகலம் தேறக்கூடிய மரங்களின் விலை ரூ 60, 70, - க்குக் குறையாது. புதுக்கோட்டை ஸமஸ்தானம் ஆலங்குடி தாலூக்கா கிழக்குப்பக்கத்திலும் மரத்தின் உற்பத்தி யதிகம். அதிகம் பருத்த மரங்கள் வேண்டியமட்டில் கிடைக்கும். இம்மரங்கள் மலையாளத்திலுள்ள பலாக்களைப் போல் பழம் தின்ன உபயோகப்படுவது சில வென்பதில்லாமல், ஸகல பலாப்பழங்களும் தின்ன உதவும். பலாப்பழம் ஒன்று $1\frac{1}{8}$ ரூபாய் வரை விலை பெறக்கூடியதாக அநேகம் பழங்கள் இப்பக்கங்களில் கிடைக்கும். அவைகள் ருசியில் கற்கண்டு, தேன் முதலியவைகளையும் தோற்கச் செய்யும். திருவனந்தபுரம் ராஜ்யத்திலும் வடமலையாளம் ஜில்லாக்களிலுமுள்ள பலா மரங்களைப் போல் புதுக்கோட்டை ஸமஸ்தனத்திலிருக்கா. மலையாளத்தில் தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டிருக்கும் பலாமரங்கள் போக, சாலையோரங்களிலும் ஏராளமாய் வைத்துப் பயிர் செய்யப்பட்டு, பாட்டைசாரிகளுக்கு, நிழலைத்தரும்படி செய்திருக்கிறார்கள். அவைகள் விஸ்தாரமாய் சாகோப சாகையாய் வளர்ந்து நிழலைத் தருவதுடன் ஸர்க்காருக்கு வருமானத்தையும் தருகின்றன. மலையாளத்திலுள்ள ஏழை ஜனங்கள் பலா காய்க்கும் காலத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்கு இக்காய்களையே ஆகாரமாக உபயோகிக்கும்படி கிடைக்கும். அநேகம் வீடுகள் பலாமரங்களால் கட்டப்பட்டிருக்கின்றன. பலாமரம் மலையாளத்தில் ஏராளமாக அகப்படுமாகையால் அங்கு அம்மரங்களின் விலை ஸகாயம். கூழஞ்சக்கையென்றும், வரிக்கஞ் சக்கையென்றும் அவைகளிருவகைப்படும். வரிக்கஞ் சக்கை

பென்னும் பலாவின் பழச்சுளைகள் தான் தின்னக்கூடியவை. அவைகளில் தான் பருத்த சுளைகளும், ருசி யதிக முள்ளதும் தேன் கசிந்து பெருகக்கூடியது முள்ளன. ஈசுவரனுக்கு முப்பழங்களபிஷேகஞ் செய்யப்படுவதில் பலாச்சுளையும் ஒன்று. எப்படிப்பட்ட துர்க்குணமுள்ளவர்களையும் எலுமிச்சம் பழத்தைப்போல் சாந்தப்படுத்தும் ச்லாக்யமான தன்மை பலாவுக் குண்டு. நமது தமிழ்ச் சக்ரவர்த்தி கம்பர் செய்திருக்கும் காவ்யங்களில் பலாப்பழங் சுளைப் பற்றி யதிகம் ச்லாகித்திருக்கிறார். உத்தமமான பலாப் பழத்திலுள்ள சுளைகள் 6, 7 அங்குலம் நீளமும், 5, 6 அங்குலமகலம் சுற்றளவும் $\frac{1}{2}$ அங்குல கனமுமுள்ளவைகளாயுமிருக்கும். முதிர்ந்த பழங்களின் சுளைகளுக்குள்ளிருக்கும் விதைகள் சுளைக்குள்ளேயே வேர் விட்டு முளைத்திருக்கும். அவைகளை உடனே செடி முளைக்கப் போடுவார்கள்.

பலாவின் விதைபிடித்த பிஞ்சுகளை மேல் முள்ளைச் சீவிவிட்டு ஸன்னமாய்க் கொத்திப் பலவகை கறிகள் செய்து சாப்பிடுவார்கள். சிலருக்கு அரைக்காயாக இருப்பது கறி சமைக்க ப்ரியமதிகம். முக்கால்க் காயாக இருப்பதின் சுளைகளை யெடுத்து தேங்காயெண்ணெயில் வருத்துச் சாப்பிடுவது மலையாளத்தாருடைய வழக்கம். சுளைதான் தனியே புசிக்க உதவும். இச்சுளை தேகத்திற்கு உஷ்ணத்தை யுண்டாக்கும். பலாச்சுளை தின்போர் ஸ்வல்பம் நெய்யைச் சாப்பிடுவதுண்டு. சில தேகங்களுக்கு பலாச்சுளை சாப்பிட்டால் வெட்டை வ்யாதியும், வயிற்று வலியுமுண்டாகின்றன. பலாச்சுளை தின்னவுடன் வெற்றிலை பாக்குத் தின்று ரஸத்தை உட்கொள்ளக் கூடாது. இந்த ரஸம் உள்ளே போகுமானல் மேற்படி சுளைகள் பூரித்து கெடுதியை விளைவிக்கும். நிதர்சனமாய் பலாச்சுளைகளை ஒரு பாத்ரத்தில் வைத்து வெற்றிலை பாக்கை மென்று ரஸத்தைத் துப்பினல் சற்று நேரத்தில் சுளைகள் பருத்திருப்பதைக் காணலாம். சிலர் பலாச்சுளையைத் தின்றவுடன் அதின் கொட்டையில் ஒன்றைத் தின்னுவிட்டால் தேகத்திற்குக்கெடுதி விளைவிக்காதென்று தின்பதுண்டு.

பல பலாப்பழங்களில் சுளை சிறுத்தும், குறைந்தும், உள் தாள்கள் அதிகப்பட்டுமிருக்கும். சிலாக்யமென்று தெரிந்த மரங்களிலுள்ளதையே வாங்குவார்கள். ஏற்றுமதி செய்யப்பட்டுப் போய் தொலை தூரங்களிலுள்ளவர்கள் வாங்குவதில் பழங்களின்மேலுள்ள முள்ளைப் பார்த்துப் பெரிதான முள்ளுள்ளதையே வாங்குவார்கள். இதுதான் சுளை பருமனுள்ளதாக இருக்குமென்பதற்குப் பரீக்ஷை. பலாச்சுளைகளுக்குள் இரண்டு மெல்லிய தோல்களுக்கப்பால் விதைகளிருக்கும். அக்கொட்டைகளின் மேலும் சிவந்த தோல்கள் மெல்லியதாக விருக்கும். சமயலுக்குஉபயோகிக்கும்போது விதைகளை நசுக்கி வேக வைத்து உபயோகிப்பார்கள். விதைகள் வெந்த பிறகு மாப்போல விருக்கும். சமயலில் குழம்பு காய்கறிகளுடன் சேர்த்தும் சேர்க்காமலும் பலா விதைகளை யுபயோகிக்கலாம். பலாவிதைகளைத் தனியே சுண்டல் செய்வதுமுண்டு.

மலையாளத்தார் பலாச்சுளையைச் சேர்த்துப் பாயஸம் செய்வதுண்டு. அதற்குச் சக்கை ப்ரதமனென்று பெயர். பலாச்சுளைகளை கொட்டையை நீக்கிவிட்டு, ஸ்வயமான தேனில் போட்டு வைத்திருந்து, சுளை அகப்படாத காலங்களில் உபயோகிப்பது முண்டு.

திருச்சி, தஞ்சாவூர், மதுரை முதலிய தென் ஜில்லாக்களில் பங்குனி மாஸமுதல் ஆனிமாஸ வரை நடக்கும் உத்ஸவங்களுக்குப் போகும் ஜனங்கள் பலாச்சுளை பழம் வாங்காமல் வருவதில்லை. மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் மூன்றும், பங்குனி முதல் ஆனி வரை நடக்கும் கல்யாணங்களில் உபயோகியாவிடின் அக்

கல்யாணங்கள் பரிஹரிக்கப்படும். முப்பழம் போட்டுக் கல்யாணஞ்செய்தார் என்னும் கீர்த்தி கிடைக்காது. பித்ருக்களை யுத்தேசித்துச் செய்யும் ச்ராத்தம் முதலியவைகளுக்கு இப்பலா இன்றியமையாதது. ஒருவன் புதிதாக ஒரு பலாமரத்தைக் கண்டால் அம்மரத்தடியில் பித்ருக்களை யுத்தேசித்து ச்ராத்தஞ்செய்ய வேண்டுமென்று விதித்திருக்கிறார்கள்.

வைரமுள்ள பலாமரத்தில் ஸகலரும் வணங்கக்கூடிய விக்ரகங்களைச் செய்து பூஜித்து வருவார்கள். நீண்ட காலங்களுக்கு மடிக்காமலிருக்கும். இப்படிச் செய்து வணங்கும் விக்ரகங்களின் எண்ணிக்கை மலையாள ராஜ்யத்திலதிகம். திறமையுள்ள மலையாளத்திய தச்சர்கள் மனிதர் புழங்குவதற்காகும் மரப் பாத்ரங்களை இப்பலாமரத்தில் கடசல் பிடித்து நானாவிதங்களாகப் பெரிதும், சிறியதுமாக விற்கிறார்கள். நிறத்தாலும், வேலைத்திறத்தாலும் மனிதர் மனதையும், கண்களையும் அபகரிக்கும் இப்பாத்ரங்கள். தவிர, மலையாளத்தார் செய்யும் பெரிய ஸத்திகளிலும், கல்யாணங்களிலும் குழம்பு, ரஸங்களை வைக்க சிறுசிறு தோணிகளை யொப்ப இப்பலாமரத்தால் செய்துவைத்துக் கொள்ளுவார்கள். மலையாளம் ஊட்டுப் பிறைகளில் (ஸத்ரங்களில்) 10,20,30, காலன்கள் பிடிக்கும் தோணி மரத்தட்டுகள் ஏராளமுண்டு. ஸாதாரணமான ஏழைகள் வீடுகளிலும் பரிமாற உதவும் அகப்பைகள் சிறு அகப்பைகள், பலா இலையைப்போன்ற அகப்பைகள், இன்னும் பல பாத்ரங்களையும் செய்து வைத்துக் கொள்ளுகிறார்கள். மலையாளதேச முழுவதிலும் ப்ராம்மணர், சூத்ரர்கள் எப்பதார்த்தங்களையும் கையாலெடுத்து வட்டிப்பதில்லை. வைத்ய சாஸ்த்ரப்படிக்கும், வைதிக ஆசாரப்படிக்கும் போஜனபதார்த்தங்களைக் கையால் எடுத்துப் பரிமாறப் படாதென்பதைத் தீவிரமாய் அனுஷ்டிக்கும் மேலானகுணம் அவர்களிடத்துண்டு.

பலாமரம் ஸாகுபடி செய்வதைப்பற்றி சென்ற டிஸம்பர் மாஸத்தில் ப்ரசுரித்திருக்கும் வ்யாஸத்தைப்பார்க்கவும்.

தி. பி. ஸுப்பராயர்.

---

## NURSING OF THE SICK

BY

S. M. KRISHNASAMI.

### நோயாளிகளைப் பாதுகாக்கும் விதம்.

வ்யாதி எல்லா வீட்டிலும் ஸாதாரண மாகையால் நோயாளிகளைப் பாதுகாக்கும் விதத்தை ஒவ்வொருவரும் அறிவது அவச்யமாகும். வைத்யரை நாம் முற்றும் ஒழித்துவிடவேண்டுமென்று நாம் இங்கே கூற வரவில்லை. வைத்யர் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடப்பதோடுங் கூட முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சில உண்டு.

**படுக்கை யறையி லிருப்பவர்:**—நோயாளிகளை ஒருவர் மாத்ரமே பாதுகாக்கவேண்டும். வைத்யர் சொல்பவைகளை ஒருவரே கேட்டு மருந்து கொடுத்து வைத்யர் இல்லாத ஸமயத்தில் நடக்கும் மாறுதல்களையும் நோய்ச் சேஷ்டைகளையும் ஒருவரே கவனித்திருந்து அவர் வந்தபோது ஒன்றும் விடாமல் கூறவேண்டும். இரண்டுமூன்று பேர் படுக்கை யறையிலிருந்தால் வைத்யர் சொல்வதைக் கேட்பதிலும், மருந்து கொடுப்பதிலும் அதிக குழப்பமுண்டாகும். ஒருவர் மருந்து கொடுத்துவிட்டுப் போக, மற்றொருவர் வந்து, மறுபடியும் மருந்தை எடுத்துக் கொடுப்பார். ஒருவர் வைத்யரிடத்தில் நோயாளிக்குப் பசி யெடுக்கவில்லையென்றால் மற்றொருவர் வந்து "மத்யானமெல்லாம் பசிபசி என்று அலஞ்சுபோனாளே" என்று குறுக்கே சொல்வார். வைத்யருக்கும் எதைக் கேட்பதென்ற ஸந்தேகமுண்டாகும். ஸாதாரணமாக, ஸ்திரீகள் தயையும், பொறுமையும், உள்ளவர்களாயிருப்பதாலும், நோயா

ளிகளின் அவஸ்தைகளை வெகு சீக்ரத்தில் கவனிக்கக் கூடியவர்களாயிருப்பதாலும், நடந்தவற்றை நன்றாக கவனித்து ஒரெழுத்தும் விடாமல் கூறக்கூடியவர்களா யிருப்பதாலும் நோயாளிகளைப் பாதுகாப்பதில் அவர்களே ஆடவர்களைக் காட்டிலும் மிகச் சிறந்தவர்கள். அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளைத் தான் நாம் 'நர்ஸ்' என்கிறோம். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகளைக் கவனிக்கும் பொறுப்பு தாயாருடையதாகிறது. அதனால் அநேக நன்மைகள் உண்டாகின்றன.

நல்ல 'நர்ஸ்' அதிக பொறுமையும், சாந்தமும், பொருந்தியவளா யிருக்கவேண்டும். அவள் ஒவ்வொன்றைப்பார்த்தும் திகிலடையக்கூடாது. நோயாளியைப்பற்றி எப்பொழுதும் அதிக விசாரமுங் கொள்ளக்கூடாது. கோபமென்பது சிறிதேனு மிருக்குமாயின் குடிகெட்டுப்போய்விடும். பேச்சிலும், நடத்தையிலும் மனோகரமாக இருக்கவேண்டும். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பதோடு நோயாளிக்கு அடிக்கடி தைரியங்கூறி இன்சொல் வழங்கி வரவேண்டும். தைர்யத்தாலும், இன்சொல்லாலுமே பாதிவ்யாதி நீங்கிவிடும். நோயாளிகளுடன் அதிகமாகப் பேச்சுக் கொடாமலிருப்பது நலம். முக்யமாய் அவர்களுடைய வ்யாதியைப்பற்றி அவர்களிடமே பேசக்கூடாது. அதைர்யமான வார்த்தைகளையும், விஸனகரமான செய்திகளையும் அவச்யம் விலக்கவேண்டும். நோயாளியறையில் தானும் உரக்கப்பேசப்படாது, அயலாரையும் உரக்கப்பேசவிடக்கூடாது. நோயாளி தூங்கிக் கொண்டிருந்தாலொழிய மெதுவாக ரகஸ்யங்கள்கூடப் பேசக்கூடாது. அவச்யமான பேச்சு நோயாளிக்கு உபத்ரவத்தைத் தராது. அறையில் நடக்கும்போது கிர்கிர் என்று சப்திக்கும் சடாக்களைத் தவிர்ப்பதுடன் மெதுவாகவும் நடக்கவேண்டும். நோயாளி யறையின் கதவிற்கு வெளியிலிருந்தபடி ஒருவரும் பேசக்கூடாது; ஏனென்றால் நோயாளி தன் வ்யாதியைப்பற்றித் தான் அவர்கள் பேசுகிறார்களென்று நினைத்து வருந்துவான். படுக்கையறைக்குமேலே மாடியில் ஓசைப்பட நடந்து நோயாளிக்கு உபத்ரவத்தை உண்டாக்காமலிருப்பது நலம்.

நோயாளிகள் எல்லாருக்கும் அடிக்கடி கோபம் வருவதும் பிடிவாதமா யிருப்பதும் வழக்கமாதலால் அவர்களை நயவார்த்தையால் மகிழ்வித்து நம் கார்யத்தை ஸாதித்துக்கொள்ள வேண்டும். 'நர்ஸ்' எப்பொழுதும் கூடவிருந்து நோயாளிக்கு உட்காருவது, படுப்பது, அன்னம், மருந்து ஊட்டுவது, ஜலமலம் விலக்குவது, முதலியவைகளில் எப்பொழுதும் ஒத்தாசை செய்வதவச்யம். படுக்கையில் சிறிது தாழ வந்து படுக்கவேண்டுமானால் நோயாளியை நம்முடைய கழுத்தை இறுகக்கட்டிக் கொள்ளச் சொல்லி நாம் அவரை அப்படியே சிறிது தூக்கினால் தக்க இடத்தில் தானேவந்து சேர்வார். தலையணைகளை அப்போதைக்கப்போது திருப்பிக் கொடுத்து வந்தால் நோயாளிக்கு மிகவும் ஸுகமாக இருக்கும். நோயாளியின்முகத்தையும் கைகளையும் ஒருநாளைக்கு 3, 4 தரம் வெந்நீரினாலாவது, வெந்நீரில் நனைத்து பிழியப்பட்ட துணி, ஸ்பஞ், ப்ளானல் இவைகளினாலாவது சூடுபடத்துடைத்துவரவேண்டும். கொஞ்சம் வெந்நீரில் டிஞ்சர் ஆப் மிர் திராவகத்தில் சில துளிகள் விட்டுக் கொப்பளித்தால் வாய் அரோசிகம் தீரும். தலைமயிரை தினந்தோறும் கோதிவாரவேண்டும். நோயாளி சிறிது ஆயாஸப்பட்டால் அத்துடன் விட்டு விடவேண்டும். வலி உண்டாகும்படி வெகுநேரம் உட்கார்ந்து சிக்கெடுத்தால் அதிர்ச்சி உண்டாகும். ஸாதாரணமாக நோயாளி விடியற்காலத்தில் பலவீன மாயிருப்பது வழக்கம். அப்பொழுது தான் நாம் அதிக ஜாக்ரதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

**நோயாளி அறை:**—படுக்கும் அறை பெரியதாகவும் மனோஹரமானதாகவு மிருக்கவேண்டும். அதிக வெளிச்சம் கூடாததானாலும் அறைவெளிச்சமுள்ள தாகவிருப்பது அவச்யம். அறை எப்பொழுதும் சுசியாயிருக்க வேண்டும். தூசி வெளிக்கிளம்பும்படி பெருக்கக்கூடாது. கூட்டுவதற்கு முன் அறை முழுவதும் சிறிது ஜலந் தெளித்துவிட்டு பின்பு கூட்டவேண்டும். இல்லாவிட்டால், துடைப்பத்தின் முனையில் ஈரத்துணியைச் சுற்றியாவது, நூலினால்செய்யப்பட்ட நனைந்த (கொச்சு) துடைப்பத்தினாலாவது அறையை விளக்க வேண்டும். சில துளிகள் பினைல் விடப்பட்டஜலத்தில் துடைப்பத்தை நனைப்பது உத்தமம். தரையில் பாய், ஜமக்காளங்கள் போடாமலிருப்பது நல்லது. அப்படிப் போட்டிருந்தால் அறையைப் பெருக்கபின் வருமாறுசெய்யவேண்டும். பழைய ந்யூஸ் பேபர்களை வரவழைத்து, மேற்கூறிய தண்ணீரில் நனைத்துப் பல துண்டுகளாக்கி அரைமுழுவதும் போட்டு ஒரு துடைப்பத்தால் அவைகளை புரட்டிப் புரட்டி ஒருமிக்கச் சேர்த்தால் பாய்களிற் படிந்துள்ள தும்பு தூசி மண் முதலானவை ஈரக்காகிதத்தோடு ஒட்டிக்கொண்டு வந்துவிடும். அறையும் சுத்தமாகும். நோயாளியறையில் எவ்விதமான திரைகளும் படுதாக்களும் இருக்கக்கூடாது. ஏனென்றால் அவை தூசி, தும்பு, மூட்டைப்பூச்சி, கொசு, பூச்சி முதலியவை தங்குமிடமாகும். அறையில் எவ்வளவுக்கெவ்வளவு நாற்காலி மேஜை முதலிய தட்டுமுட்டு ஸாமான்கள் குறைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அதிக காற்று நடமாட்ட மாயிருக்கும். ஆகவே அநாவச்யமான ஸாமான்களைக் கூடியமட்டும் ஒழிக்கப்பார்ப்பது நலம். ஜலமலம் வந்தும் பாத்திரங்களை கண்ணிற்குத் தென்படாமல் அடுத்த அறையிலாவது அறைக்கு வெளியிலாவது வைக்க வேண்டும்.

**படுக்கையும் படுக்கைத் துணிகளும்:**—படுக்கைத்துணிகள் நன்றாக ஸலவை செய்யப்பட்டவைகளாயிருப்பதுடன் அவைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டு வரவேண்டும். பஞ்சு மெத்தையைக்காட்டிலும் நார் மெத்தையே மேலானதென்று ஸாதாரணமாகக் கருதப்படுகிறது. நோயாளி படுக்கும் அடித்துணி கூடியமட்டும் மெதுவாகவே யிருக்கவேண்டும். போர்வை பளுவாயில்லாமல் உஷ்ணம் தரக்கூடியதாயிருப்பதவச்யம். மெல்லிய போர்வைகளும், கம்பளங்களும் ஸாதாரணமாகப் போதுமானவை. நோயாளிகள் தலையை மூடிக்கொண்டு தூங்கக்கூடாது. ஏனெனில், அவர் வெளிப்போக்கும் விஷக்காற்றையே மறுபடியும் உட்கொள்ளும்படி நேரும். ஒருநாளைக்கு இரண்டு தரமாவது படுக்கையைத் தட்டிப் போடவேண்டும். நோயாளிகள் எப்பொழுதும் மார்பு அல்லது இடுப்பு மட்டும் போர்வையைப் போர்த்துக்கொண்டு, தங்கள் கைகளைப்பக்கங்களில் தொங்கவிட்டுப்படுத்துக் கொள்ளவேண்டும். படுக்கையறையில் ஈரத்துணிகள் உலர்த்தலாகாது. அழுக்குத் துணிகளையும், வாந்தி, சீ, ரத்தம் முதலியபட்ட அஸங்க்யமான துணிகளையும் உடனே விலக்கவேண்டும் நோயாளிகளுடைய ஒரு ஆடையும், போர்வையும் வெயிலில் காய்ந்து கொண்டிருக்கவேண்டும். தலையணை உறைகளை தினந்தோறும் மாற்றிக்கொண்டுவரவேண்டும்,

படுக்கையில் சிலஸமயங்களில் ஒருபுறமாகப் படுத்துக்கொள்ளும்படி நேர்வதால் அந்தப் பக்கத்தில் ரணங்கள் உண்டாகின்றன. ஸாதாரணமாக அவை இடுப்புக்கு சற்று மேலாக உண்டாகின்றன. படுக்கைத்துணிகளை வெளுப்பாகவும், சுசியாகவும், ம்ருதுவாகவும் வைத்திருந்தால் ரணங்கள் வராதபடி தடுக்கலாம். வலி அதிகமாக இருந்தால் நோயாளியை மற்றொரு பக்கத்தில் சிறிது நேரம் படுக்கவைத்தால்

வலி சற்று நீங்கும். அல்லது வெந்நீரில் கொஞ்சம் சாராயம் அதாவது அல்கஹால் அல்லது விஸ்கி கலந்து துணியால், ஒருநாளைக்கு 4, 5, தரம் ஒத்தடங்கொடுத்தால் வலி நீங்கி ஸுகமுண்டாகும்.

**சீதோஷ்ண ஸ்திதி:**—நோயாளி யறையை அதிக குளிமையாகவும், அதிகஉஷ்ணமாகவும் வைத்திருக்கக்கூடாது. வைத்யர் கூறுகிற ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும். நோயாளிக்கு எவ்வளவு வெளிச்சம் வேண்டியிருக்கிறதோ அதற்குத் தக்கபடி ஜன்னல்களைத்திறந்து வைக்கவேண்டும். சிலர் நோயாளி அறையை எப்பொழுதும்மூடி இருட்டாக வைத்திருக்கிறார்கள். இது ஒரு பெரும்பிழை. வெளிச்சமானது தேகத்திற்கு உத்ஸாகத்தைக் கொடுக்கிறபடியால் அறையில் நல்ல வெளிச்சமிருப்பது அத்யாவச்யம். ஆனால் நோயாளியின்முகத்தில் மட்டும் காற்று அதிகமாக வீசாமல் பாதுகாக்க வேண்டும். நோயாளியின் சீதோஷ்ண ஸ்திதியை அப்போதைக்கப்போது தர்மாமிடரினால் எடுத்துக் குறித்துவைத்து வைத்யர் வந்தபோது அதை அவரிடத்தில் முதலில் காட்ட வேண்டும்.

**மருந்து கொடுத்தல்:**—நாம் முன் கூறியபடி ஒருவரே மருந்து கொடுப்பது நல்லது. மருந்து கொடுக்கும் முறையில் வைத்யர் சொல்லியதினின்றும் அணுக்கூட பிசகக் கூடாது. நோயாளியின் பெயரும், மருந்தின் அளவும், கொடுக்கும் நேரமும் புட்டியின்மேல் தெளிவாக எழுதப்படவேண்டும். ஒரு வீட்டில் இரண்டு மூன்று நோயாளிகளிருக்கும் போதும், ஒரு நோயாளிக்கே இரண்டு மூன்று 'நர்ஸ்' இருக்கும் போதும், இதைப் பின்னும் முக்யமாக கவனிக்கவேண்டும். ஸ்பூன்களையும் மருந்து அளக்கும் அளவை க்ளாஸ்களையும், தர்மாமிடரையும், சாப்பாட்டுப் பாத்ரங்களையும், உபயோகத்திற்கு முன்னும், பின்னும், நன்றாகக் கழுவவேண்டும். வைத்யர் இல்லாதஸமயத்தில் நடந்தவைகளைக் குறித்து வைத்திருந்து அவர் வந்தபோது காட்டவேண்டும். மலத்தின் தன்மையையும், மூத்ரத்தின் அளவையும் மறக்காமல் வைத்யரிடத்தில் சொல்லுவது முக்யம். வைத்யர் சொல்லியிருந்தாலொழிய தூங்கும் நோயாளியை மருந்து கொடுக்கவாவது ஆகாரங் கொடுக்கவாவது எழுப்பக்கூடாது.

**ஆகாரம்:**—ஆகாரத்தை இன்சொல்லுடன் செலுத்தவேண்டும். ஆகாரம் கொடுக்கும்போது, நோயளியை நம் மார்பின் மேலாவது உயர்ந்த தலையணைகளின் மேலாவது சார்த்தி, அவர்கழுத்தைச்சுற்றி ஓர் சிறிய சவுக்கத்தைப் போட்டுவைக்கவேண்டும். சர்க்கரை, ரொட்டித் துண்டங்கள் முதலியவை படுக்கையில் விழுந்தால் எறும்புகள் வருவதுடன் நோயாளிக்குப் படுக்கும்போது அஸௌகர்யத்தை உண்டாக்குவதால் அவை படுக்கையில் விழாதபடித் தவிர்க்கவேண்டும், சீக்ரம் சாப்பிடும்படி அவஸரப்படுத்தலாகாது. நோயாளிக்கு என்ன வேண்டுமென்று கேட்போமானால், அவர்கள் கண்டதின்பேரில் ஆசைகொண்டு உடம்பிற்கு ஆகாதவஸ்துக்களைக் கேழ்க்கத் தொடங்குவார்கள். நாம் மறுப்போமானால் பிடிவாதமாக நின்று வேறொன்றையும் உட்கொள்ளார். ஆகவே வைத்யர் நல்லது என்று சொல்லுகிறதையாவது, நோயாளிக்கு எதுபிடிக்குமென்று நமக்குத்தோற்றுகிறதோ அதையாவது சமைத்துக் கொடுக்கவேண்டும். கூடுமானால், ஆகாரத்தை அடிக்கடி மாற்றுவது நலம் காப்பி, பால், தண்ணீரில் மருந்து இவைகளைக் கொடுக்கும்போது தலையைச் சற்று நிமிர்த்துக் கொண்டு மூக்குவைத்த பாத்ரங்களையாவது கிண்டியையாவது உபயோகிக்கவேண்டும். இவை இல்லாவிட்டால் ஸ்பூனை உபயோகிக்கலாம். அதிகமாக எடுத்தால் சிந்திவிடுமாதலால் அரை

ஸ்பூன்களாக மெல்ல எடுத்து உபயோகிப்பது உசிதம்.

தேகஸ்திதி அதிக கேவலமாயிருக்கும் போது, நோயாளியைப்பார்க்கும்படி ஒருவரையும் விடக்கூடாது. பார்க்க வருபவர்களை நிர்தாக்ஷண்யமாக உள்ளே செல்லவிடாமலிருப்பது நோயாளி அறையிலிருப்பவரின் முக்ய கடமையாகும். வைத்யர் ஸம்மதித்தால் சிலரைமட்டும் விடலாம். நோயாளியைப் பார்க்கப் போகிறவர்களில் நல்ல எண்ணத்துடன் பார்க்கப்போகிறவர் சிலரேயாயினும் வேடிக்கையாகப் பார்க்கச் செல்வோர் அநேகம். நோயாளிகளுக்குத் தூக்கமும், ஒழிவும் மனஸ் ஸஞ்சலமின்மையும் இன்றியமையாதன. வந்தவர்களையெல்லாம் பார்ப்பதும் அவர்களுடன் பேசுவதும் நோயாளிகளுக்கு அருவருப்பை யுண்டாக்குகிறது. நோயாளியின் முதல் தூக்கத்தில் எவ்விதமான தொந்திரவும் நேராமல் பார்த்துக்கொள்வதவச்யம். முதல் தூக்கம் கெட்டுப்போனால் நோயாளி மறுபடியும் அன்று தூங்குவதரிது.

சுருங்கச் சொல்லின், நோயாளியின் படுக்கைத் துணிகள் சுசியாகவும், வெளுப்பாகவும் ம்ருதுவாகவு மிருக்கின்றவா வென்று பார்ப்பதும்; ஆகாரத்தைச் ஸரியானபடி சமைத்து அன்பு இன்சொலால் புகட்டுவதும்; ஆகாரத்தின் தன்மையையும், உட்கொண்ட அளவையும் நோக்கத்தையும் குறித்து வைப்பதும்; வைத்யர் கூறியபடி நோயாளியின் சீதோஷ்ண ஸ்திதியை தர்மாமீடரினால் கவனித்துக் குறித்து வைப்பதும். ஜலமலங்களை வைத்யர் வருமட்டும் பத்ரப்படுத்தி வைப்பதும் அல்லது அவைகளின் தன்மையையும் அளவையும் நிதானமாகக் குறித்துவைப்பதும்; நோயாளி தூங்கும் நேரங்களையும், அவர் உபயோகிக்கும் வார்த்தைகளையும், அவர்கள் முகங்களில் அப்போதைக்கப்போது தோற்றும் மாறுதல்களையும், அவர் மொத்த நடவடிக்கைகளையும் வெகு ஜாக்ரதையாக கவனிப்பதும்; படுக்கையறையில் நோயாளிகளைப் பாதுகாப்பவருடைய முக்யகடமைகளாகும். மேற்கூறியவைகளை நன்ருக கவனித்து அதன்படி நடக்கும்பக்ஷத்தில் நோயாளி சீக்ரம் வ்யாதிதீர்ந்து ஆரோக்ய மடையத் தடையில்லை.

மருந்து கொடுப்பதற்கு வைத்யரும், மருந்து விற்பதற்குக் கடைக்காரனும், நோயாளிகளைப் பாதுகாக்க 'நர்ஸ்' போன்றவர்களும், கொடுப்பதையும், விற்பதையும், பாதுகாப்பதையும், முறையே 'பிழைக்கும் வழி' யாகக் கொண்டிருக்கிறுர்கள். தக்க ஸமயத்தில் ஜாக்ரதை எடுத்துக்கொண்டு மேற்கூறியவைகளை ஒட்டி நடப்பது மரணத்தினின்றுந் தப்பிப் 'பிழைக்கும்வழி யாகும். மேலும் நம் நோயாளிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை நாமே மேற்கொண்டு நாளொன்றிற்கு நர்ஸ் முதலியவர்களுக்குக் கொடுக்கும் 10, 15 ரூபாய்களைச் சேர்த்தும் (நர்ஸ்மார்களை முற்றும் தவிர்க்கவேண்டுமென்பது எம் அபிப்ராயமில்லை), அதுபோன்ற அதிகப்படி செலவுகளை விலக்கிச் சிக்கனமாக ஜீவிப்போமானுல் அதுவே, வ்யாதியும், பஞ்சமும் எங்குங் குடிகொண்ட இக்கொடியகாலத்தில் 'பிழைக்கும் வழி' யாகுமென்பதற்கு ஐயமில்லை.

எஸ். எம். க்ருஷ்ணஸாமி.

---

## GREEN MANURE.

### பசுந்தாள் உரம்.

இங்க்லாந்திலும் மற்ற மேல் நாடுகளிலும் செயற்கை உரங்களை ரொம்பவும் அதிகமாக உபயோகிப்பதுபோல இந்திய விவஸாயிகளும் செயற்கை உரங்களை தாராளமாய் வாங்கி உபயோகிக்கும்படியாக அவர்களுடைய நிலைமை அவ்வளவு வ்ருத்தியாகிவிடவில்லை. இந்திய விவஸாயிகள் அனுஷ்டிக்கக்கூடிய ஸுலப

மான வழியென்னவென்றால், தமது நிலங்களில் கோதுப் பயிர்களை பயிர்செய்து ஸரியானகாலத்தில் பூமியில் மடித்து உழுதுவிடுவதே. ஆனால் இவர்கள் இப்படிச் செய்வதில் சில ஸமயம் நல்லபலன் கிடைக்காமல் ஏமாந்து போகும்படி நேரிடுமாதலால் இந்தப் பசுந்தாளுரம் ஸம்பந்தமாய் இரண்டொரு விஷயம் கவனிக்கத்தக்கது.

முதலாவது, பூமியில் பயிர்செய்து உண்டாக்கும் தழை எருவில் உள்ள பொடாஷூம் பாஸ்பாரிக் ஆஸிடும், பூமியிலிருந்தே அதற்குக் கிடைத்திருக்கின்றன. ஆதலால், அந்த எருவை மறுபடியும் பூமியில் போடுவதால் பொடாஷூம் பாஸ்பாரிக் ஆஸிடும், முன்னிருந்தபடியே இருப்பதன்றி அதிகரிப்பதில்லை. பசுந்தாள் பயிர்செய்வதால் பூமியிலுள்ள பொடாஷூம் பாஸ்பாரிக் ஆஸிடும் ஷை பயிரால் க்ரகிக்கப்பட்டு, மறுபடியும் பூமிக்குள் சேர்க்கப்படுகின்றன. ஆனால் மேற்சொன்ன இரண்டு வஸ்துக்களும் பிறகு விளைவிக்கப்படும் பயிர் ஸுலபமாய் க்ரகித்துக் கொள்ளும் நிலைமையை அடைகின்றன. நிலத்துக்கு பசுந்தாள் உரம் இடுவதால், நெல் மாஸுல் அதிகமாய்க் கிடைக்கிறது. அந்த நெல் மூலமாய் ஸாதாரண ஸாகுபடியில் நேரிடுகிறதைதவிட ரொம்ப பாகம் பாஸ்பாரிக் ஆஸிடும் பொடாஷூம் பூமியைவிட்டு வெளியே போய் விடுகின்றன. இதனால் பூமியானது இந்த இரண்டு பயிருணவு ஸம்பந்தப்பட்ட மட்டில் செழுமைக் குறைவடைகிறது. ஆகையால் ஷை பயிருணவுகளை காலக்ரமத்தில் பூமியில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு, பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாயுள்ள ஸூபர்பாஸ்பேட், எலும்புத்தூள் முதலிய எருக்களையும், பொடாஷ் அதிகமாயுள்ள மரச் சாம்பல், ஸல்பேட் அப் பொடாஷ் முதலிய எருக்களையும், அப்போதைக்கப்போது நிலத்திற்கிடுவது மிகவும் ச்லாக்யமானமுறை. நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதென்னவென்றால், பசுந்தாள் உரமானது எல்லாப் பயிருணவும் அதிகமாயுள்ள பூர்த்தியான உரமல்ல. பசுந்தாள் உரத்தால் நிலத்தில் நைட்ரொஜனும் ஹ்யூமஸ் என்று சொல்லப்படும் இந்த்ரிய வஸ்துவுந்தான் அதிகமாகின்றன.

பசுந்தாள் உரம் ஸம்பந்தமாய் இன்னொரு விஷயம் என்னவென்றால், பசுந்தாள் பயிர், ரொம்பநாள் ஆகிவிட்டால், முற்றி மரமாகி அஸொடோபாக்டர் என்று சொல்லப்படும் விளைவுக்கு ஆதாரமான முச்யபாக்டீரியாவுக்கு ஏற்ற உணவாக ஆவதில்லை. ஆனால் முக்கியமாய் பசுந்தாள் பொருளிலும் அதற்கு அடுத்தபடியாக வேர்களிலும், வைக்கோலிலும் பாக்டீரியா எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு ஸுலபமாய் மாறக்கூடிய வஸ்துக்கள் அதிகம் இருக்கின்றன.

எல்லா வஸ்துக்களையும்விட பசுந்தாள் பயிரே பாக்டீரியா வ்ருத்தியடைவதற்கு ரொம்பவும் ஏற்றது. பசுமையானபொருளில் தான் ஏற்ற அளவில் பாக்டீரியாவின் உணவாக கார்போஹைட்ரேட்டும் சர்க்கரைப் பொருள்நைட்ரொஜனும்இருக்கின்றன. மேலும் கார்போஹைட்ரேட்டுகளும், பாக்டீரியாவிலேயேயுள்ள என்ஸைம் என்னும் ஸூக்ஷ்மப் பொருளால் ஸுலபமாய் மாற்றப்படக்கூடிய தன்மையிலிருக்கின்றன. ஆகையினால் நிலத்திற்குப் பசுந்தாளுரமிடுவதால், பாக்டீரியா சுறுசுறுப்பாய் வேலைசெய்யும்படி தூண்டப்படுகிறது. நமது தேகத்தில் ச்வாஸம் விடும் போது உண்டாகும் மாறுபாடுபோல அங்கும் ஒருமாறுபாடு உண்டாகிறது. பூமியின் உஷ்ணம் அதிகரிக்கிறது. கரியமிலவாயு அதிகமாய் உண்டாவதால் பூமி இளகல் அடைகிறதுமன்றி, அது ஜலத்தோடு ஸம்பந்தப்

பட்டு, கரையாதபாஸ் பேட்களையும் ஸெலிகேட்டு களையும் உடைந்து தூளாகும்படி செய்வதில் உதவி செய்கிறது.

---

## SCHOOL BOOKS THAT RUIN EYESIGHT.

### கண்ணைக் கெடுக்கும் பாடப் புஸ்தகங்கள்.

தற்காலம் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களில் அநேகருடைய பார்வையானது கெடுதலடைந்து கண்ணுக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளும்படி நேரிடுகிறது. இப்படிக் கண்பார்வை கெடுதலடைவதற்குப் பல காரணங்கள் உண்டு. மிகச்சிறிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கும் ரெய்னால்ட்ஸ் கதைப் புஸ்தகங்கள் போன்ற புஸ்தகங்களை வெகுநேரம் வாசிப்பதும், மாலை வேளையில் கையெழுத்து மறைந்து கொண்டிருக்கையில் வாசிக்கத் தொடங்கி ஸாலபமாய் வாசிக்க முடியாமல் அவ்வளவு இருட்டியுங் கூட கண்ணை இருத்துக் கொண்டு வாசிப்பதும், ப்ரகாசமில்லாத நிலவு வெளிச்சத்தில் வாசிப்பதும், வண்டியில் ப்ரயாணம் செய்யும்போதும், நடந்து செல்லும் போதும் கையில் புஸ்தகம், கடிதம் முதலியவைகளைப் பிடித்துக்கொண்டு, அவைகள் அசைய, பார்க்க முடியாமல் கஷ்டப்பட்டுப் பார்ப்பதும், ஆகிய இவையும், இன்னும் இவை போன்றவைகளும் கண் பார்வையைக் கெடுக்கக்கூடியவை. தவிர, ஸூர்ய வெளிச்சம் எழுத்துக்களின்மேல் படுதல், விளக்கு வெளிச்சம் காற்றினால் அசைந்து கொண்டிருக்கும்போது வாசித்தல், ஸூர்யனை உற்றுப்பார்க்க முயலுதல், மிகவும் ப்ரகாசமானவும், பளபளப்பானவுமான பொருள்களைப்பார்த்தல், ஆகிய இவைகளும் கண்ணைக் கெடுக்கக் கூடியவைகள். சிறுவர்களுடைய பார்வை கெடுதலடையாமலிருக்கும்படி ஆரம்பத்திலேயே வேண்டிய முன் ஜாக்ரதை செய்யவேண்டியது ரொம்பவும் அவச்யமானது. இங்கிலாந்திலேயுள்ள ப்ரிட்டிஷ் சாஸ்த்ர அபிவ்ருத்தி ஸங்கத்தார் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுடைய கண்களுக்குக் கெடுதி நேரிடுவதைக்குறித்து ஸமீபத்தில் சில ஆராய்ச்சிகள் செய்தார்கள். அவர்களுடைய ரிபோர்ட்டு இப்பொழுது வெளியாயிருக்கிறது. அந்தக் கமிட்டியார் செய்த முடிவென்னவென்றால், பள்ளிக்கூடச் சிறுவர்களுடைய கண்பார்வை ரொம்பவும் கெடுதல் அடைந்து வருகிறது. அப்படிக் கெடுதலடைவதற்கு பிள்ளைகள் படிக்கும் புஸ்தகங்கள் கொஞ்சம் காரணமாயிருக்கின்றன என்கிறார்கள். அதற்குப் பரிகாரமாகப் பின் வருமாறு சொல்லுகிறார்கள். ஒரு குறித்த ஒப்புக் கொள்ளப்பட்ட லக்ஷணங்களுடன் அச்சிடப்பட்ட புஸ்தகங்களை உபயோகிக்கவேண்டும்; அந்த ஒப்புக்கொள்ளப்பட்ட லக்ஷணங்கள் குறைவாக இருக்கும்படி அச்சிடப்பட்ட புஸ்தகங்களை பிள்ளைகள் வாசிக்கக்கூடாதபடி சட்டவிதிகளால் தடுத்தோ, அல்லது வேறு விதமாய் அவைகளை நீக்கியோ விடவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் வாசிக்கத் தொடங்கும் காலத்தில் பிள்ளைகளின் கண் அவயவம் நன்றாய் வளர்ச்சியடையாமல் இருக்கிறது. கண்குழிவு, இன்னம் பெரியதாகவேண்டும். கண்ணை இன்னம் வளர்ச்சியடைய வேண்டும். கண் அசைவதை ஒழுங்குபடுத்தும் தசைநார்களும், நரம்புகளும், இன்னம் ரொம்பப் பெரியவையாகவேண்டும். இவைகளோடு ஸம்பந்தப்பட்ட மூளை பாகங்களும் இன்னம் வளர்ச்சியடைய வேண்டியதோடு கூட, ஸூக்ஷ்மமான யந்த்ர சக்தியுள்ளதாக ஆகவேண்டும். கண்ணும், மூளையும், கையும் ஒத்து வேலை செய்வது ஸாத்மாகும்படி ஏற்படுவது பழக்கத்தால் பிற்காலத்தில் ஏற்படவேண்டும், சிறுவர்களுடைய கூர்மையான

பார்வை இன்னம் பூர்த்தியடையாமல் இருக்கிறது. சுருங்கச் சொல்லுமிடத்தில் கண் அவயவம் முழுவதும் பூர்த்தியான வளர்ச்சியடையாமல் இருப்பதால் அந்த அவயவத்தை அதிகமாக உபயோகப்படுத்துவதால் அதிகம் கெடுதலடைய இடமுண்டாகிறது. வாசித்தல், எழுதுதல், தையல் வேலை ஆகிய இவை போன்ற வேலைகளில் தான் கண்ணுக்கு அதிக வேலை ஏற்படுகிறது. தூரத்திலிருக்கும் வஸ்துக்களைப் பார்ப்பதில் அதிக ச்ரமம் உண்டாவதில்லை. கிட்டவுள்ள வஸ்துக்களைப்பார்க்கும் போது தலையானது முன்பக்கத்தில் வளைகிறது. கண்ணில் உள்ள ரக்தாசயங்களில் ரொம்ப ரக்தம் சேருகிறது. வாசிக்கும் போது ஒவ்வொரு எழுத்தும், வார்த்தையும் பார்க்கும்போது, கண்களை ஸதா அங்குமிங்கும் மாற்றிக்கொண்டே யிருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே கிட்டத்திலுள்ளவற்றைப் பார்ப்பதில்தான் கண்ணுக்கு ரொம்ப வேலை ஏற்படுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு வஸ்துக்கள் ஸமீபத்தில் இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு கண்ணுக்கு ச்ரமம் அதிகமாகிறது. மேலும் ஸமீபத்திலுள்ளவைகளைப் பார்ப்பதில் மனவிற்கும் இடைவிடாத வேலையும் ஏற்படுகிறது.

சிறுவர்களின் பார்வை ஸம்பந்தமாய் அநேக ஸங்கதிகள் கவனிக்க வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூட அறைகளில் வெளிச்சம் எவ்வளவு இருக்கிறதென்பது; டெஸ்குகள் (மேஜை) எப்படி வைக்கப்பட்டிருக்கின்றன? ஒவ்வொரு டெஸ்கும் என்னமாதிரி ரூபத்திலும் அளவிலும் செய்யப்பட்டிருக்கிறது; மாணவர்கள் உட்கார்ந்து வாசிக்கும் நிலைமை என்ன? அவர்கள் வாசிக்க வேண்டிய அல்லது எழுத வேண்டியவற்றின் அளவு (அதாவது அவர்கள் கண்களுக்கு ஏற்படும் வேலையின் அளவு) முதலியவைகளை கவனிக்கவேண்டியது ரொம்பவும் முக்யம். ஆனால் ஷை கமிட்டியார் ரொம்ப முக்யமானவைகளில் ஒன்றாகிய புஸ்தக லக்ஷணம் இன்னவிதமாக இருக்கவேண்டும் என்பதை மாத்ரம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் பின்வருமாறு அபிப்ராயப்படுகிறார்கள். புஸ்தகத்திலுள்ள எழுத்துகள் ரொம்ப சிறியவையாக இருந்தால் சிறு பையன்கள் புஸ்தகத்தை ரொம்பச்ரமத்துடன் பார்க்க வேண்டியிருக்கும். அவர்களுக்கு வார்த்தைகளின் ரூபங்களில் இன்னம் நன்றாய்ப் பழக்கம் ஏற்படவில்லை. கண்பார்வை இன்னம் பூரா தீக்ஷண்யத்தை யடையவில்லை. பார்ப்பவர்களுடைய கண்களில் பார்க்கும் எழுத்துகள் அல்லது வஸ்துக்களுடைய உருவம் தோன்றுகிறது. பிள்ளைகள் நன்றாயும் ஸுலபமாயும் பார்ப்பதற்கு பெரியவர்களுடைய கண்களில் தோன்றும் உருவத்தைவிடப் பெரியதான உருவம் அந்தப் பிள்ளைகளுடைய கண்களில் உண்டாகவேண்டும். அப்படி உண்டாவதற்கு சிறுவர்கள் புஸ்தகத்தைக் கண்ணின் பக்கத்தில்கொண்டு போகிறார்கள்; அல்லது கண்ணைப் புஸ்தகத்தின் அருகில் கொண்டு வருகிறார்கள். ஆகையால் பிள்ளைகளின் வயஸுகளை அனுஸரித்து, பள்ளிக்கூடப் புஸ்தகங்களின் எழுத்துக்கள் இவ்வளவு தெளிவாயிருக்க வேண்டுமென்று ஒரு திட்டம் ஏற்படுத்தி, இந்த திட்டத்தை யனுஸரித்து அச்சிடப்பட்ட புஸ்தகங்களை உபயோகிக்கும்படி செய்யவேண்டியது அவச்யமாகிறது.

பிள்ளைகள் எந்த வயஸுமுதல் புஸ்தகத்தை உபயோகிக்க வேண்டியது? தேக ஆரோக்யத்தை உத்தேசித்து எவ்வளவுக் கெவ்வளவு தாமஸித்து புஸ்தகங்களை சிறுவர்கள் உபயோகிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. குறைந்தது ஏழுவயஸுவரையில் சிறுவர்கள் புஸ்தகத்தை உபயோகிக்

காமலிருப்பதால் கல்வி விஷயமாய் அதிகம் நஷ்டம் ஏற்படுவதில்லை என்று தாராளமாய்ச் சொல்லலாம். சிறுவர்களுக்கு சுவரில் தொங்க விடக்கூடிய பெரிய படங்களைக் கொண்டு வாசிக்கக்கற்பிக்கலாம். ஸாதாரணமாய் கற்பிக்கும் விஷயங்களையும் வாய்மொழியாக, கருப்புப் பலகை, பெரிய சுவர்ப்படங்கள், சித்ரப் படங்கள், தூரத்திலிருந்து பார்க்கக்கூடிய வேறு வஸ்துக்கள் ஆகிய இவற்றைக்கொண்டு கற்பிப்பது நல்லது. ஏனென்றால் இந்த முறையினால் சிறுவர்களுடைய கண்களுக்கு ச்ரமம் ஏற்படுவதில்லை.

இன்னம் கமிட்டி செய்யும் யோசனைகளாவன:—கடிதம் ப்ரகாசமாயில்லாமல், கெட்டியாகவும், வழவழப்பாகவும், பின்பக்கம் அச்சிட்டிருப்பது தெரியாமலும் இருக்கவேண்டும். சித்ர படங்களில் அநேக விஷயங்கள் கலக்காமலும் ஸுலபமானவையாயும் இருக்கவேண்டும். கருப்பு மை உபயோகிக்கவேண்டும். ஒருபக்கத்தில் இரண்டு பத்தியாய் அச்சிட்டிருக்கக்கூடாது. எழுத்துக்களில் ஸன்னக்கோடுகளும் கெட்டிக் கோடுகளுக்கும் அதிக வித்யாஸ மிருக்கக்கூடாது.

பின்பு இங்க்லீஷ் எழுத்துக்களின் அச்சுக்களைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ஒன்றைப் போலவே மற்ற எழுத்துக்கள் இராதபடி அச்சுகள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். எழுத்துக்கள் உயர்ந்திருப்பதைவிட அகலமாயும், சதுரமாயும் இருப்பது நல்லது. போதுமான அகலமில்லாமல் உயரம் அதிகமாய் இருப்பதனால் மாத்ரம் எழுத்துக்களை ஸுலபமாய் வாசிக்க ஸௌகர்யமேற்படாது. ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியே தெரியும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவேண்டும். எழுத்துக்கள் மேல் பக்கத்திலாவது அடிப்பக்கத்திலாவது சேர்ந்திருப்பதுபோல் தோன்றும்படி எழுத்துக்களை பக்கவாட்டில் நீட்டிவிடக்கூடாது.

புஸ்தகத்தில் உபயோகிக்கும் எழுத்துக்களின் அளவைத்தான் ரொம்பவும் கவனிக்கவேண்டும். எழுத்துக்கள் வாசிக்க முடியும்படி தெளிவாயிருப்பது என்பது, சிறிய எழுத்துக்களினுடைய உயரத்தையும் அகலத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. எழுத்து எவ்வளவு பெரியதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு கண்களை தூரவைத்துக் கொண்டு வாசிக்கலாம். சிறுவர்களுடைய கண்களுக்கும் புஸ்தகத்துக்கும் போதுமான அளவுதூரம் இருக்கும்படி சிறுவர்களைப் புஸ்தகத்தைப் பிடித்துக்கொள்ளச் சொல்லவேண்டும். ஏழுவயஸுக்குக்குறைந்த சிறுவர்கள் தங்களுடைய பெஞ்ச் முதலியவைகளில் பின்னால் சாய்ந்து கொண்டு டெஸ்கில் தூரத்தில் சாய்த்து வைத்திருக்கும் புஸ்தகத்தை ச்ரமமில்லாமல் பார்க்கும்படி புஸ்தகம் அச்சிடப்பட்டிருக்கவேண்டும். எப்பொழுதும் புஸ்தகம் ரொம்ப பெரியதாகவாவது ரொம்ப கனமாயாவது இருக்கக்கூடாது.

கமிட்டியார் அந்தந்த வயஸுக்கு உசிதமென்று சொல்லும் இங்க்லீஷ் எழுத்துக்களின் அளவுகளை கீழே அச்சிட்டிருக்கிறோம்.

# This type is for children under seven years.

இந்த அளவு அச்செழுத்து ஏழுவயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு ஏற்றது.

## This type is to be read by children from seven to eight years old.

7 முதல் 8 வயதுள்ள சிறுவர்களுக்கு ஏற்ற அச்செழுத்து.

This type is suitable for books to be read by children from eight to nine years of age.

8 - முதல் 9-வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு ஏற்ற அச்செழுத்து.

This type is the smallest suitable for books intended for readers from nine to twelve years old.

9 - முதல் 12-வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு ஏற்ற அச்செழுத்து.

This type is suitable in size for books intended for practised readers over twelve years old.

12-வயதுக்கு மேற்பட்ட வயதுள்ள வாசிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு ஏற்ற அச்செழுத்து.

தமிழில் பைக்கா அதாவது இந்த வ்யாஸம் அச்சிட்டிருக்கும் டைப்புக்குக் குறைந்தால் பையன்கள் வாசிப்பதற்கு ஏற்றதல்ல என்று தோன்றுகிறது.

---

## MAHADEVA GOVINDA RANADE.

### மகாதேவ கோவிந்த ரானடே.

மகாதேவ கோவிந்த ரானடே ஒரு உயர்ந்த மகாராஷ்ட்ர வம்சத்தில் பிறந்தவர். அந்த வம்சத்தாரில் சிலர் சிலகாலத்திற்குமுன் மேல் இந்தியாவில் அரசாண்டுவந்த பீஷ்வாக்களின் அரண்மனையில் வேலையிலிருந்தார்கள். ரானடேயின் பெரிய பாட்டனார் அப்பாஜி பண்ட் என்பவர் பீஷ்வாக்களின் ராஜதானியாகிய பூனாவில் ஸாங்க்லி ஸமஸ்தானத்தின் ப்ரதிநிதியாக இருந்து வந்தார். ரானடேயின் பாட்டனார் பூனா ஜில்லாவில் ஒரு மாம்லதாராக (தாசில்தார்) இருந்தார், அவருடைய தகப்பனார் நாஸிக் ஜில்லாவில் நிபாதின் மாம்லதாருக்கு ஹெட்க்ளர்க்காக வேலை பார்த்துவந்தார்.

ஆகவே, ராணடே அதிக செல்வமும், தரித்ரமும்மில்லாத ஸாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். உலக கார்யங்களில் உண்மையாய் உழைப்பதற்கு இந்த வகுப்பாருக்கு உள்ள ஸௌகர்யங்கள் யாவருக்கும் தெரிந்தவையே. ஜீவனத்துக்கு ப்ராணனைக்கொடுத்து ஸம்பாதிக்கும் படியான அவ்வளவு தரித்ர தெசையிலில்லை. செல்வான்களுக்கு அல்பகுணமும், ஆத்ம ஸுகத்திலேயே மூழ்கிக் கிடக்குந் தன்மையும்உண்டாகி அவைகளுக்கு ஆளாவதுபோல இந்த மத்யதர வகுப்பார்களுக்கு நேரிடுவதில்லை. அவர்களுக்கும் வேண்டிய அளவு கஷ்டங்களும் துக்கங்களும் நேரிடுவதால், ஏழைகளும், கல்வியறிவில்லாதவர்களும் படும் கஷ்டங்களையும், பணக்காரர்களுடைய குற்றம் குறைகளையும் கண்டு அனுதாபப்படும் குணம் இருந்து கொண்டே வருகிறது.

தமது முன்னோர்களுடைய மேலான ராஜீய ஐதீகங்கள் ரானடேயினிடத்திலும் பொருந்தியிருந்தது ஒரு நல்ல விஷயந்தான். ஐயம் பெற்ற அன்பர்களுடைய அபிப்ராயம் எப்படியிருந்தாலும், குழப்பமாய்க்கிடந்த இந்திய ராஜ்யங்களை ஒன்று சேர்க்க மகாராஷ்டர் முயற்சித்தது, இப்பவும் பூனா ப்ராமணனுடைய ஸ்வதேசாபிமானத்தைக் கிளப்பிவிடக்கூடிய தென்பதில் ஸந்தேகமேயில்லை. தேசகார்யங்கள் மாத்ரம் ப்ரதிகூலமாயிருந்திராவிட்டால், மகா ராஷ்ட்ரர்கள் மேல்நாட்டாரை லகுவில் விட்டிருக்கமாட்டார்கள். ரானடே பிற்காலம் ராஜங்க விஷயங்களில் தலையிட்டுக்கொண்டதற்குக் காரணம் மகாராஷ்ட்ரர்களுடைய ஜனநிர்மாண முறையை அறிந்திருந்ததனால் உண்டான மனக்கிளர்ச்சியே என்று சொல்லுவது வீண் கற்பனையாகாது. மகாதேவராவ் அவர்கள் 1842-ம் வருஷம் ஜனவரிமீ 18-தேதியன்று ஜனனமானார். கிட்டத்தட்ட 11-வயஸானபிறகுதான் இங்கிலீஷ் வாசிக்கத் தொடங்கினார். இதற்குமுன்னால் அவர் தேசபாஷைப்



பள்ளிக்கூடத்தில் வாசித்தார். அங்கே அவர் மகாராஷ்ட்ரபாஷையில் ரொம்ப ப்ரியம் கொள்ளத் தொடங்கினர். பிற்காலம் அவர் ரொம்ப ப்ரியமாய்க் கொண்டிருந்த கருத்துகளில் சில அவர் ஸொந்த பாஷைப் படிப்பினலே தான் உண்டாயின அவருடைய பாஷா க்ரந்தங்களில் ரொம்ப ப்ரீதியுண்டென்பதற்கு உதாரண மாக ஒருவிசேஷ ஸம்பவத்தைக் கூறலாம். 1897-ம் வருஷம் அம்ரோடி காங்ரெஸிலிருந்து அவரும் மிஸ்டர் கோகலேயும் திரும்பி வந்தபோது துகாராமுடைய பாட்டு ஒன்றைப் பாடி மிஸ்டர் கோகலேயின் மனஸைக் கிளப்பி விட்டார். கோகலே சொல்லுகிருர்: "குரலானது ஸங்கீதக் குரலாயில்லை. ஆனல் அவர் பாடியது ரொம்ப உருக்கமாகவும் பக்தியாயும் இருந்ததால் என்தேகமுழுவதும் சிலிர்த்துவிட்டது"

1851-ம் வருஷத்தில் கோலாபூர் ஹைஸ்கூலில் சேர்ந்து வாசிக்கலானர். 1856-ம் வருஷம் வரையில் அந்தப் பள்ளிக்கூடத்திலேயே

யிருந்தார். பிறகு எல்பின்ஸ்டன் வித்யாசாலையில் (இப்பொழுது எல்பின்ஸ்டன் காலேஜ்) போய்ச்சேர்ந்தார். அங்கே, ஸர் அலக்ஸாண்டர் க்ராண்ட்போன்ற ப்ரபல ஆசிரியர்களின் சேர்க்கை அவருக்குக் கிடைத்தது. அங்கேதான் அவருடைய விசேஷமான கல்விப் பயிற்சி ஆரம்பமாகத் தொடங்கிற்று.

அவர் மாணுக்கராயிருந்தபோதும், பிறகு தமது காலேஜில் ஸகாவாகவும், ப்ரொபஸராகவும், இருந்தபோதும், அவர் படித்த விதத்தைப்பற்றி அநேகம் கதைகள் சொல்லப்படுகின்றன. ஒரு ஸமயம், நீண்ட விடுமுறைகாலத்தில் (வெகேஷன்) அவர் காலேஜ் லைப்ரெரி (புஸ்தகசாலை) யிலுள்ள சரித்ர புஸ்தகங்களையெல்லாம் ரொம்ப கவனமாய் வாசித்தாராம். அவருக்கு தேசசரித்ரத்திலும், அர்த்த (சாஸ்த்ரத்திலும் பொருளாதார சாஸ்தரப்) விசேஷ ப்ரியம் உண்டு. ஆனல் அவர் அந்த விதமான புஸ்தகங்களை மாத்ரம் வாசித்துக்கொண்டிருக்கவில்லை. அவர் சாஸ்த்ரம், (ஸயன்ஸ்) தத்வசாஸ்த்ரம், நாடகம், இன்னம் மற்ற விஷயங்களைப்பற்றியும் வாசித்துவந்தார். அவருக்கு இங்க்லீஷ் காவ்யங்களில் விசேஷப்ரியம் கிடையாது. அவருடைய கல்வியறிவு விஷயமாய் பொதுஜனங்கள் சொல்லுவதைப்பற்றி அவர் சொல்லுவதாவது: "இதுவிஷயத்தில் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லை. கல்விப்பயிற்சி பெறுவதில் எனக்கு ஸௌகர்யங்கள் ஏற்பட்டதுபோல் சிலருக்குத்தான் அமைகிறது. ஸர் அலெக்ஸாண்டர் க்ராண்ட் எனக்கு ஆசிரியராயிருந்தார், நான் எனது கல்வியறிவை அபிவிருத்திசெய்வதில் அவர் எனக்கு ரொம்ப உதவியாயிருந்தார். தற்காலத்து மாணுக்கர்களுக்கு அப்படிப்பட்ட நல்ல உபாத்யாயர்கள் கிடைப்பதில்லை. ஆகையால் அவர்கள் நல்ல படிப்பாளிகளாவதில்லை."

ஸர் அலெக்ஸாண்டர் க்ராண்ட் தமது மாணவரிடத்திலுள்ள நல்ல குணங்களைத்தெரிந்துகொண்டதாக காட்டிக்கொண்டாலும் அவர் பள்ளிக்கூட ஒழுங்கு விஷயத்தில் ரொம்ப கண்டிப்பாயிருப்பவர். சிறிய பையனக இருந்தபோது தேசாபிமானம் அதிகமாயிருந்ததால், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டையும் மகாராஷ்ட்ர அரசாட்சியையும் ஒத்திட்டு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டை தூஷிக்கலானர். இதனல் ஸர் அலெக்ஸாண்டர் அவரைக்கூப்பிட்டு அவருடைய அபிப்ராயம் தவறு என்பதை எடுத்துக்காட்டி, பின்னும் "சிறுவனே, உனக்கு கல்வி பயிற்றுவித்து உன் தேசத்தாருக்கு எவ்வளவோ நன்மை செய்துவரும் ஒரு கவர்ன்மெண்டை நீ தூஷித்துப் பேசக்கூடாது" என்று சொல்லி, தமது அத்ருப்தியைக் காட்டவேண்டி அவருடைய ஸ்காலர்ஷிப்பை (உபகாரச் சம்பளம்) 6-மாஸம் நிறுத்திவிட்டார்.

இவர் காலேஜில் ரொம்ப ஊக்கத்துடனும், ச்ரத்தையுடனும் இருந்ததற்கேற்ப அவர் தக்கபடி பரீக்ஷைகளிலும் தேறினர். அவர் 1862 வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் முதல்வகுப்பில் தேறினர். 1865-ம் வருஷம் எம். ஏ. பட்டம் பெற்றுர். ஸர்வ கலாசாலையின் ஒரு ஸகாவாக நியமிக்கப்பட்டார். அடுத்த வருஷம் அவர் எல். எல். பி. பரீக்ஷையில் தேறினர்.

முதலில் வித்யா இலாகாவில் மராட்டி பாஷை மொழிபெயர்ப்பவராக வேலையிலமர்ந்தார். பிறகு தமது ஸ்வதேசமாகிய கோலாபூர் ஸமஸ்தானத்தில் அகால்கோட்டில் கார்பாரியாக நியமிக்கப்பட்டார். பிறகு தாம் வாசித்த காலேஜாகிய எல்பின்ஸ்டன் காலேஜில் இங்க்லிஷ் இலக்கிய ஆசிரியராக (ப்ரொபஸர்) நியமிக்கப்பட்டர். அவர் தாம் அமர்ந்துள்ள தொழிலை ரொம்ப ஸாமர்த்யமாக நடத்தினதாலும், அவர் வகுப்பில் செய்த ப்ரஸங்கங்கள் ரொம்ப நேர்த்தியாயிருந்ததாலும், அந்தக் காலேஜில் இருந்த வேறு ஐரோப்பிய ப்ரொப

ஸர்கள் வந்து அவருடைய ப்ரஸங்கங்களை (அதாவது பாடம் சொல்லிக்கொடுப்பதை) க்கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம் என்று சொல்லப்படுகிறது. வித்யா இலாகாவில் அவர் ரொம்பகாலம் இருக்கவில்லை. ரொம்ப ஆசை கொள்வதற்கும், அந்த ஆசை நிறைவேறுவதற்கும், சட்ட உத்யோகத்தில் அதிக இடம் இருப்பதாலும் ஜனங்களுக்கு உபகாரம் செய்வதற்கு வேண்டிய ஸங்கர்ப்பங்கள் ரொம்ப இருப்பதாலும், அது அவர் மனஸைக் கவர்ந்தது. மேன்மையோடு விளங்கும் அநேக சிறுவர்கள் இவருக்கு முன்னும் பின்னும் செய்திருப்பது போலவே இவரும் சட்ட உத்யோகத்தின் மகிமைக்கு ஈடுபட்டவராய் அந்த உத்யோகத்தில் சேர்ந்துகொண்டார்.

அவர் ரொம்ப ஸாமர்த்யசாலியாகவும், உழைப்பாளியாகவும் இருந்ததால் அவர் தமது உத்யோகத்தில் சீக்ரம் உயர்ந்த பதவிகளுக்குப் போனது ஒரு ஆச்சர்யமல்ல. முதலில் ஹைகோர்ட்டில் ரிபோர்ட்டராயும், பிறகு ஸப்ஜட்ஜ்; ப்ரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்; பூனா ஸ்மால்காஸ் கோர்ட்டில் ஜட்ஜ்; அக்ரிகல் சரிஸ்ட்ஸ் ரிலீப் ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல் ஜட்ஜ் ஆகிய இந்த வேலைகளை முறையே பார்த்து பின்பு, இந்தியர்கள் ஸர்க்கார் உத்யோகத்தில் அடையக்கூடிய, இதற்கு மேல்பட்டது இல்லை யென்று சொல்லத்தகும் உன்னத பதிவியாகிய ஹைகோர்ட் ஜட்ஜ்வேலையை அடைந்தார். இப்பொழுது கவர்னர்களுடையவும், வைஸராயினுடையவும் நிர்வாக ஸபையில் இந்தியர்களுக்கு உத்யோகம் கொடுக்கப்படுகிறது. ஹைகோர்ட் ஜட்ஜைவிட இந்த உத்யோகத்துக்கு சம்பளம் அதிகம்.

ரானடே உத்யோகமுறையில் செய்தவேலையெல்லாம் மிகக் குறைவு. ஆனால் தேசநன்மைக்கு பாடுபடுகிறவர்களுக்கு தக்கவாறு யோசனைசொல்லி அவர்களை ஊக்கத்துடன் வேலைசெய்யத் தூண்டிவிட்டார். அவர் பூனா ஸர்வ ஜன ஸபையில் ஒரு முக்ய மெம்பராயிருந்து அதன் அபிவ்ருத்திக்கு காரணமாயிருந்தார். அவர் ப்ரார்த்தன ஸமாஜத்தில் ஒரு ப்ரதானமான மெம்பர்; இந்தியன் ஸோஷல் கான்பரென்ஸின் பொது ஸெக்ரடரி பம்பாய் யூனிவர்ஸிடி ஸினேட்டில் ஒரு முக்ய மெம்பர். இப்படிப் பல கார்யங்களில் கலந்து வேலை செய்து தம்மைப்போன்ற ஸாமர்த்யமும், ஜனஸமூகத்தில் மதிப்பும் நிலைமையும் உள்ளவர்களுக்கு இன்ன கடமை உண்டென்பதை நன்றாயறிந்து கொண்டதாகக் காட்டிவிட்டார். அவருடைய வாக்கு ஸாமர்த்யம், எழுதும் ஸாமர்த்யம், அவருடைய காலம், செல்வம் இவைகளை தமது தேசத்தின் க்ஷேமாபி வ்ருத்திக்காக அர்ப்பணம் செய்யத் தயாராயிருந்தார். அவர் தமது வாழ்நாள் முழுவதும், இந்த மாதிரி தேச நன்மைக்கு உழைத்துக்கொண்டே காலங்கழித்தார். அவர் தாம் விரும்பியபடியே உழைத்துக் கொண்டிருக்கும்போதே மரணமடைந்தார். இந்தியர்களுடைய ஆயுள் ப்ரமாணத்தை உத்தேசித்து அவர் அல்பாயுஸு இல்லை என்றாலும், அவரைப்போன்ற நோக்கங்களும் எடுத்துக்கொண்ட வேலையில் உத்ஸாகமும் உள்ள கனவான்கள் ரொம்ப குறைவாயிருக்கையில், அவரிருப்பதனாலேயே ஜனங்களுக்கு உத்ஸாகத்தைக் கிளப்பிவிடும் தன்மையும், அவருடைய அனுபவத்துக்கு ஒத்த அறிவும், முதிர்ந்த ஞானமும், அமைந்துள்ள அவரை இழப்பது நமக்கு மிகவும் கஷ்டமானதே. ரானடேயின்வாழ்நாளை ஸாதரண மனிதர்களின் கால அளவால் மதிப்பிடக்கூடாது. அவரைப்போன்றவர்கள் அவர்கள் செய்துள்ள கார்யங்களிலும், அவருடைய எண்ணங்களிலும் வெகுகாலம் ஜீவிக்கிறார்கள். மேலான நோக்கங்களும், எண்ணங்களும் உடையவராய் மேலான கார்யங்களைச் செய்துள்ளவர், தாம் இறந்தும் வெகுகாலம் இறவாதவராக இருக்கிறார். ரானடே 1901-ம் ஹு ஜனவரிமீ 16-தேதி யன்று காலகதி யடைந்தார். இவருடைய அபிப்பிராயங்களைப் பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் இன்னொருமுறை எழுதுவோம்.

## SELECTIONS
## விசேஷத்திரட்டு.

### PARTNERSHIP.
### கூட்டு வியாபாரம்.

கூட்டு வியாரமென்பது இரண்டு பேரோ அல்லது அதற்கு மேற்பட்ட பேர்களோ சேர்ந்து நடத்தும் வியாபாரமாகும். அது விசேஷமாக ஒற்றுமை யென்பதை அஸ்திவாரமாகவு முடையது. இந்த அஸ்திவாரபலம் என்று மிருந்தாலன்றி அந்த வியாபாரம் நிலைப்பது கடினம். ஆகையால் அந்த அஸ்திவாரம் நிலை தவருதிருக்க நடப்பதே கூட்டாளி களின் கடமையாகும். அது கருதியே வியாபார நிமித் தம் ஒன்று சேர்பவர்கள் முதலில் சில நிபந்தனைகளை எக்ரிமெண்டில் கண்டு அதன்படி நடப்பதென பரஸ் பரம் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் ஒப் புக்கொள்கிருர்கள். இதன் சம்பந்தமாய் ஒருவன் மற்றவர்களைச் சேர்த்துக்கொள்வது திரவிய சகாயத் தையோ அல்லது வேறு விதமான உதவியையோ விரும்பியே அவரவர் செய்ய ஒப்புக்கொண்டதை முற் றும் நிறைவேற்றவேண்டுமென்பதே எக்ரிமெண்டிற் குறிக்கப்படுவதாகும்.

இப்படிச் சேருபவர்கள் விசேஷமாக ஒருவரை யொருவரறிந்தவர்களாகவும் அல்லது வெகுநாளைய நண்பர்களாகவுமே யிருக்கிருர்கள். ஒருவரை யொரு வர் முன்பின் அறியாதார் நூதனமாக இதன் நிமித்தம் சேர்வது மிகச் சொற்பம். மேனுட்டாரில் இந்த வியாபாரம் பலத்த அஸ்திவாரத்துடன் ஆரம்பிக்கப் படுகிறது. சேர்பவர்கள் பிரிய நேரிடின், தகுந்த காரணமின்றிப் பிரிதற்கு முடியாதவாறிருக்கும். நம்மவர்களுள் அப்படி யொழுங்காய்த் தொடங்கப் படுவதில்லை. இதுவரையில் நமது தென்னுட்டில் எவ்வளவோ கம்பெனிகள் நடத்தப்பட்டு, தோன்றிய கொஞ்ச நாளையில் பிரிந்ததையும் பிரஸ்தாபிக்கவுமிட மின்றி அழிந்ததையும் பார்த்திருக்கிறேம்.

இப்படி விருத்தியாகா தொழிவதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவைகளுள் சில குறிப்பிடுவோம். முத லாவது, தகுந்த மூலதனம் போட்டு அதற்குத் தக்க படி சிப்பந்திகளை நியமித்து வியாபாரத்தை நடத்தத் தவறுவதேயாம். மூலதனம் சரியாயிருந்து தக்க சிப் பந்திகளும் எற்படுத்தப்பட்டிருந்தால் அந்தக் கூட்டு வியாபாரம் அநேகமாக நாசமடைவதில்லை. இது மே ஞட்டாரிடமே விசேஷமாகக் காணப்படுகிறது. இப் படி நடத்தப்படுவதில் கம்பெனிச் சொந்தக்காரர்கள் ஒருவரை யொருவர் மோசம் செய்ய விசேஷமாக இடமேற்படுவதில்லை. எனெனில், அவர்களாலேற் படுத்தப்படும் சிப்பந்திகள் தங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்கிற்கு விரோதமின்றிச் செய்துவிடுகிருர்கள். கணக்குகள் ஒழுங்காயிருக்குமாயின் சச்சரவு எவ்வித மேற்படும்? இரண்டாவது, அற்ப மூலதனத்தைக் கொண்டு வியாபாரந் தொடங்கி அதில் பாகஸ்தர்களா கச் சேருபவர் ஒவ்வோர் தொழிலை யேற்றுக்கொண்டு வியாபாரத்தை நடத்துகிருர்கள். இந்த வியாபாரம் நிலைபெறுவது அரிதாய் விடுகிறது. எனெனில், "நாம் உழைக்கிறேம். அவன் கவனித்து வேலை செய்கிருனில்லை" என்கிற எண்ணம் ஒருவன்மேல் மற்றவனுக்கேற்பட்டு இடையில் ஒருவனை யறியாமல் ஒருவன் கம்பெனிச் சொத்தைக் கொள்ளை கொள்ளத் துணிகிருனுகையால் கடைசியில் கம்பெனி யானை யுண்ட விளங்கனியாய் விடுகிறது. மூன்ருவது, இருவர் சேர்ந்த ஒரு கம்பெனியில் ஒருவன் நம்பிக் கை காரணமாக மற்ருெருவனிடமே எல்லா விவகா ரங்களையும் ஒப்புவித்து ஒழிந்தபோது கணக்குப்பார்த் துக் கொள்வதென்கிற ஓர் ஒழுங்கு பின்பற்றப்படு கிறது. இந்த ஒழுங்கில் கம்பெனியானது அதிகாரத் தில் துரோகம் என்கிற நமனுக்கிரையாய் பிரிவினை யோ அல்லது நாசத்தையோ அடைகிறது. இந்தப் பெருந் துரோகத்திற்குப் பாத்திரவானுகும் புண்ணிய வான் பங்காளிகளில் யார் இருக்கக் கூடுமென்று யோசிக்கின், வியாபார சம்பந்தமாய் எற்படும் கொடுக் கல் வாங்கல் என்னும் பணநடப்பு எவன் மூலமாக எற்படுகிறதோ அவன்தான் என்பது கூடிப்பிரிந்த அநேகர் உணர்ந்திருப்பார்கள். இது "ஆட்கொல்வி" என்று சொல்லப்படும் பணம் செயயும்வேலை. யாரே னும் கூட்டுவியாபாரம் நடத்துபவர்களாயிருக்கின், அவர்கள் தங்கள் கூட்டாளியை வேறு எந்த விஷயத் தில் நம்பினபோதிலும் காசு விஷயத்தில் நம்பவே கூடாதென்பதை அறியவேண்டும். நாடோறும் வரவு செலவைப் பிறகு பார்த்துக்கொள்வதென்கிற வார்த் தையையே மறந்து எந்நேரமாயினும் ஒரிடத்திருந்து சரிபார்த்து முடித்த பின்னரே மறுவேலையில் பிரவே

கிக்கவேண்டும். இது அவசியம் கவனிக்கத்தக்கது. இன்னும் விரிக்கிற் பெருகும் என அஞ்சி விடுத்த னம்—சுதேசமித்திரனில் சங்கரன் பிள்ளை.

---

## RESPONSIBILITIES OF PARENTS.
## பெற்றோரின் உத்தரவாதம்.

சகல அண்ட சரா சரங்களையும் படைத்துக் காத்து அனுக்கிரகித்துவரும் சிருஷ்டி கர்த்தாவானவர் சீவ வர்க்கங்கள் அற்றுப் போகாது பெருகுவதற்கான இயற்கைப் பிரமாணங்களையும் அமைத்திருக்கின்ற னர். அவற்றிலொன்று பிராணிகளுக்கும் அவற்றின் பிள்ளைகள் அல்லது குட்டிகள் அல்லது குஞ்சுகளுக்கு மிடையிலுள்ள பாசமாம். பிராணிகளின் உதரக்கனி கள் (குட்டி, குஞ்சு, குழந்தைகள்,) உலகத்திற் தோற் றும் போதெல்லாம் பெற்றோருக்கு அவற்றின்மே லதிகபாச மிருத்தலினாற்றான் அவைகள் காக்கப்படு கின்றன. கோழி தன் குஞ்சுகளைப் பருந்து காகம் ஆதியவற்றினின்று காக்கும் வகையையும், காகங் கழுகுகளாதியன தூரத்திலிருந்து தன் குஞ்சுகளுக்கு இரைதேடிவந்துகொடுக்கும் மாதிரியையும், மிருகங் கள்தம் கன்றுகள் குட்டிகளை மனிதராவது மிருகங் களாவது சருவவிடாமற் காத்துப் பாலூட்டி வளர்க் கும் வகையையுங் கவனித்துப்பார்த்தால் இப்பாசம் தெளிவாகும். இப்படியே மனிதரிலும் இப்பிரமாணத் தைக் கவனிக்கின்றோம். பிள்ளைகள் உண்டுவளரப் பெற்றோர் தாம்வளருவார்கள். தாம் தம் சீவனைக் கொடுத்தும் பிள்ளைகளை வளர்ப்பார்கள் அப்படியே புலவர்களும், "மக்களுடையருமையை பெற்றவர்களே யறிவர்" என்றும், "குழலினிதுயாழினிதென்ப தம்மக் கள் மழலைச் சொற்கேளாதவர்" என்றும், "பொன் னுடையரேனும் புகழுடையரேனும் மற்றென் னுடையரேனு முடையரோ இன்னடிசில் புக்களை யும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்களை இங்கில்லாதவர்" என்றும் பிள்ளைப் பாக்கியத்தை விய ந்து பேசி இருக்கின்றனர். ஆகவே பெற்றோரினுத் தரவாதம் இயற்கையாயுள்ள புத்திர சந்தானவாஞ்சை யில் தங்கியிருக்கின்றது.

ஆனால் பிள்ளைகளைப்பற்றிய பாசத்தின் தன்மையும் அளவும் மனிதரிலும் மிருகங்களிலும் வித்தியாசமாயி ருக்கின்றன. மிருகங்கள், பறவைகள், ஊர்வனவுகள் புத்திர உற்பத்தியின் பின்னரே யவற்றைக் காக்கும் அவாவை யடைகின்றன. மனிதர்க்குப் புத்திரபாக் கியவிருப்பம்முந்தியேயுண்டாகியுற்பத்தியின் பின்அதி கப்பட்டுவருகின்றது. ஆகையால் பிராணிகளின் உத் தரவாதம் அவற்றின் பிள்ளைகளின் சரீரவளர்ப்பிலும் பாதுகாப்பிலும் சொற்பகாலத்துக்கு மாத்திரமிருக்க, மனிதபெற்றோரினுத்தர வாதமோ முடிவற்றதாய் பிள்ளைகளின் முழுச்சீவியத்தையும் அளாவி நிற்கின் றது. உலகத்தில்தோற்றும் ஒவ்வொரு ஆணும் அல் லது ஒவ்வொரு பெண்ணும் உலகத்துக்கு ஆசீர்வாத மாய் அல்லது சாபமாயிருப்பார். ஒவ்வொருவரும்தேவ னுக்கும்மனிதனுக்கும் குறித்தகடமைகளை நிறைவேற் றும் உத்தரவாத முடையவரா யிருக்கின்றனர். இவர் கள் இப்பொறுப்பைச் சரியாய் நிறைவேற்றும் உத்தர வாதம் இவர்களில் மாத்திரமல்ல, இவர்களை உல கத்திற் தோற்றச்செய்து வளர்த்து உலகத்தி லனுப் பும் பெற்றோரிலுந் தங்கியிருக்கின்றது. ஆகவே உல கத்திலே ஆடவர் ஸ்திரீகளெனத் தோற்றும் மனி தரின் கடமைகளிவையென அறிவதும் அக்கடமை களை அவர்கள் சரியாய் நிறைவேற்றத்தக்கதாக அவர்களைத் தகுந்தவகையாய் வளர்த்துப் பக்குவப் படுத்திவிடுவதும் பெற்றோராகிய நம்மெல்லோரினதும் கடமையாகின்றது. பெற்றோரே, எங்கள் பிள்ளைகள் உலகத்தில் நடத்தும் சீவியம் வாதமோ, சாபமோ இரண்டுக்கும் பெற்றோராகிய நாம் பொறுப்பாளிகளா யிருக்கிறோமென்பதை உணருகிறீர்களா ? பிரம்பைக் கையாடாதவன் தன்மகனைப் பகைக்கிறான்" என்றும் "பிதாக்களே உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத் தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக "என்றும் விவிலிய (பைபில்) வேத மானது கட்டளையிட, "தக்கார் தகவிலரென்ப தவ ரவ்ரெச்சத்தாற் காணப்படும்" என்றும், "மகனுரைக் குந் தந்தை நலத்தை' என்றும், "தாயைப் போலப் பிள்ளை' யென்றும் ஆன்றோர் கூறுகின்றார்கள். ஆகவே உலகமும் கடவுளும்பெரியவோர் பாரத்தைப் பெற்றோராகிய எங்கள் மேலேற்றி யிருக்கின்றனர். எங்கள் உத்தரவாதம் எவ்வளவு எத்தன்மையது, எவ் வளவு காலத்தது எனச்சிறுக ஆராய்வோம்.

பெற்றோரினுத்தரவாதமென்ன ? பெற்றோரினிலக் குப் (நோக்கம்) பிழைபடுவதால் பிள்ளைகளின் சீவிய மும் பிழைபடும். பிள்ளைகளுக்கு நல்லாய்ச் சாப்பாடு கொடுத்து வளர்த்துப் பெரிய ஆட்களாக்கி விடுவது

தான் தமது கடமை என்று நம்மூர்ப் பெற்றோர் நினைக்கிறார்கள். அவர்களுக்கு அதிக திரவியந்தேடி வைத்துவிட்டால் அதுவே பெருங்காரியமெனச் சிலர் நினைக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல ஓர் உத்தியோகம் வாங்கிக் கொடுத்துவிட்டால் (கைக்கூலிகொடுத்தாவது) அதுவே பெருங்காரிய மென்பது சிலரின் அபிப்பிராயம். நல்ல முதுசொம், (ஆஸ்தி), நல்லசாதி, நல்லசீதனம் உள்ள இடத்தில் விவாகம் முடித்து வைத்துவிட்டால் அது மிகப்பெரிய காரியமென்பது சிலரின் அபிப்ராயம். உத்தியோகத் தெரிவையும், (தெரிந்து கொள்ளுதல்) விவாக சம்பந்தத்தையும் மேலைத் தேசவாசிகள் மிகுதியும் பிள்ளைகளின் விருப்பத்திலும் தெரிவிலும் விட்டுவிடுகிறார்கள். பிள்ளைகளுக்காகப் பெருந்திரவியந்தேடவும் அவர் அவாக்கொள்ளுகிறதில்லை. தனவந்தராயிருப் போர் தமக்குள்ளதை நியாயமாய்ச் செலவுசெய்து தருமவழியிலும் விட்டு மிஞ்சியதையே பிள்ளைகளுக்கு விடுவார்கள். ஆண்ட்ரூகார்னகியென்னுங் கோடீச்வரர் ஓர்முறை சொன்னது, “என்மகன் தனக்குச்செல்வம்வேண்டுமேற் தானேயுழைத்து அச்சந்தோஷத்தை யடைவதே எனது வாஞ்சை” என்பதாம். அவர் பெண்பிள்ளைகளுக்கு மாத்திரம் சிறுகக்கொடுக்கவும் மிச்சத் திரவியத்தை கல்விஸ்தாபனங்கள் தருமஸ்தாபனங்களிற் செலவிடவும் தீர்மானித்திருக்கிறார். பிதாக்களே, மாதாக்களே, உத்தியோகமே பெரிதெனநினைத்துஅதைமாத்திரம்இலக்காய்(நோக்கம்)வைத்துதமது பிள்ளைகளை நடத்தின எத்தனைபெற்றோர் தம் பிள்ளைகள் அவ்வுத்தியோகங்களை அதமானப் படுத்துகிறதையும், கூத்தாடிக் கூத்தாடிப்போட்டு டைக்கிறதையும் கண்டு சாகாமற் சாகின்றனர். பெருத்த சீதனம் அல்லது முதுசொத்தைத்தேடித் தம் பிள்ளைகளைத் தள்ளிவிட எத்தனைப்பெற்றோர் கவலையோடும் துக்கத்தோடும் கல்லறை சேர்ந்திருக்கின்றனர். இவர்கள் பொருளென்றும், உத்தியோகமென்றும், சாதியென்றும் தங்கள் பிள்ளைகளுக்குச் சாபத்தையும், அழிவையும், நோயையும், நித்தியகவலையையும் தேடிக்கொண்டு சனசங்கத்துக்குப்பெரும் நட்டத்தை யுண்டாக்குகிறார்களல்லவா? தம்பிள்ளைகளுக்கென்று பொருளீட்டுவோர் அவர்களுச்குச் சோம்புத்தனத்தையும், தூர்த்த நடையையும் அழிவையும் தேடுகிறார்களல்லவா? பொருளீட்டுதல் பெற்றோரினுத்தரவாதமல்ல; உத்தியோகந்தேடுதல் உத்தரவாதமல்ல நல்ல விவாகந் தேடுதல் அவர்களினுத்தரவாதமல்ல. இவைகளை மிகுதியும் பிள்ளைகளே தேடவும் தெரிவுசெய்யவும் விடுவது மேலைத்தேசப் பெற்றோரின் போக்கு.

பின்னைப் பெற்றோரின் உத்தரவாதமென்ன? தெய்வப்புலமைத் திருவள்ளுவர் “தந்தைமகற் காற்றுமுதவி அவையகத்து முந்தியிருப்பச்செயல்” என்றார். “ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக்கேட்டதாய்” என்றார். “மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை யென்னோற்றான்கொல் என்னுஞ் சொல்” என்றார். ஆகவே தன்மகன் சான்றோன் என்றும் நற்குண நல்லொழுக்கமுடையானென்றும் கேள்விப்படும்போதே யவனைப் பெற்றபொழுதடைந்த சந்தோஷத்திலும் அதிக சந்தோஷத்தைத் தாயடைவாள் என்றும், சான்றோர் சபையின் முதலிடத்திருக்கச்செய்தலே தந்தையின் கடமையென்றும் கருத்தாகின்றது. சுருக்கிச்சொன்னால் உலகத்தை உயர் நிலைச்குக் கொண்டுவருவதற்குத் தம் பிள்ளைகளைப் பக்குவப்படுத்துவதே பெற்றோரின் உத்தரவாதமாம். பணஞ் சம்பாதித்தற்கு பிள்ளைகளைப் பக்குவப்படுத்துவதல்ல. உயர்ந்த உத்தியோகம்பெறுதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதல்ல. பணமுளைப்பதா நாம் உலகத்திற் செனித்தநோக்கம்? அதுவா எம் சீவிய இலக்குநோக்கம்? அதுமிகக் கீழான இலக்கு. மனிதசாதியை உயர்த்துவதே சீவிய இலக்கு. கமத்தொழிலிற் திருத்தங்களையுண்டாக்கி மற்றவர்களுக் குதவிசெய்வதால் மனிதசாதியை யுயர்த்தலாம். நேர்மையுள்ள நியாயப்பிரமாணியாய் நேர்மையுள்ள கூலிக்காரனாய் எந்த நிலையிலும் நன்மை செய்ய இடமுண்டு. கைதொழில்களை நயப்படுத்தி நன்னிலைக்குக்கொண்டு வருவதால் இவைகள் செவ்வனே நடைபெறற்கான சூத்திரங்களை,கருவிகளை இயற்றுவதால், அறியப்படாத தேசங்களைக்கண்டு பிடித்து சீர்திருத்தத்துக்குரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு போவதால் உலகிற்கு நன்மைசெய்யலாம். ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள பிள்ளைகளி னிலக்கென்ன? நீராவி எந்திரங்கள்,மின்சார நூதனங்களில் நில்லாது ஆகாயத்திற்பறந்து பிராயாணஞ்செய்யும் வகையில் முயற்சிப்பார் சிலர். வடதுருவத்தைக் கண்டுபிடித்து மனிதசாதியினுற்பத்தி ஸ்தானம் அது தானோ என ஆராய்வார் சிலர்; தென்துருவதேசங்களின் தன்மையை

ஆராய்வார் பலர்; பூமியைச்சுற்றிக் குறுக்கும் மறுக்கு மோடியாராய்ந்தார்பலர். அறியாமையிலும் அவபத்தியிலுமிருந்த சனங்களுக்கு சீர்திருத்தத்தின் ஆசீர்வாதங்களையள்ளிச்சென்றூர் பலர். பிரசாதிபதிகளாய், முதல்மந்திரிகளாய்வந்து தாம்தாம் எண்ணிய அரசுமுறை சனசங்க திருத்தங்களை ஸ்தாபிக்க அதற்கு முயற்சிசெய்வார் பலர். எந்தவகையாய் உலகத்தையும் மனிதசாதியையும் திருத்தியுயர்ந்தநிலைக்குக் கொண்டுவரலாமோ அந்த வகைக்குப் பிள்ளைகளைப் பக்குவசாலிகளாக்குவதே பெற்றூரினுத்தரவாதமாம்.

உதயதாரகை.

## INSECT PESTS.

## பயிர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகள்.

இவைகளைப்பற்றி டி. பெயரின்பிம்க்கி ப்ளெச்சர், கவர்ன்மென்ட் என்டமாலோஜிஸ்ட் பின்வருமாறு எழுதுகிறூர்:—எல்லாவித பயிர்களும் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடியவைகள். அப்பூச்சிகள் உருவத்தில் சிறியவைகளா யிருந்தாலும் எண்ணிக்கையில் ஜாஸ்தியாயிருந்தால் பயிர்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டு பண்ணுகின்றன. மழையின் ஒரு துளி சிறியதேயாயினும் அநேக மழைத்துளிகள் சேர்ந்து பூமியில் விழும்போது வெள்ளம் தோன்றி அதிக நஷ்டத்தை உண்டுபண்ணும். பூச்சிகள் தோன்றும்போது அதுபோலவே நேரிடுகிறது. ஒரு பூச்சியானது அதின் ஆயுள்முழுவதும் சில இலைகளைத்தான் தின்னும். ஆனுல் ஒரு பயிரில் ஏராளமான பூச்சிகள் விழுமானுல், பயிரின் ஒவ்வொரு இலையையும் தின்று மாசூலை நஷ்டமடையச் செய்யும். ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய பயிர் பூச்சிகளினுல் பீடிக்கப்பட்டு தான் நஷ்ட மடைந்துபோவதை அறிந்திருப்பான். அவ்வித நஷ்டத்தை எவ்விதமாய் தடுப்பது என்பதை அறியவும் பலமுறை விரும்பியிருப்பான். பூச்சிகளில் எல்லாவிதங்களைப்பற்றியும், முக்கியமாய் பயிர்களுக்கு கெடுதலையுண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றியும், செவ்வையாய் ஆருய்ந்து பரிசோதனை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறூர்கள். எந்த நிலச்சுவான்கள் அல்லது குடியானவர்களுடைய பயிர்கள் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடிய நிலைமையில் அல்லது நஷ்டப்படுத்தப்பட்டாவது இருக்குமானுல் அப்போது அவர்கள் இந்த ஆபீசுக்கு எழுதி அவருடைய ஆலோசனையைக் கோரவேண்டும். ஒவ்வொருவிதப் பூச்சியையும் நிவர்த்திக்க முறைகள் சொல்லுவது இப்போது சாத்தியமில்லையென்றூலும், பூச்சிகளில் அநேகத்தை நிவர்த்திக்க மார்க்கங்கள் சொல்லக்கூடும். பயிர் ஜாஸ்தியாய் பீடிக்கப்பட்டிருந்தால் அந்த சந்தர்பத்தில் பயிரையும் சாகுபடி முதலியவற்றையும் நேரில் பார்வையிடவும், அதன்பிறகு பூச்சியின் பாதையை நிவர்த்திசெய்யும் பொருட்டு விஷயந்தெரிந்த ஒரு ஆபிசரை அனுப்பி உதவிசெய்யக்கூடும். நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளை நேரில் பார்வையிடாமல் பொதுவாய் ஆலோசனை சொல்லுவது அசாத்தியம். "என்னுடைய நெல்பயிர் பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை நிவர்த்திக்க முறைகள் தெரியப்படுத்தவேண்டும்" என்று எழுதுவது உபயோகமில்லை. ஏனெனில் நெல் பயிரை சேதப்படுத்தக்கூடிய பூச்சிகள் குறைந்தபட்சம் 12 தினுசுகள் இருப்பதால், அவைகளில் இன்னது தான் இந்த சந்தர்ப்பத்தில் நஷ்டத்தை உண்டுபண்ணுகிறதென்பது தெரியாது. பூச்சி யின்னதென்பதை அறியாமல் ஆலோசனை கூறுவதும் அசாத்தியம்.

நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற அல்லது உண்டுபண்ணுவதாகத் தோன்றுகிற பூச்சிகளில் சிலவற்றை அனுப்பவேண்டும். அப்போது எந்தப் பூச்சி நஷ்டத்தை உண்டு பண்ணுகிற தென்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திப்பதற்கேற்ற முறைகள் சொல்லக்கூடும். அப்பூச்சிகளை உயிரோடிருக்கும்படி ஒரு தகரம் அல்லது மரப்பெட்டியில் கசக்கப்பட்ட காகிதம் அல்லது இலைச்சரகு முதலியவற்றூடும், ஆபீசரிடம் வந்து சேரும்வரையில் வழியில் ஆகாரமாக உபயோகப்படும்படி அது தின்னக்கூடிய பச்சைத்தட்டை அல்லது தழையையும் கொஞ்சம் போட்டு (unregistered) அன்ரிஜிஸ்டர்ட் தபால் பார்சல் மார்க்கம் அனுப்பவேண்டும். தகரப்பெட்டி கிடைக்காவிட்டால் ஒருபுறம் கணுவுள்ள மூங்கில் குழாய் ஒன்றை தக்கை அல்லது மரத்தால் செய்யப்பட்ட ஆப்பினுல் மூடி பூச்சிகளை உயிரோடு அனுப்பலாம். ஆனுல் மூடி பலமாகப்போடப்பட்டிருக்கவேண்டும். அவ்விதம் அனுப்பப்படும் எல்லா பார்சல்களில் அனுப்புகிறவர்களுடைய பேரும் முழுவிலாசமும் செவ்வையாய் எழுதப்பட்டிருப்பதுடன், எந்தப்

பூச்சியைப்பற்றி ஆலோசனை கோரப்படுகிறதோ அதைப்பற்றிய முழுவிபரங்களடங்கிய ஒரு கடிதமும் இருக்கவேண்டும். அதாவது, பீடிக்கப்பட்ட பயிர், நஷ்டத்தின் தனமையையும் அளவையும், எப்போது முதல்தோன்றிய தென்பதையும், முந்தினவருஷங்களில் அவ்விதமான பூச்சி தோன்றியிருக்கிறதா என்பதைப்பற்றியும் எழுதவேண்டும்.

பூச்சிகளைப்பற்றிய எல்லா பார்சல்களும் கடிதங்களும் கீழே குறிக்கப்பட்டிருக்கிற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்:—

கவர்ன்மென்ட் என்டமாலோஜிஸ்ட், விவசாய காலேஜ், கோயம்புத்தூர்.

## NECESSITY OF IMPROVING EXISTING AGRICULTURAL IMPLEMENTS.

## தற்காலம் உபயோகத்திலிருக்கும் விவஸாயக் கருவிகளை அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியம்.

சென்னை இராஜதானியில் இருக்கும் குடியானவர்கள் தற்காலம் தாங்கள் உபயோகித்துவரும் விவஸாயக் கருவிகளைவிட சிரேஷ்டமானவைகளை உபயோகத்துக்கு கொண்டுவரவேண்டியகாலம் நெருங்கி விட்டது. சென்ற விலைவாசிகள் அதிகரித்ததனால் தனது பூமியில் கிடைக்கும் மாசூலிலிருந்து ஒரு குடியானவனுக்கு லாபம் கிடைத்தபோதிலும் சாகுபடி செலவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற ஐந்து வருஷங்களுக்குள் நல்ல வண்டி அல்லது உழவு மாடுகளின் விலை அநேகவிடங்களில் இரட்டித்துவிட்டது. சாதாரண கால்நடைகளின் விலையும் அதிகரித்து வருகிறது. மாட்டுத் தீவனத்தின் விலையும் ஜாஸ்தியாகி வருகிறது. வேலை ஆட்களோ அகப்படுவது கஷ்டம். வேலையாட்களின் கூலியும் ஜாஸ்தியாகிவருகிறது. இன்னும் அதிகப்படும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஒரு ஆளும் ஒரு ஜதை எருதுகளும் செய்யும் வேலையின் அளவு முன்போலவே யிருந்தாலும் அந்த வேலைக்கு முன்போலல்லாமல் தற்காலத்தில் செலவாகும் தொகை அதிகமே. சிலவிடங்களில் கூலியாட்கள் தங்களுக்கு சாகுபடி வேலையில் போதுமான கூலிகிடைப்பதில்லையென்று பட்டணங்களுக்குப் போகிறார்கள்: அல்லது ஜாஸ்தி கூலி கிடைக்கக்கூடிய தொழில்களில் பிரவேசிக்கிறார்கள். சிலவிடங்களில் சாகுபடி வேலைக்கு கூலியாட்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இன்னும் சில விடங்களில் கூலியாட்கள் கிடைத்தாலும் அதிக கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. இவைகளை உத்தேசித்து கூலியாட்களைக் குறைத்து சிரேஷ்டமான வேலையைச் செய்யக்கூடிய விதத்தைத் தேடவேண்டியது அவசியம்.

இச்சென்னை ராஜதானியில் இதரவிடங்களைக்காட்டிலும் பல்லாரி, கடப்பை முதலிய தெலுங்கு ஜில்லாக்களில் குடிப்பரப்பு குறைவு. இவ்விடங்களில் குறைந்த கூலியாட்களைக்கொண்டு சிரேஷ்டமான சாகுபடிவேலை செய்யப்படுகிறது. இந்த ஜில்லாக்களில் கரிசல் நிலத்தில் வேலைசெய்ய கடினமான வேலை செய்யக்கூடிய எருதுகள் வேண்டியிருப்பதால் எருதுகளின் விலை அதிகம். தவிரவும் இந்த ஜில்லாக்களில் காலமழையும் குறைவு. ஆனதால் பெய்த மழையைக் கொண்டு விதைப்புகாலத்தில் அதிக நிலம் விதைக்கக்கூடிய விவஸாயக் கருவிகள் அவசியமாயிருக்கிறது. ஆகையால் இந்த ஜில்லாக்களில் எருதுகளைக்கொண்டு களைவெட்டக்கூடிய கருவிகள், விதைக்கலப்பைகள், மற்றும் எருதுகளைக்கொண்டு பயிர் உழவு முதலிய வேலைகள் செய்யக்கூடிய கருவிகளாகிய சிரேஷ்டமான இந்திய நாட்டு விவஸாயக் கருவிகளைப் பார்க்கிறோம். நாட்டுக் கலப்பையைக்கொண்டு கைவிதைப்பு நடத்திவரும் ஜில்லாக்களில் மூன்று ஜதை எருதுகளும் மூன்று கூலியாட்களும் ஒரு நாளில் செய்யக்கூடிய வேலையை மேற்கூறிய தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு ஜதை எருதுகளைக்கொண்டு அதேகாலத்தில் ஒரு ஆள் செய்து விடுவான். ஐரோப்பா தேசத்து குடியானவர்கள் குடியேறி காடு வனங்களை யழித்து சாகுபடி செய்யும் அந்நிய தேசங்களில் பூமியை சாகுபடிசெய்ய கூலியாட்கள் கிடைப்பது அருமையாயும் கூலியாட்களுக்கு அதிக கூலி கொடுக்கவேண்டியதாயும் யிருப்பதால் விநோதமாய் ஏற்படுத்தப்பட்ட விவஸாயக் கருவிகளைக்கொண்டு அதிக வேலைகள் செய்யப்படுகின்றன. சாகுபடி வேலை முழுவதும் நீராவியந்திரங்களைக் கொண்டு நடத்தப்படுவதாய் கேள்விப்படுகிறோம்; உழவு, பயிர் உழவு, விதைப்பு, இழுவல் முதலிய எல்லா வேலைகளும் ஒரே காலத்தில் நடத்தப்படுகின்றன. ஒரு மாசூலை அறுவிடை செய்து, அடித்து, தூற்றி,

மூட்டைக்குள் தானியத்தை ஒரே காலத்தில்போடும்படியான யந்திரங்கள் இருக்கின்றன. புதிதாய் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் சிரேஷ்டமான பூமியிருக்கும் தேசங்களுக்கு மாத்திரமே சொல்ப கூலியாட்களைக்கொண்டு வேலை செய்யக்கூடிய விலையுயர்ந்த கருவிகள் லாயக்கானது. இந்தியாவிலிருக்கும் குடியானவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள பூமியின் விஸ்தீர்ணம் சொல்பம். ஆகையால் ஆயிரக்கணக்கான பூமியை சாகுபடிசெய்ய லாயக்கான விலையுயர்ந்ததும் வேலைப்பாடுமுள்ள விவசாய யந்திரங்கள் இந்திய குடியானவர்களுக்கு வேண்டியதில்லை. அப்படி அவ்வியந்திரங்களை வைத்து சாகுபடி செய்தால் லாபம் கிடைக்காது. ஆனால் இந்திய குடியானவர்களுக்கு லாயக்கான அநேக விவஸாயக் கருவிகள் இருக்கின்றன. இவைகளை உபயோகிப்பதால் அதிக லாபம் கிடைக்கும். ரூபாய் 200-அல்லது 300 பெறுமான ஒரு ஜதை எருதுகளையுடைய ஒரு இந்திய குடியானவன் கூலியாளாவது காலமாவது குறைக்காததும் அல்லது ஜாஸ்திவேலை செய்யக்கூடாததுமான விவஸாயக் கருவிகளை வைத்துக்கொண்டு திருப்தியடைவதைப்பார்க்க அன்னியநாட்டு விவஸாயத்தில் பழக்கமுள்ள ஒருவனுக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஏனெனில் கொஞ்சம் செலவு அதிகம்செய்தால் குறைந்த கூலியாட்களைக் கொண்டு நல்லவேலை செய்யக்கூடிய ஒரு உழவு கலப்பை கிடைக்கக்கூடியதாயிருந்தபோதிலும் இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்குமேல் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும் அதை இந்திய குடியானவன் வாங்க மனம் தளர்ந்து பின்னிடைகிறான். இந்திய குடியானவனுடைய ஏழ்மை நிலைமையை உத்தேசித்தும் அவன் செய்ய வேண்டிய வேலையைப் பொருத்தும் இந்திய பூமிக்குத் தகுந்த அநேகவித கலப்பைகள் தற்காலம் இருக்கின்றன. கலப்பைகளே அல்லாமல் குறைந்த செலவிலும் குறைந்த கூலியாட்களைக் கொண்டு அதிக சீக்கிரத்திலும் வேலை செய்யக்கூடிய அநேக விவஸாயக் கருவிகள் உண்டு. உதாரணமாக இரண்டாவது மூன்றாவது சால் நாட்டுக் கலப்பையைக் கொண்டு உழுவதற்குபதிலாக கல்டிவேடர் (Cultivator) என்று சொல்லப்படும் கருவியைக்கொண்டு வேலைசெய்தால் அதிசீக்கிரம் மேற்கூறிய வேலை முடியும். தவிர முள்பலுவை, உபயோகிப்பதால் ஆட்களை செலவு மிகக்குறையும். இவைகளைத் தவிர அந்தந்த வேலைக்குறிய அனேக கருவிகள் உண்டு. கரும்பாட இரும்பாலைகளும், கறந்த பாலிலிருந்து ஆடை வுடனே எடுக்கக்கூடிய யந்திரங்களும் இவைகள்போன்ற அனேக யந்திரங்கள் இருக்கின்றன இந்திய குடியானவனுக்கு இது விஷயங்கள் தெரிந்து இக்கருவிகளின் அனுகூலங்களும் ஏற்பட்டு இம்மாதிரி கருவிகள் வேண்டியதெனப் பலரும் வெளிவந்தால் அந்தந்த இடங்களுக்குச் தகுந்தபடி கருவிகளில் வேண்டிய மாறுபாடுகளும் செய்யக்கூடும். தற்காலம் செய்யப்படும் ஒரு வேலையை சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு கருவியைக் கொண்டு இப்பொழுதுவேண்டியிருக்கும் ஆள் செலவிலும் கால்நடை செலவிலும் அரைவாசையில் செய்யமுடியுமேயானால் ஒரு ஜதை எருதுகளை குறைப்பதால் மட்டும் ஒவ்வொரு வருஷத்திலும் கீழ்குறித்த லாபம் அடையலாம்:—

| | ஒரு வருஷத்துக்கு ரூ. |
|---|---|
| ஒருஜதை எருதுகளைப்பார்க்க ஒரு ஆள் சம்பளம் மாதம் ஒன்று 5 ரூபாய் வீதம் ... | 60 |
| மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3 வீதம் மாட்டுத் தீனி செலவு ... ... | 39 |
| ரூபாய் 200 பொறுமான ஒரு ஜதை எருதுகள், 10ஹூ வேலைசெய்தால் எருதுகள்வாங்காததால் பிரதிஹூ லாபம் ... | 20 |
| ரூபாய் 100-க்கு 5 வட்டி வீதம் இந்த ரூபாய் 200-க்கு வட்டி லாபம் ... ... | 10 |
| ஆக ரூ. ... | 126 |

வருஷம் ஒன்றுக்கு ரூ. 126 மீதிசெய்யலாம். வருஷம் ஒருவனுக்கு ரூ. 126 லாபம் கிடைக்க 100-க்கு ரூ. 9 வீதம் ரூ 1,400 முதல் வேண்டியது. இத்தொகையில் நாலில் ஒரு பங்கு, அதாவது ரூ. 350-க்கு ஆள் செலவையும் எருதுகளின் செலவையும் குறைத்து மேற்கண்ட லாபத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல விவஸாயக்கருவி ஒன்று வாங்கலாம்.

கோயம்புத்தூர் விவஸாயப்பண்ணையில் எல்லாவித விவஸாயக்கருவிகளையும் ஒருமிக்க சேர்ப்பதாக உத்தேசம். இப்படி சேர்த்தபிறகு சென்னை இராஜதானியிலும் உள்ள குடியானவர்கள் தங்கள் பூமிக்கும் வேலைக்கும் தகுந்த கருவியைப் பொருக்கி எடுத்து உபயோகிக்க சலீசாயிருக்குமென்று நம்புகிறோம்.—விவஸாய பஞ்சாங்கத்தில் எச். சி. சாம்ஸன் விவஸாய டிப்டி டைரக்டர், தென் இலாகா, திருச்சினப்பள்ளி.

## FEEDING CATTLE

## ஆடுமாடுகளுக்குத் தீனி போடுவது.

கொஞ்ச வருஷங்களுக்குள் நல்ல மாடுகளின் கிரயமும், அவைகளின் தீனியின் விலையும் மிகவும் உயர்ந்துவிட்டது. இன்னும் வரவர உயர்ந்துகொண்டேவரும் என்பதைபற்றி ஆடுமாடுகளை வளர்ப்பவர்களுக்கு, அவைகளுக்குத் தகுந்தபடி செட்டாகத் தீனிபோடவேண்டி, ஆடுமாடுகளுக்கு தீனி கொடுக்கவேண்டிய விதிகளைப்பற்றி தெரியவேண்டியது அவசியமாக இருக்கிறது.

வெடியுப்பு வாயுவில்லாத உஷ்ணம் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களும் (carbo hydrates) கொழுப்புகளும், (fats), வெடியுப்பு வாயுவுள்ள மாமிசவர்த்தினிகளுமே (proteids) தீனியில் முக்கியமான வஸ்துக்கள். தீனி, சிறந்ததாகவும் செட்டாகவும் இருக்க வேண்டுமானல், அவைகளை சரியானபடி கலந்து போடுவது அவசியமென்பது பரீக்ஷைகளால் தெரிய வருகின்றது. கலக்கவேண்டிய விதமானது அந்தந்த பிராணிகள் செய்யும்வேலையையோ, அல்லது அவைகளால் ஆகவேண்டிய கறவை முதலான பிரயோஜனத்தையோ பொருத்தாக இருக்கின்றது.

அநேக வருஷகாலமாய் மேற்சொன்ன வழியில் அநேக பரீக்ஷைகள் விவஸாயிகளால் நடத்தப்பட்டிருக்கின்றன. அப்பரீக்ஷைகளின் முடிவில், குறிப்பிட்ட நிறையுள்ள ஒரு பிராணிச்கு அதன் ஸ்திதிக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டிய மொத்த ஆகாரம் இவ்வளவென்றும், அதில் உஷ்ணங்கொடுக்கக்கூடிய பதார்த்தங்கள், கொழுப்புகள், மாமிசவர்த்தினிகள் ஒவ்வொன்றும் எவ்வளவு இருக்கவேண்டுமென்றும் கணக்கிட சாத்தியப்பட்டிருக்கிறது. ஆனல் அனுபோகத்தில் மேற்சொன்ன திட்டமானது, நாம் எடுத்துக்கொள்ளும் பிராணிகளின் நிறைக்குத் தக்கபடி மாறவேண்டியதாகவே யிருக்கிறது. பிராணிகளின் தீனியைப்பற்றிய மேற்கண்ட விஷயங்கள் "தீனித்திட்டம்" என்று சொல்லப்படுவதுடன், சரியானபடி பிராணிகளை போஷிப்பதற்கு அவைகளே முக்கிய ஆதாரமாக இருக்கின்றன.

தீனித்திட்டத்துக்கு உதாரணமாக, 1,000 பவுன் நிறையுள்ள கடினவேலை செய்யும் ஒரு எருதுச்கு 2. 4 பவுன் மாமிசவர்த்தினி பதார்த்தங்கள், 13-02 உஷ்ணங் கொடுக்கக்கூடியவை, $\frac{1}{2}$ பவுன் கொழுப்பு, இவைகளடங்கிய, 24 பவுன் தீனி கொடுக்கவேண்டும். மேற்கண்ட தீனியின் "தீனித்தரம்" ஆறில் ஒருபங்கு ($\frac{1}{6}$)—அதாவது 6 பங்கு உஷ்ணங் கொடுக்கக்கூடியவைகளுச்கு, ஒரு பங்கு மாமிசவர்த்தினிகள். ஒரு தீனியின் பதார்த்தங்கள் என்னவென்றும், அவைகளின் சேர்க்கைப்பொருள்கள் எவையென்றும் தெரிந்தால் சுமார் மேற்சொன்ன திட்டம் கிடைக்கும்படி அவைகளை கலக்கலாமென்பது தெளிவாகிறது.

மேற்சொன்ன தீனித்திட்டத்தை அந்தந்த பிராணிகளின் சுபாவத்தை ஒத்து, சுமார் இவ்வளவு என்று தான் சொல்லலாமேயொழிய, அதற்குமேல் நம்முடைய புத்தியை செலுத்தி, ஐரோப்பாக்கண்டத்து ஆடுமாடுகளைக்காட்டிலும் முறடானதும் தாழ்வானதுமாயுள்ள தீனிகளை புசிக்கக்கூடிய இந்தியாதேசத்து ஆடுமாடுகள் விஷயத்தில், கவனித்துச் செய்யவேண்டியது. உள்ளபடிக்கு இந்தியாவிலும், சீமையில் ஏற்பட்ட தீனித்திட்டங்கள் உபயோகமுள்ளதாகவே காண்கிறது.

மற்றொருகஷ்டம் என்னவென்ருல் - ஒரு தீனிப் பண்டத்தின் எல்லா வஸ்துக்களும் ஜீரணிக்கக்கூடிய ஸ்திதியில் இல்லை. ஆகையால் சிலபாகம் ஜீரணேந்திரியம் வழியாகச்சென்று மலத்தில் அப்படியே காணுகிறது. மேலும் தீனியில் மேற்கண்ட வஸ்துக்களின் கம்மி ஜாஸ்தியானது அவைகளின் ஜீரண சக்தியை மாறுதலடையச் செய்கிறது. உதாரணமாக அதிகமாவுப் பண்டங்கள் (starch), மாமிஸவர்த்தினிகளின் சில பாகத்தை உட்சோறுவதை தடுப்பதுடன் அவைகளின் சிலபாகம் ஜீரணமாகாமலே வெளியில் வந்துவிடும். இந்த சங்கடத்தை நீக்குவதற்கே, அநேக தீனிப்பண்டங்கள் பரீக்ஷைசெய்யப்பட்டு, அவைகளில் ஜீரணிக்கக்கூடிய வஸ்துக்கள் எவ்வளவு என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒரு உணவு பண்டத்திலுள்ள மாமிசவர்த்தினி வஸ்துக்களில் நூற்றுக்கு 50 தான் ஜீரணிக்கக்கூடும். தினசரித் தீனியை ஆலோசிக்கும்போது மேற்சொன்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

இந்தியாவைப்பற்றின மட்டில் சுதேச ஆடுமாடுகளின் தீனித்திட்டத்தைக் குறித்தாவது அல்லது இவ்விடத்தில் அகப்படக்கூடிய தீனிகளின் ஜீரண ஜீரணங்களைக் குறித்தாவது யாதொரு பரீக்ஷையும் உறு

தியாக செய்யப்படவில்லை. ஆகையினால் அன்னிய தேசத்து அனுபோகத்தைக்கொண்டே இப்போது செய்யவேண்டியிருக்கிறது. அவைகளை புத்திசாலித்தனமாக உபயோகித்தால் சரியான பலன் கிடைக்கின்றது. நம்முடைய நாட்டு நிலைமையை அநுசரித்து ஒரு குறிப்பான திட்டம் இருந்தால் மிகவும் திருப்திகரமாயிருக்கும். ஆனால் அப்பரீக்ஷைகள் மிகவும் சிக்கலுள்ளதும், திருப்திகரமாய் நடத்தக்கூடாததுகளுமானதால், அவைகள் இப்பொழுது நம்முடைய டிபார்ட் மெண்டாரால் செய்யக்கூடியவைகளல்ல. ஆனாலும் அவைகளை கூடிய சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

தென்னிந்தியாவிலுள்ள பண்ணைக்காரர்களைக்குறித்தமட்டில், கலந்ததீனிகளுக்கு அகப்படக்கூடிய தீனிப்பண்டங்களை அடியில் வருமாறு பிறிக்கலாம்:—

(1) புல்லுகளும் பசுந்தாள்களும் (2) நெல்வகையறாவைச்சேர்ந்த வைக்கோல்கள் (3) பயறுவகையறா தானியப்பயிர்களின் சக்கைகள் (4) தைலவித்துக்களும் புண்ணாக்குகளும். இதே கிரமமாக இவைகளை அடியில் வருமாறு ஆலோசிக்கலாம்:—

### புல்களும் பசுந்தாள்களும்.

ரஸமுள்ளவைகளாதலால், பால்ஜாஸ்தியாகவேண்டுமானால், பால் மாடுகளைப் போஷிப்பதில் மிகச்சிறந்தவைகள். ஆனால் தென் இந்தியாவில் அநேக இடங்களில் வருஷம் முழுவதும் அகப்படுவது அரிது. ஆனாலும் மழை மிகுதியான ஜில்லாக்களில் புல்களை உலரவைத்து கோடைகாலத்தை தாட்டுவதற்கு சேர்த்துவைத்துக்கொள்ளுவது பிரயாசமல்ல.

வைக்கோல்களைக் காட்டிலும் அவைகளின் பசுந்தாள்களில், வெடியுப்பு வாயுவில்லாத வஸ்துக்களை விட மாமிசவர்த்தினிகள் அதிகமாயிருக்கின்றன. தவிர, பசுந்தாள்களிலுள்ள மாமிசவர்த்தினி வஸ்துக்கள் பெரும்பான்மையும் ஜீரணிக்கக்கூடியவைகளாதலால் அவைகள் மிகச் சிறந்தவை.

### நெல்போன்ற பயிர்களின் வைக்கோல்கள்.

நெல்போன்ற பயிர்களின் வைக்கோல்கள், தென்னிந்தியாவிலுள்ள அநேக கால்நடைகளின் முக்கிய ஆதாரமாயிருக்கின்றது. இவைகள் கம்மியான மாமிசவர்த்தினி வஸ்துக்களோடு நிறைந்த உஷ்ணங் கொடுக்கக்கூடிய பதாரத்தங்களை உடையன; உதாரணமாக ராகித்தாள், வைக்கோல், சோளத்தட்டு இவைகளில் உஷ்ணங் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களுக்கு மாமிச வர்த்தினிகள் பதினான்கில் ஒரு பங்கு ($\frac{1}{14}$) முதல், இருபதில் ஒருபங்குவரை ($\frac{1}{20}$) இருக்கின்றன. ஆனால் கடினவேலைசெய்யும் எருதுகளுக்கு ஆறில் ஒருபங்கு இருக்கவேண்டு மாகையால் மேற்கண்டதாள் வைக்கோல், தட்டுகள் மாத்திரமே போதுமான தீனிகளல்ல என்பது தெளிவாகிறது. இவைகளில் ஸரஸமாகவும், அதிகமாகவுமுள்ள உஷ்ணங் கொடுக்கக்கூடிய பதார்த்தங்கள் இருக்கின்றன. ஆகையினால் இவைகளோடு, பருத்திக்கொட்டை, கடலைப் புண்ணாக்கு, முதலான மாமிசவர்த்தினிகளை ஜாஸ்தியாக உடைத்தான பதார்த்தங்களை கலந்துகொள்ளுவதினால், சுலபமாய் நமக்குவேண்டிய தீனிப்பண்டங்களை உண்டாக்கிக்கொள்ளலாம். நெல் முதலிய பயிர்களின் பொட்டுக்களில் அவைகளின் தட்டுக்களைக் காட்டிலும் அதிக மாமிச வர்த்தினி இருக்கின்றது.

### காய்; தானியப் பயிர்களின் சக்கைகள்.

காய், தானியப்பயிர்களின் சக்கைகள், நெல்போன்றவைகளின் வைக்கோல்களைவிட அதிக மாமிச வர்த்தினிகளை உடையன. ஆகையால் அவைகள் அதிக பலத்தை கொடுக்கக்கூடியவை. இவைகளின் காய்களும் இலைகளும் ரொம்பவும் அதிகமான மாமிசவர்த்தினி வஸ்துக்களை உடையனவாகையால், அவைகளை தாழ்மையான தீனிகளுடன் சேர்த்து நல்ல கலப்புத்தீனிகள் செய்ய உபயோகப்படுத்தலாம். கடலைச் சக்கை மாத்திரம் மேற்சொன்னவைகளில் சேராது. ஏனென்றால் அவைகளின் காய்களும் இலைகளும் சோளத்தட்டைக்காட்டிலும் கொஞ்சம்தான் அதிக தரமுள்ளது. காய் தானியங்களின் விதைகள் ஜீரணிக்கக்கூடிய அதிக மாமிசவர்த்தினிகளை உடையன. ஆகையால் அவைகள் ஸரஸமாக அகப்படுமானால், சாரமற்ற தீனிகளை பலப்படுத்துவதற்கேற்றவை.

### தைல வித்துக்கள்.

அவைகளில் மிகுதியாக உள்ள கொழுப்பினால் சிறந்தவை. அவைகளில் சாதாரணமாக, மாமிசவிருத்தி பதார்த்தங்களும் விசேஷமாயிருக்கின்றன. ஆகையால்தான் அவைகளில் தின்னக்கூடியவைகள் சாரமற்றத் தீனிப்பண்டங்களோடு சேர்க்க உபயோகப்படுகின்றன. எண்ணெய் எடுப்பதற்கு வேண்டுவதைக்காட்டிலும் மிகுதியான விளைவு இருந்தா

லொழிய, அவ்வித்துகளையே ஆகாரமாகக்கொடுப்பது செட்டான விஷயமல்ல. எருதுக்கு, தீனிகளில் வேண்டிய தைலாம்சம் மிகவும் கொஞ்சம். இதை எல்லாவிதத் தீனிகளும் ஏறக்குறைய உடையதா யிருக்கின்றன. ஆகையால் தைலவித்துகளையே அதிக மாக பிராணிகளுக்கு ஆகாரமாகக் கொடுத்தால், ஜாஸ்தி தைலமானது ஜீரணமாகாமல் வெளியே வந்து விடுவதோடுகூட, எருவாகவும் உபயோகமில் லாதலால் வீணாகப்போய்விடுகின்றது. இவ்வித்துக் களை செட்டாக உபயோகப்படுத்துவது எப்படி என் றால், அவைகளிலிருந்து எண்ணெய் எடுத்து விட்டு புண்ணாக்கைமாத்திரம் பிராணிகளுக்கு உபயோகப் படுத்துவதே. அப்பேற்பட்ட புண்ணாக்குகளில் மூந்தி வித்துக்களிலிருந்த மாமிச வர்த்தினிகளும் இருப்ப தோடுகூட, பிராணிகளுக்குவேண்டிய வண்ணம் எண்ணெயும் இருக்கிறது.

தென் இந்தியாவில் ஆடுமாடுகளுக்கு தீனியாக உப யோகப்படுகிற முக்கிய தைலவித்து, பருத்திக்கொட் டையே. அவற்றில் நூற்றுக்குப் பதினறு முதல் 21 வரை மாமிசவர்த்தினிக ளிருக்கின்றன. ஆனல் ஒவ்வொரு (பருத்திக்கொட்டை) தினுசின் தராதர மும் அதோடு ஒட்டிக்கொண்டிருக்கும் பஞ்சின் சேஷ த்தைப் பொருத்திருக்கிறது. அந்தப் பஞ்சுப்பொரு ளானது ஜீரணிக்கக்கூடியதல்ல. பஞ்சுப்பொரு ளோடுகூடின கொட்டையானது பஞ்சேயில்லாத தனிக்கொட்டையைக்காட்டிலும் மதிப்புக்குறைவுள் ளது.

அநுபோகத்தில், தென் இந்தியாவில்,சாமானியமாய் அகப்படக்கூடிய, தீனிக்கு யோக்கியமான புண்ணாக்கு வேர்க்கடலைப் புண்ணாக்கே. அதில் மாமிசவர்த்தினி வஸ்துக்கள் மிகவும் ஜாஸ்தியாக, சுமார் 100-க்கு 50 திட்டம் இருப்பதுடன் சுமார் 100-க்கு 8 கொழுப்பு மிருக்கிறது. ஆகையால்தான் அது மிக்த்திறமான தும் சகலமும் அடங்கிய தீனிப்பொருளாக இருப்ப துடன், பண்ணைக்காரன் மாடுகளுக்குக் கொடுக்கும் சாதாரண தீனியை பலப்படுத்தும் ஒரு பொருளாக இருக்கிறது. தீனிக்கு யோக்கியமான மற்ற புண்ணாக் குகள் மாமிசவிருத்திப் பதார்த்தங்களில் சாதாரண மாக குறைவாகயிருந்தபோதிலும், இதேமாதிரி தன் மையுள்ளதுகளே. அகப்படும் இடங்களில் அவைக ளையும் தீனியாக உபயோகப்படுத்தலாம்.

பிராணிகளுக்குக் கொடுக்கப்பட்ட தீனிகளாலுண் டான எருவின் சாராமிசத்தையும் மறக்கூடாது. அவ் வெருவிலுள்ள வெடியுப்புவாயு (Nitrogen), சாம்பல் சாரம் (Potash), பாஸ்வரக்காடி (Phosphoric acid), இவைகள் வீணாகப்போகிற தில்லை. ஆனல் வளராத வும், பாலாவது, ரோமமாவது கொடுக்காத பிராணிக ளுடைய மல மூத்திராதிகளிலிருந்து அந்த சத்துக் கள் யாவையும் மீட்டு நிலத்துக்கு எருவாக உபயோ கப்படுத்திவிடலாம். இப்படியிருக்க குடியானவன், சரியானபடி தன் கால்நடைகளின் எருவைச்சேர்த்து, அதைத்தக்கபடி தன் நிலத்தில் உபயோகிப்பானாகில். அக்கால் நடைகளுக்குத் தக்கத் தீனிபோடாதது செல வைச் சாக்கிட்டதாக ஏற்படாது.—விவசாயபஞ்சாங் கம்.

# REVIEW OF THE PRESS
## பத்ரிகை ஆராய்ச்சி.

### The Extension of Learning.

**வித்யாபிவ்ருத்தி**:—இதுவிஷயமாய் ஹிதகாரி ணியில் ஒரு வ்யாஸம் இருக்கிறது. இங்க்லாந்தில் ஜனங்களுக்குள் ஒற்றுமை, மதாபிமானம், தேசா பிமானம், பாஷாபிமானம், இவைகள் அதிகமாயிருக் கின்றன ; இந்த குணங்கள் இந்தியர்களிடம் இருந் தாலும் அவைகள் வரவர க்ஷீணித்துக்கொண்டு வருகின்றன என்று ஷ பத்ரிகை கூறுகிறது. இதற் குக் காரணம் இங்க்லாந்தில் பத்ரிகைகள் அதிகமா யிருப்பதால் அந்த தேசம் எல்லா விஷயங்களிலும் வ்ருத்தியடைந்து வருவதே என்கிறது.

பத்ரிகைகளைப் படிப்பதால் ஓரிடத்திலுள்ள ஜனங்கள் மற்றோரிடத்தில் நடக்கும் விஷயங்களை அறிய ஸுலபமாயிருக்கிறது. மனிதன் விவேகியா வதற்கு வழி அவனுக்குப் படிப்புடன் அனுபோக மிருப்பதே. அனுபோக மில்லாவிட்டால் எந்தக்கார் யத்தையும் நன்றாய்ச் செய்வது கஷ்டமாகும். அனு போகமென்பது என்ன ? "ஒருவன் ஒரு விஷயத்தை யறிந்து அதைத் தானே அனுபவித்துப் பிறர் அதை அனுபவிக்கப் பார்த்துப் பிறகு அவ்விஷயத்திலுள்ள ப்ரயோசனத்தை நிர்ணயிக்கிறதே அனுபோகமாகும்.

இந்த அனுபோகத்தையடைவதற்கு ஒவ்வொருவரும் விவேகிகளுடன் பழகுதலும், தேசசரித்ரங்களைப் படிப்பதும் தேச வர்த்தமானங்களை யறிவதும் அவச்யமானவை. இவைகளால் நமது அறிவுவிசாலமடைகிறது: இதற்குப் பத்ரிகைகள் படிப்பது ரொம்ப ஸாதகமானது. பத்ரிகையை நாம் படிக்கும்போது பலருடைய கொள்கைகளை அறிகிறோம். அனேக தேசங்களில் நடக்கும் அதிசய ஸங்கதிகளைத் தெரிந்துகொள்கிறோம். பற்பல நாட்டாரின் ஆசாரங்களையும் குணாதிசயங்களையும் க்ரகித்துக்கொள்ளுகிறோம். நம்முடைய ஆசாரங்களையும் பிரதேசத்தார்களின் ஒழுங்குகளையும் சீர் தூக்கி நம்மிடம் ஏதேனும் துர்வழக்கங்களிருந்தால் அவைகளைக் களைந்து அன்னியர்களிடமுள்ள நல்ல வழக்கங்களை ஸ்வீகரிக்கிறோம். பத்ரிகைகளை வாசிப்பதினால் இலக்கியப் பயிற்சியும் ஏற்படுகிறது. சரீரத்திற்கு எப்படி ஆகாரம் அவச்யமோ அப்படியே மனவிற்குப் பத்ரிகையிலுள்ள விஷயங்கள் ஆகாரமாயிருக்கின்றன என்று ஷை பத்ரிகை கூறுகிறது.

இன்னும், பத்ரிகைகளை இரவல்கொடுப்பதைப் பற்றி எழுதுகிறது. சில இடங்களில் நிலம் ஒருவனுக்கு ஸொந்தமாயிருக்க அதை அனுபவிப்பவன் வேறொருவனாயிருப்பதுபோல் சில இடங்களில் பத்ரிகை வாங்குவோர் ஒருவராயும் அதை வாசிப்போர் வேறொருவராயும் இருக்கிறார்கள். ஒருவர் தாம் வாங்கும் பத்ரிகையை பிறருக்குக் கொடுத்து உதவலாம் என்றாலும், தாம் அதைப் படித்துப்பார்த்து அதிலுள்ள இன்பத்தை யனுபவியாமல் பிறரிடம் கொடுப்பது தவறாகும் என்கிறது.

பெண்கல்வியைப்பற்றி ஷை பத்ரிகை பின் வருமாறு சொல்கிறது. இந்திய ஸ்த்ரீகளில் அநேகருக்குப் படிப்பதென்றால் கஷ்டமாயிருக்கிறது; வாசிப்பிலுள்ள அருமை பெருமைகளை அறிந்திருந்தால் அவர்கள் ஆவலுடன் படிப்பார்கள் என்பது நிச்சயம். படித்த புருஷர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டுமாதர்களுக்கு உத்தம கல்வியை போதிப்பார்களானால் இந்திய ஸ்த்ரீகள் அதிசீக்ரத்தில் படிப்பாளிகளாகி விவேகம் வ்ருத்தியாகி குடும்ப கார்யங்களையும், இகபர ஸாதகமான தர்மங்களையும், நன்றாய்த் தெரிந்கொண்டு ஸ்த்ரீபுருஷர்களிருவரும் ஸமஸந்துஷ்டியுடன் ஸ்நேகமாயிருந்து ஸம்ஸார தர்மத்தை நடத்த மார்க்கம் ஏற்படும்.

## Condition of the Weavers.

நெசவு தொழில் புரிவோரின் நிலைமை:—இது விஷயமாய் "வைச்யமித் திரன்" ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறது. அதில், இந்தியாவின் நெசவுத் தொழில் முன்பு மேலாநிலைமையில் இருந்ததென்று சரித்ரங்களால் தெரியவருகிறதென்றும், சில நூற்றாண்டுகளாக மேல்நாட்டுத் துணிகள் இந்தியாவில் பரவ ஆரம்பித்த பிறகு உள்நாட்டு நெசவுத் தொழில் குறைவுபட்டு அநேக குடும்பங்கள் எளிய நிலைமைக்கு உள்பட்டு பரிதவிக்கின்றன என்றும் கூறுகிறது. பின்பு கைத்தரி நெசவு முழுவதும் மறைந்து போக இடமில்லை என்பதற்குக் காரணம் கூறுகிறது. மேல்நாட்டில் யந்த்ர உதவிகொண்டு நெய்து எவ்வளவு குறைந்த விலைக்கு விற்க ஸாத்யப்பட்ட போதிலும் இந்தியாவில் கைத்தறிகளால் நெய்யப்படும் நாணயமானவும் மதிப்புள்ளவுமான துணிகளைப் போல் நெய்ய சிறிதும் ஸாத்யப்படாது. மேல் நாட்டாரின் உடைகளுக்கு யந்த்ர உதவி கொண்டு நெய்யும் துணிகள் இன்றியமையாதவை. அவர்களுக்குக் கைத்தறி நெசவுதுணிகள் தேவையிரா. ஆனால் இந்தியர்களுக்கோ அப்படியல்ல. சிற்சில விஷயங்களுக்குமட்டும் மேனாட்டுத்துணிகளை உபயோசப்படுத்தினாலும், சுபகாலங்களில் உள்நாட்டு கைத்தறித் துணிகளை வாங்க வேண்டுவது கட்டாயமான இந்து நாகரீகமாகும். பரம ஏழைகளாக இருந்து நித்ய உபயோகத்திற்கு மேனாட்டுத் துணிகளை வாங்கிக்கொண்டிருந்தபோதிலும், கல்யாணம் முதலிய சுப விசேஷகாலங்களில் உள்நாட்டுக் கைநெச்வுத் துணிகளை வாங்காதிரார்கள். இந்திய ஸ்த்ரீகளில் பெரும்பான்மையோர் கைத்தரி நெசவுத்துணிகளையே உபயோகப்படுத்திவருகிறார்கள் என்று சொல்லுகிறது. ஸ்வதேசிய உணர்ச்சி இந்தியாவில் பரவின சில வருஷகாலமாக உள் நாட்டு கைத்தறி நெசவும் யந்த்ர நெசவும் வ்ருத்தியடைந்து வருகின்றன. இப்படி இரண்டும் வ்ருத்தியாவதினால் நெசவுத் தொழிலாளரில் ஏழைத் தொழிலாளிகளின் நிலைமையும் மாறபடவேண்டியது ந்யாயமாயிருக்க அப்படியில்லாமல், அந்த ஜாதியாரில் தலால்களும் (ப்ரோக்கர்) ஜவுளி வ்யாபாரிகளும் மட்டும் த்ரவ்ய அபிவ்ருத்திபெற்று வருகிறார்கள். எழை நெசவுக்காரர்கள் கஷ்டப்பட்டுச் செய்துள்ள துணிகளை தலால்களும், ஜவுளி வர்த்தகர்களும் சிறிதும் இரக்கம் காட்

டாமல்குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டுபோய்விற்று அதிக லாபமடைகிறார்கள். ஏழைத் தொழிலாளிகள் குறைந்த விலைக்கு விற்பானேன் என்றால் அவர்கள் தங்கள் பசி நோயின் கொடுமையால் தங்கள் சரக்குகளைப் பொறுத்திருந்து தக்கவிலைக்கு விற்க கூடாமல் வ்யாபாரிகள் கேட்கும் விலைக்கு விற்றுவர வேண்டியிருக்கிறது. தங்கள் தொழிலில் கிடைக்கும் அற்ப கூலியைக்கொண்டு ஸகாயமான விலைக்குக் கிடைக்கும் மட்ட ஸாமான்களை வாங்கி தினம் ஒன்றுக்கு ஒரு வேளை புஜித்தும் மதுபான முதலிய மயக்க வஸ்துக்களை உபயோகப்படுத்தியும் ஸுகாதாரமற்று பற்பல நோய்களுக்குள்பட்டு கஷ்டத்துடன் ஜீவிக்கிறார்கள். சிலர் மேனாட்டுத் துணிகளை வாங்கி, கோயில் வாசல்களிலும் ஜனங்கள் கூடும் முச்சந்திகளிலும், அந்திச் சந்தைகளிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் விரித்துக்காட்டி விற்று அதனால் கிடைக்கும் அற்ப லாபத்தால் ஜீவிக்கிறார்கள். இதை மதுரையில் பார்க்கலாம். சிலர் இவ்வாறு நிர்வகிக்கக் கூடாமல் தங்கள் குடும்பத்துடன் வெளியேறி ஊர்கள் தோறும் சென்று பிச்சை எடுத்து சத்ரம் சாவடிகளில் தங்கி ஈனத் தொழிலில் ப்ரவேசித்து காலத்தைக் கழிக்கிறார்கள்.

இப்படி கைத்தறிநெசவுக்காரர்களின் நிலைமையைப் பற்றி எழுதிவிட்டு அவர்கள் வ்ருத்தியடைவதற்கு வேண்டியஸாதனங்களைப்பற்றி ஆராய்கிறது.

ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் ஸமீபத்தில்மதுரையில்பேசியபோது நெசவுத்தொழில் செய்யும் வகுப்பார் ஐக்ய நாணய ஸங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு நன்மை பெறவில்லை யென்று சொன்னார். இவ்வகுப்பார் ஐக்ய நாணய ஸங்கங்களை ஸ்தாபித்தல் அவச்ய மென்றும், ஆனால் இந்த ஐக்ய நாணய ஸங்கங்களினால் மாத்ரம் ஏழைகளின் நிலைமை முற்றிலும் மாறிவிட ஹேதுவாகாது என்றும், அவர்கள் கூட்டுறவு வர்த்தக ஸ்தலங்களையும் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும் என்றும் அவைகளின் மூலமாய் ஏழைகள் நெய்யும் துணிகளை ந்யாயமான க்ரயம் கொடுத்து வாங்கி வைத்துக்கொண்டுவிற்பனை செய்யும் வழியைத் தேடவேண்டும் என்றும் சொல்லுகிறது.

நிற்க, இவ்வகுப்பார் கல்வி இல்லாமலே அநேக கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகச் ஸ்வல்பமென்றே சொல்லலாம். அதைநெசவுத் தொழில் வகுப்பாரில் ஒருபிரிவான ஸௌராஷ்ட்ர ப்ராமணர்களென்று சொல்லிக்கொள்ளும் பட்டு நூல்கார ஜாதியார் மட்டும் கவனித்து மதுரையில் தங்கள் ஜாதியாருக்குள் வருமான மகிமை ஏற்படுத்திக்கொண்டு அதன் வரும்படியிலிருந்து சிறுவர் சிறுமிகள் கற்கும்படி ஹைஸ்கூல்வரை பல வித்யாசாலைகளை ஸ்தாபித்துநடத்தி வருகிறார்கள். பரம்பக்குடி, கும்பகோணம், தஞ்சாவூர் முதலிய பெரிய நகரங்களிலுள்ள இவ்வகுப்பினர்களும் இதைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்றும் கூறுகிறது.

மேலும், இப்போது இவ்வகுப்பாருக்கு நல்ல ஸமயம் கிடைத்திருக்கிறது. கவர்ன்மெண்டார் ஜில்லா போர்டுகளுக்கு நெசவுக்காரர்களின் படிப்பு விஷயமாய் விசேஷ கவனம் செலுத்தும்படி உத்தரவு செய்திருப்பதோடு, மாலைப் பொழுதில் விசேஷ ஸ்கூல்கள் வைத்துச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றும், பொதுப் படிப்பைத் தவிர எங்கு தொழிற் படிப்பு அனுபோகத்தில் சொல்லிவைக்கப்போகிறதோ, எங்கு பிள்ளைகள் நெசவுத் தொழிலில் விசேஷத் திறமை காட்டுகிறார்களோ, அங்கு பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப்பு கொடுக்கலாமென்றும், உத்தரவுசெய்கிறார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் நெசவுத்தொழில் வகுப்பாரில் த்ரவியஸ்த்தர்களும் செல்வாக்குள்ளவர்களும் முன்னின்று தங்கள் ஸமூகத்துக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பெற ஜனங்களைத் தூண்டுவார்களானால் நவீன முறையில் நெசவுத்தொழில் விருத்திபெற்று ஏழைகளின் நிலைமை மாறிவிடும்.

## Ground-nut and Cereals.

**வேர்க்கடலையும் நவதான்யமும்.**—தற்காலம் இந்தியாவில் வேர்க்கடலை ஸாகுபடி யதிகமாகி வருகிறது. மற்ற நவதான்யங்கள் பயிர்செய்து குறைவடைந்துபோய் இதனால் ஏழைகளுக்குக் கஷ்டம் அதிகமாகிவிட்டது என்று கடப்பையிலுள்ள ஒரு வ்யாபாரி 'சுதேசமித்திரன்' பத்ரிகையில் குறை கூறியிருக்கிறார். இது விஷயமாய் ஷை பத்ரிகை ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறது. ஷை கடலைப்பயிர் அதிகமாய் ஸாகுபடி செய்வதால் துவரை, உளுந்து, மிளகாய் முதலிய இந்தியர்களுடைய ஆகாரத்துக்கு அவச்யமான பொருள்களின் ஸாகுபடி குறைந்து போய் ஏழைகளுக்குக் கி[illegible]க்காதபடி உயர்ந்த விலைக்கு விற்கப்[illegible]த் தடுப்பதெப்படி?

எந்தப்பயிரினால் அதிகலாபம் கிடைக்கிறதோ, எந்தப் பயிரில்வேலைசெய்து அதிகக்கூலிஸம்பாதிக்கலாமோ, அந்தப் பயிரைத்தானே ஜனங்கள் செய்வார்கள்? பூமிக்குடையவர்களும் வேலைக்காரர்களும் கடலைப் பயிரிலேயே கவனத்தைச் செலுத்துவது ஆச்சரிய மல்ல. கடப்பையில் மட்டுமல்ல, மற்ற ஜில்லாக் களிலும் இந்தப் பயிர் அதிகமாகியும் மற்றப் பயிர்கள் குறைந்தும் வருகின்றன. கடலையைப்போல் பருத் தியும் அந்ய தேசங்களில் விசேஷமாய் வாங்கப்படு கிறபடியால் பருத்திப் பயிரையும் ஜனங்கள் ஆசை யுடன் செய்கிறார்கள்.

இந்தியாவில் விளையும் பொருள்களில் பல அந்ய தேசங்களில் க்ராக்கியாய் விற்பதால் அவைகளை இத் தேசத்தில் அந்ய வர்த்தகர்கள்மலிவாகவாங்கிக் கப்பலி லேற்றிப் பெரும் லாபம் ஸம்பாதிக்கிறார்கள். இந்த லாபத்தில் அநேகமாய் விவஸாயிகளுக்குப் பங்கில்லை. ஏனென்றால் ஷை பொருள்களை ஏற்றுமதி செய்யும் அந்ய தேசத்து கம்பெனிகள் குடிகளிடம் ஒப்பந்தம் பேசி அறுவடைகாலத்தில் மலிவாக வாங்கி அந்ய ருக்கு ஸொந்தமான ரெயில்வேக்கள், கப்பல்கள் மூலயாக வேறு தேசங்களுக்குக் கொண்டுபோய் அங்கே அதிக விலைக்கு விற்கிறார்கள். ஆகையால் லாபத்தில் பெரும்பாகமும் அந்யர்களே யடைகி றார்கள். நம்மவர்கள் அடைகிறதில்லை. கவர்ன் மெண்டார் இதை அறிந்தோ அறியாமலோ ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களை ஒன்று சேர்த்து, அந்ய வியாபாரம் கோடிக்கணக்காய்ப் பெருகிவிட்ட தென்றும், இந்திய விவஸாயிகள் வெள்ளிக் கலப்பை யால் உழுகிறார்களென்றும், பொன்னாணயங்களை வாங்கிப் புதைக்கிறார்களென்றும், பலவிதமாய்த் தப் பெண்ணங்கொண்டு ப்ரமிக்கிறார்கள். என்று சொல் லுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் நமது விளை பொருள்கள் அந்ய தேசங்களுக்குப்போய் விடுவதால், அவைகள் நமது தேசத்தில் ஒன்றுக்கு மூன்றாய் விலையுயர்ந்து விற்று ஏழைகள் ஜீவனத்துக் குப் படாதபாடு படுகி[illegible]ர்கள் என்றும் எழுதுகிறது.

இதற்கு விமோ[illegible] தேடுவதைப்பற்றி எழுது கையில், நமது பொருள்களை அந்யர்கள் வாங்கி விற் பதை நாம் தடுக்க முடியாதாகையாலும், கவர்ன்மெண் டார் கடல் வ்யாபாரத்தைக் குறைக்க இஷ்டப்பட மாட்டார்களாகையாலும், ஷை கடலை முதலிய விளை பொருள்களை வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய் யாமல், யந்த்ரங்களைக்கொண்டு அவைகளை செயற் கைப்பொருளாக்க முயலவேண்டும். உதாரணமாக வேர்கடலையை யந்த்ரங்களைக்கொண்டு எண்ணெ யாக ஆட்டி, எண்ணெயையும் பிண்ணாக்கையும் ஏதேஷ்டமாக நமக்குவேண்டிய வரையில் உபயோ கப்படுத்திக்கொண்டு மிகுந்ததை அந்ய வ்யாபாரிகள் மூலமாகவோ நாமே நேராகவோ வெளியே அனுப்பி விற்பதைத் தவிர வேறு உபாயமில்லை. வேர்க்கடலை யைப்போல கொப்பறை, எள்ளு, ஆழிவிதை முதலிய எண்ணெய் கொடுக்கும் ஸாமான்களையும் பருத்தியை யும் நம் தேசத்திலேயே வைத்துக்கொண்டு எண் ணெயாகவும் துணியாகவும் செய்யவேண்டும் என் கிறது.

"இந்தியா இப்போது உலகத்து மற்றத் தேசங்க ளோடு பிணைக்கப்பட்டுப் போய்விட்டபடியால், நம் சாமான்கள் அந்நிய தேசங்களுக்குச் செல்ல வொட் டாமல் தடுக்க எந்த கவர்ன்மெண்டும் சம்மதிக்கமாட் டார்கள். ஆனால், நம் தேசத்து விளை பொருள்களை செயற்கைப் பொருள்களாக்கக் கூடாதெனத் தடை செய்வாரில்லை. இப்படி செயற்கைப் பொருள் உண்டாக்கும் சாமர்த்தியம் நம் தேசத்தாருக்கு எப் போது உண்டாகுமோ கடவுளே யறிவார். ஏழை களின் கஷ்டம் அதிக சம்பாத்தியத்தால் நீங்கவேண் டும். விவஸாயத்தைச் சீர்ப்படுத்தி நவதானியங்களின் உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும். நம் கஷ்டங் களை நினைத்துக் குறைப்படுவதில் பிரயோஜனமில்லை, எதிர்ப்படும் நிலைமைகளை ஆண்மையுடன் எதிர்த்துப் பரிகாரங்கள் தேடிக்கொள்ளவேண்டும். "முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்."

# BOYS' SECTION.

## பையன்கள் பகுதி.

### A Motor Trip from Bombay to Calcutta.

பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு மோட்டாரில் ப்ரயாணம்:—பம்பாயில் மெஸர்ஸ் ஹில், ஸாயர் அண்ட் கோ என்று ஒரு கம்பெனியிருக்கிறது. அதற்கு கல்கத்தாவிலும் ஆபீஸ் உண்டு. அந்தக்கம்பெனியின் மானேஜரும் சொந்தக்காரருமான மிஸ்டர் பி. வி. ஸாயர் என்பவரும் மிஸ்டர் ஸ்மித் என்னும் ஒரு இஞ்சினியரும் சென்ற மார்ச்சுமாஸம் பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு வழி முழுவதும் மோட்டார் வண்டியிலேயே ப்ராயணம் செய்தார்கள். இரண்டு நகரங்களுக்கும் இடையிலுள்ள தூரம் 1,420 மைலாகும். இந்த தூரத்தை புறப்பட்டது முதல் 79-மணி நேரத்தில் ப்ரயாணம் செய்துவிட்டார்கள். வழியில் சில கஷ்டங்கள் நேர்ந்தனவாம். சில ஸமயங்களில் பாதைதெரியாமல் போய்விட்டதாம். ஏழுதடவை ரப்பர் டையர் கிழிந்துபோயிற்று. இரவில் இருட்டாயிருந்தது. நதிகளைக்கடக்க வேண்டியிருந்தது. சாலைகள் நல்லவைகளாயிருக்கவில்லை. மோட்டார் சில ஸமயங்களில் மணிக்கு 55 மைல் வேகம் போயிற்று. அப்படியே எப்போதும் போகமுடியவில்லை. அவர்கள் சென்ற பட்டணங்களையும் கல்கத்தாவுக்குப் போனதையும் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

மார்ச்சு 29௳ சனிக்கிழமை

பம்பாயை விட்டுப் புறப்பட்டது. காலை 4-30. இகாட்புரிக்குவந்தது காலை 8-54. மௌக்குவந்தது இரவு 11-40.

30-௳ ஞாயிறு,

மௌவை விட்டுப் புறப்பட்டது இரவு 2-20. கூனுவுக்கு வந்தது காலை 10-43. ஜான்விக்குவந்தது மாலை 4-10. கான்பூருக்குவந்தது இரவு 10-20.

31௳ திங்கள்

கான்பூரை விட்டுப்புறப்பட்டது காலை 3-20. அலகபாத்துக்கு வந்தது காலை 5-12. காசிக்கு வந்தது காலை 11-45. டேரிக்குவந்தது மாலை 3-16.

ஏப்ரல் 1௳ செவ்வாய்

அஸான் ஸாலுக்குவந்தது மாலை 5-0. கல்கத்தா ஹௌராபாலம் வந்தது காலை 11-30.

### Advice to Boys.

சிறுவர்களுக்கு நற்போதனை:—1. ஸ்வல்பமாக வாக்குதத்தங்களைசெய். 2. எப்போதும் உண்மையே பேசு. 3. யாரைக்குறித்தும் எக்காலத்தும் கெடுதியாகப் பேசாதே. 4. நல்ல ஸகாவாஸஞ் செய். 5. நீ ஏற்றுக்கொண்ட தொழில்களைக் குறித்த காலத்திற் செய்யத்தவறாதே. 6. தர்மகுணமுள்ளவனாயிருப்பதற்கு முன் நீ நீதியுள்ளவனாயிரு. 7. எக்காலத்திலும் எவ்விதச் சூதாட்டத்திலும் ஈடுபடாதே. 8. எவ்வித லாகிரி வஸ்துக்களையும் உபயோகிக்காதே. 9. நல்ல நடத்தை எவ்விஷயங்களுக்கும் மேலானது. 10. உன்னிடத்து யாதேனும் ரகஸ்ய மிருந்தால் அதை வெளியிடாதே. 11. உனக்கு ஸாத்யமாகும் வரையில் எக்காலமும் நீ கடன் வாங்காதிரு. 12. நீ ஸந்தோஷ முள்ளவனாயிருக்கவேண்டுமானால், மாசற்றவனாய் சிக்ஷைபடியாயிரு. 13. நீ வ்ருத்தியாகி வாழவேண்டுமானால், த்ரவியத்தைச் சேகரிக்க அவஸரப்படாதே. 14. ஒருவரிடத்திற் பேசும்போது அவர் முகத்தைப்பார்த்து பேசு. 15. உனக்கு மனைவியைத் தாங்குஞ் சக்திவரும் பர்யந்தம் நீ விவாகஞ்செய்து கொள்ளாதே. 16. உனக்கு ஆபத்து நேர்ந்தாலொழிய உன் வருமானத்திலேயே நீ ஜீவிக்க ப்ரயாஸைப்படு. 17. நீ கிழவனாகிச் செலவுசெய்யும் பொருட்டு பால்யபருவத்திலேயே த்ரவியத்தை சேகரித்துக்கொள். 18. உனக்குத் தீர்க்குஞ் ஸாமர்த்திய மிருந்தாலொழிய நீ கடனில் மூழ்காதே. 19. நல்ல ஸகவாசமும் நல்ல ஸம்பாஷணையும் நீதி நெறியின் நாடிகளாம். 20. உன் செய்கைகளே உன் குணத்தை மாற்றும். 21. உன்னைக்குறித்து யாராவது கெடுதியாகப் பேசினால், அதை ஒருவரும் நம்பாதிருக்கும் விதமாக நடந்து கொள். 22. நீ நித்ரை செய்யப்போகு முன் பகற்காலத்திற் நீ செய்த செய்கைகள் யாவற்றையுங் குறித்துச்சிந்தனைசெய். 23. ஒருபோதும் சோம்பலாயிராதே. 24. உன் கைகளால் ப்ரயோஜனமான தொழில்களைச் செய்ய ஸமயம் வாய்க்காவிடத்து, உன் மனதை சீர்திருத்துந் தொழில் ப்ரவ்ருத்தி செய்.

### Platform Tickets.

ப்ளாட்பாரம் டிக்கட்டுகள்:—ரயில் ஏறிப்போகும் நமது ஸ்நேகிதர்கள், பந்துக்கள் முதலியவர்களை வழியனுப்புவதற்காக நாம் அவர்களுடன் ஸ்டேஷன்

வரையில் கூடப்போவது வழக்கம். ரயிலில் வருகிறவர்களை அழைத்துக்கொண்டு போவதற்கும், அல்லது அவர்களைக் காண்பதற்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கு நாம் போவதுண்டு. சிறிய ஸ்டேஷனாக விருந்தால் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சொல்லிக்கொண்டு ஸ்டேஷன் ப்ளாட் பாரத்துக்குப் போகிறோம். பெரியஸ்டேஷன்களாயிருந்தால் அப்படிப்ளாட்பாரத்துக்கு போவதற்கு ப்ரத்யேகமாய் ஒரு டிக்கட்டு வாங்கிக்கொண்டு போகவேண்டும். ஆனால் இங்க்லாந்தில் இந்த வருஷம் வரையில் ஒரு ரயில்வேயிலும் ப்ளாட்பாரம் டிக்கெட்டுகள் கிடையாதாம். இந்த வருஷந்தான் க்ரேட்வெஸ்டர்ன் ரெயில்வே கம்பெனியார் ப்ளாட்பாரம் டிக்கட் ஏற்பாட்டை ஒரு ஸ்டேஷனில் அனுஷ்டித்துப் பார்த்தார்களாம். அது ரொம்ப லாபகரமாயிருந்ததால், தங்கள் கம்பெனியிலுள்ள பெரியஸ்டேஷன்களில் அந்த ஏற்பாட்டை அனுஷ்டிக்கப்போகிறார்கள். இந்த ஏற்பாட்டால் ரயில்வேஷ்டேஷனில் அதிக கூட்டம் குறைகிறது. நல்ல வரும்படியும் வருகிறதாம். மற்ற ரயில்வே கம்பெனியாரும் இந்த ஏற்பாடு எப்படியிருக்கிறதென்று கவனித்து வருகிறார்களாம். ஐரோப்பாவில் ஜெர்மனி, ப்ரான்ஸ் முதலிய தேசங்களில் இந்த ஏற்பாடு வெகுகாலமாக நடந்து வருகிறது. ஆனால் இந்த ஏற்பாட்டால் பந்துக்களையும் ஸ்நேகிதர்களையும் வழியனுப்பப் போகும் ஏழைகளுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்குமென்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்களாம்.

## Wireless Telegraphy.

**கம்பியில்லாத தந்தி:**—ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு அவஸரமான ஸமாசாரம் அனுப்பவேண்டுமானால் தந்தியடித்துத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தந்திமூலமாய் ஸமாசாரம் வெகு துரிதமாய்ச் செல்வதற்கு ஸாதகமாயிருப்பது மின்ஸாரம். இந்த மின்ஸார கம்பிகளின் மூலமாய் எல்லாவிடங்களுக்கும் ஸமாசாரம் போகிறது. இப்போது சில வருஷகாலமாய் கம்பிகளில்லாமலே தந்திஸமாசாரமனுப்பப்பட்டு வருகிறது. அதைக் கண்டுபிடித்தவர் மார்கோனி என்பவர். அவர் அதைக்கண்டு பிடித்த விதத்தைக் கீழே தெரிவிக்கிறோம்.

"ஐம்பது வருஷங்களுக்குமுன் ஓர் சாஸ்த்ர சோதகன் மின்ஸார அலைகள் உலகத்திலிருக்கின்றன என்று ஸித்தாந்தப்படுத்தினான். ஷை அலைகள் மரம் மண், கல் முதலிய பதார்த்தங்களின் மூலமாய் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குத் தடங்கலில்லாமல் செல்லுமென்று கண்டுபிடித்தான். மின்ஸார அலைகள் மனிதர்களைத் தாண்டிச் செல்லுகையில் அவர்களுக்கு அவைகளின் ஸ்பர்சம் விளங்காது. அவன் ஆராய்ச்சி செய்தபிறகு மார்க்கோனி என்ற சாஸ்த்ரஞ்ஞன் ஷை அலைகளைக்கொண்டு வர்த்தமானங்களை யனுப்பவும் வரவழைத்துக்கொள்ளவும் முடியுமானால் உலகத்துக்கு மிகுந்த நன்மை யுண்டாகுமென்று ஊகித்தான். இது ஸுலபத்தில் ஸித்தியாகவில்லை. அவனுடைய புத்தியைச் செலவழித்து ஆராய்ச்சி செய்தான். பட்ட ச்ரமத்துக்கு அளவில்லை. தன்னுடைய தோட்டத்தில் நின்று 30 கஜங்கள் வரையில் ஸமாசாரங்களை யனுப்பவும் க்ரகிக்கவும் கற்றுக்கொண்டான். பிறகு ப்ரயத்நம் செய்ததில் இரண்டு மைல் வரையிலும், அதன் பிறகு 9 மைல் தூரமும், அதற்கப்புறம் 30 மைல் வரையிலும், மின்ஸார அலைகளை அனுப்புவதும், வரவழைத்துக்கொள்ளுவதுமாய் அப்யாஸித்தான். கார்ன்வாலிலிருந்து வட அமெரிக்காவுக்குக் கிழக்கிலுள்ள நியூபௌண்ட்லாண்ட் என்னும் தீவுவரையில் ஸமாசார மனுப்பும் மார்க்கம் கிடைத்தது. இந்தக் கார்யம் நிறைவேறவே மார்க்கோனி பட்ட ஸந்தோஷத்துக் களவில்லை. அவனுடைய புத்தி சாதுர்யத்தாலுண்டான யுக்தியுள்ள கார்யம் இப்பொழுது ப்ரபஞ்சமெல்லாம் ப்ரபலித்திருக்கிறது. மேதாவிகளின் மூளை உயர்தரமான கார்யங்களைக்கண்டு பிடிப்பதிலேயே ஈடுபட்டிருக்குமென்பது இதனால் நிச்சயப்படுகிறது. சாஸ்த்ரஞ்ஞனால் கண்டு பிடிக்கப்பட்ட மின்ஸார அலைகளைக் கொண்டு தேச தேசங்களில் நடக்கும் ஸமாசாரங்களை எளிதி லறியுமாறு ப்ரயத்நம்செய்து வருகிறார்கள். இவ்வதிசயத்தைக் கண்டு ஆநந்த மடையாதவர்களில்லை.

## Sir A. Seshiah Sastrial.

ஸ்ர். ஏ. சேஷைய சாஸ்த்ரிகள்:—ஸர் ஏ. சேஷையா ஸாஸ்த்ரியின் பிறந்தநாள் கொண்டாட்டம் ஸமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற்றது. திவான் பகதூர் வி. நாகமய்யா அக்ராஸனம் வகித்தார். மிஸ்டர் பி. ஸுப்ரமண்ய சாஸ்த்ரியால் போர்ட்டர் டவுன் ஹாலுக்குக் கொடுக்கப்பட்ட ஸர் சேஷய்ய சாஸ்த்ரியாரின் உருவப்படத்தை சேர்மன் திறந்து வைத்து, அவருடைய ஜீவசரித்ரத்தைப் பற்றிச் சிறந்ததோர் உபந்யாஸம் செய்தார்.

## LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### Dress for Female Convicts.

பெண்பிள்ளைக் கைதிகளின் உடை.—ஆனரெபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை ஸமீபத்தில் நடந்த சென்னைச் சட்ட ஸபை மீட்டிங்கில் ஜெயில்களிலே கைதிகளாயுள்ள பெண் பிள்ளைகளின் உடுப்பு விஷயமாய்க் கேட்ட கேள்வி ப்ரயோஜனமற்றுப் போகவில்லை. இப்போது அவ்விஷயத்தைக் குறித்து கவர்ன்மெண்ட் உத்தரவு ஒன்று பிறந்திருக்கிறது. அதில் ஜெயில்களிலுள்ள பெண் பிள்ளைக் கைதிகளுக்கு, இனிமேல் 6-கஜம் துணிக்குப் பதிலாய் 8-கஜம் துணி ஸப்ளை செய்யப்படுமென்றும், மகமதிய கிறிஸ்தவப் பெண் பிள்ளைகள் பாவாடையும் ரவிக்கையும் போட்டு மேலே தாவணி போட்டுக்கொள்ளும்படியாய் அவர்களுக்கு உடுப்பு ஸப்ளை செய்யப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

### Heavy Marriage Expenses.

கல்யாணத்தில் அதிகப் பணச்செலவு.—நம் இந்தியா தேசத்தில்தான் கல்யாண விஷயமாக அதிகப் பணம் செலவிடுகிறார்களென்று எண்ணி யிருந்தோம். ஆனால் ப்ராஞ்சு தேசத்தில் 'ப்ரிட்டனி' என்னும் மாகாணத்தைச் சேர்ந்த அநேக இடங்களில் கல்யாண விஷயமாக அதிகப் பணம் செலவழிக்கிறதாகத் தெரியவருகிறது. அவ்விடத்தில் வருஷத்திற்கு ஒருவாரந்தான் கல்யாண காலமாம். அந்த வாரத்திற்குள் ஆகவேண்டிய கல்யாணங்களெல்லாம் முடிந்துவிட வேண்டுமாம். கல்யாண வாரத்தில் விருந்திற்குக் குறைச்சலில்லையாம். பாட்டுக்கச்சேரி முதலிய கூத்துகளெல்லாம் அதிகமுண்டாம். ஜனங்கள் சேர்த்துவைத்த பொருள்களையெல்லாம் அந்த வாரத்தில் விருந்து செய்வதில் செலவழிப்பார்களாம். உடையோ பழைய காலத்து உடைதானும். கல்யாண தினத்தன்று அவ்வூர் ஜனங்களை அந்த ஊரில் பார்ப்பவர்களுக்கு முன்னூறு வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவில் ஜனங்கள் எப்படி யிருந்தார்களென்று நன்றாக விளங்குமாம்.

### A Memorial to Lady Hardinge.

லேடி ஹார்டிஞ்சுக்கு மேமோரியல்.—டெல்லி விபத்தில் லேடி ஹார்டிஞ் காட்டிய தைர்யத்தையும் தன் மறுப்பையும் உணர்ந்தவர்களாய் இந்தியாவில் பல பாகத்திலுமுள்ள இந்திய ஸ்த்ரீகளின் பேரால் அவருக்கு மெமோரியல் ஒன்று வாசித்துக்கொடுக்க ஆங்காங்கு முயற்சிகள் செய்யப்பட்டு வந்தது. இப்போது எல்லா இந்திய ஸ்திரீகளின் மெமோரியல் லேடி ஹார்டிஞ்சுக்குக் கொடுத்தாய்விட்டது. அந்த மெமோரியல் பத்ரத்தில் (1) ராஜப்ரதிநிதி தம்பதிகள் பட்டத்து யானையின் மேல் வீற்றிருக்கும் கோலம்; (2) இந்திய மன்னர்கள் ஊர்வலம் வரும் கோலம்; (3) குடப்மைனர் எனப்படும் ப்ரஸித்திபெற்ற சோரியின் உருவம்; (4) வெடிகுண்டு விபத்து நேரிட்ட ஸ்தலமாகிய சண்ட்னி சௌக்கின் தோற்றம், ஆகிய சின்னங்கள் வெகு அழகாய்ச் சித்ர மெழுதப்பட்டிருக்கின்றன. பர்மாவிலுள்ள ஸ்திரீகளும் மெமோரியல் அனுப்பிக்கொண்டார்கள். அந்த மெமோரியல் 36 அங்குலம் நீளமுள்ள யானைக் கொம்பில் தங்க மூடிபோட்டு அனுப்பப்பட்டது. அந்த யானைக்கொம்பின் மேல் பின் வருமாறு வரையப்பட்டிருக்கின்றது:—"1912-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 23-ந்தேதியின் ஞாபகார்த்தமாக ஹெர் எக்ஸலன்ஸி லேடி ஹார்டிஞ்சுக்கு இந்திய ஸ்திரீகளால் கொடுக்கப்பட்டது" தங்கத்தினால் அமைக்கப்பட்ட மூடியின்மீதும் கீழ்க்கண்டவாறு வரையப்பட்டிருக்கின்றது:—

"எவளொருத்தி ஈச்வரனை நம்பி, ஈச்வரார்ப்பணமாக அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் பணவுதவி செய்கிறார்களோ, எவளொருத்தி ஆபத்திலும் துன்பத்திலும் பொறுமையுடனிருக்கிறார்களோ அவளுக்கே புண்யம் உரியது. இவைகளே உண்மையானவைகள். இக்குணங்களமையப் பெற்றவர்களே ஈச்வரனுக்குப் பயப்படுகிறவர்கள்"

### Some Don'ts for Wives.

மனைவிகள் செய்யத் தகாதவை.—(1) ரொம்ப பகட்டாகவும் டாம்பீகமாகவும் உள்ள உடைகளைத் தரித்துக்கொள்ளக்கூடாது. அதற்காக ரொம்ப கேவலமான வஸ்த்ரங்களை உடுத்திக்கொள்ளுவதும் ஸரியல்ல.

(1) ரொம்ப உயர்ந்த புடவைகளையுடைய மனைவி

யும், ரொம்ப தையல்களுடைய வஸ்த்ரம் தரித்த புருஷனும் தம்பதிகளாகமாட்டார்கள். சாக்கு சாக்காக புருஷன் உக்ராண அறையில் எவ்வளவு கொண்டு வந்து போடுவானோ அதைவிட அதிகமாக மனைவி சமையலறை ஜன்னல் வழியாக கரண்டியாலேயே இறைத்துவிடலாம்.

(3) வீட்டை ஸரியாய் வைத்துக்கொண்டிருப்பது என்றால் வீட்டுக்கு வெளியில் அடிக்கடிபோவது என்று அர்த்தமல்ல. தன்வீட்டில் குழந்தைகளை ஸரிவர கவனிக்காமல், அயலார் வீட்டில் போய் குழந்தைகளை எப்படி பார்த்துக் கொள்ளுகிற தென்று ப்ரஸங்கம் செய்வது ரொம்பவும் கெடுதலானது.

(4) உன்னுடையகஷ்டங்களை அயலாரிடம் சொல்லாதே. அவர்களுக்கு அவர்கள் கஷ்டங்களே போதுமான அளவு இருக்கின்றன. நீயும் உன்னுடைய கணவனுமாகச் சேர்ந்து கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ளுங்கள்.

(5) புருஷனிடத்தில் எப்பொழுதும் கடுகடு என்றிராதே. ஹோடல்காரர்களும் மதுக்கடைக் காரர்களும் உன்னுடைய புருஷனை ஸுமுகமாய் வா, வா வென்று வரவேற்க ஸந்தோஷமாய் எப்பொழுதும் காத்திருக்கிறார்கள்.

(6) கண்ணாடியை எடுத்துஎத்தனை தடவை பார்த்துக் கொண்டாலும் இருக்கிற அழகைவிட அதிக அழகு வந்துவிடாது. பௌடர்களையும், வர்ணங்களையும் தடவிக் கொள்வதால் ஏற்படும் அழகைவிட இயற்கை யழகே ச்லாக்யமானது.

(7) உன்னுடைய குழந்தைகளின் ஸரியானவயஸை ரெயில் வண்டியிலும் ட்ராம் வண்டியிலும் சொல்லத்தவறாதே. அப்படித் தப்பான வயஸைச் சொல்வதால் வரும் லாபத்தைக்காட்டிலும் யோக்யமான நடத்தையால் வருவதே அதிகமானது. வீட்டில் தனக்கு அதிகவயஸென்றும் வெளியிலே ட்ராம்வண்டியிலும் ரயில் வண்டியிலும் தனக்கு குறைந்த வயஸென்றும் தெரிந்துகொள்ளும் பையன் கற்றுக்கொள்ளக்கூடாத வேறு விஷயங்களையும் சீக்ரம் கற்றுக்கொள்வான்.

(8) "வீடு (குடும்பம்) என்பது ஸ்த்ரீயினுடைய ராஜ்யமாகும். அதில் அவளே ராணியாயிருந்து ராஜ்யபாரத்தை வகிக்கிறாள்" என்பதை மறக்காதே.

## Cow's Milk for Babies.

குழந்தைகளுக்குப் பசுப்பால்:—தாய்ப்பாலும் அந்நிய ஸ்திரீகளது பாலும் குழந்தைக்குக் கிட்டாத போனால் க்ருகம் முறையில் குழந்தைக்கு ஆகாரம் கொடுத்து வரவேண்டும். ஸ்திரீகள் முலைப்பாலுக்கிணை எந்த ஜெந்துவின் பாலுமாகாது. ஆனால் லகுவில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஜெந்துவின் பால் பசுவின்பால் தான். பசுவின் பச்சைப்பால் குழந்தையின் ஜீர்ணத்திற்குத் தகுந்ததல்ல. ஸ்திரீயின் முலைப் பாலிலும் பசுவின் பாலிலும் கொழுப்பு ஸரிஸமமாக இருந்தபோதிலும் மிச்ர வகையில் பேதமுண்டு. பசுவின் பாலில் புஷ்டி கொடுக்கும் ஸத்து நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு, சர்க்கரை நூற்றுக்கு $4\frac{1}{2}$ பங்கு. மேலும் அது புளிப்பாய் எதிர்க்களிக்கக் கூடியது. ஸ்திரீகள் முலைப்பாலோ காரமாய் எதிர்க்களிப்பது. பசுவின் பாலில் ஸ்திரீகள் முலைப்பாலிலிருப்பதைவிட பாலடைக்கட்டி அதிக விசேஷம். அதி சீக்ரத்தில் ஜீர்ணிக்க முடியாத கெட்டித்தயிராய் விடும். ஸ்திரீகள் பால் நேர்த்தியாயும் அதி சீக்ரத்தில் ஜீர்ணிக்கக் கூடியதாயு முள்ளது. பசுவின் பாலை ஸ்திரீகள் பாலுக்கு ஸமதையாய் வெறும் தண்ணீர் விட்டாவது பார்லி தண்ணீருடன் கலந்தாவது நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு வீதமிருந்த புஷ்டிகொடுக்கும் பதார்த்தத்தை $1\frac{1}{2}$ வீதம் குறைத்து விடலாம். இவ்விதம் நீர்கொண்டு பாலை ஸமப்படுத்தலால் அந்தப்பால் ஜீர்ணிக்கத் தகுந்ததாய் விடுகிறதல்லாமல் அப்பாலின் இதர உபவஸ்துக்களும் சாந்தப்படுகின்றன. கொழுப்புக் குறைந்துள்ளதாயிருந்தால் நூற்றுக்கு 16-அல்லது 20 மடங்குள்ளதான ஆடையின் சேர்க்கையால் அது ஸரிப்படடுவிடும். குழந்தையின் ஜீர்ணத்திற்கு ஸாதாரண சர்க்கரை அல்லது வெள்ளைச் சர்க்கரையைக் காட்டிலும் பாலிலுள்ள சர்க்கரையே மிக்க ஏற்றது. இதனாலுண்டாகும் புளிப்பு எதிர்க்காளத்தைக் காரமானதாய் மாற்றவேண்டுமானால் கொஞ்சம் சுண்ணாம்புத் தண்ணீராவது ஸோடா பைகார்பனேட்டாவது சேர்த்துக்கொள்ளலாம்.

முதலில் ஒரு பக்ஷத்திற்குக் கொடுக்கப்படும்பால் பாலும் தண்ணீரும் ஒன்றுக்கு மூன்றாயிருக்கலாம். பிறகு மூன்று மாதம் வரையில் ஒன்றுக்கு இரண்டாயும், பிறகு ஆறுமாதம் வரையில் ஒன்றுக்கு ஒன்றாயும், பிறகு 9 வது மாதம் வரையில் இரண்டுக்கு ஒன்றாயும் கலந்து கொடுக்கவேண்டும். முதல் மாதத்தில் குழந்தைக்கு வேளை ஒன்றுக்கு 1-அல்லது $1\frac{1}{2}$-அவுன்ஸ் பாலும், இரண்டாவது மாதத்தில் 2 அல்லது 3 அவுன்ஸும், மூன்றாவது மாதத்தில் 3-அல்லது 4 அவுன்ஸும், 4, 5-வது மாதங்களில் 4-அல்லது 5 அவுன்ஸ் பாலும், 6-வது மாதத்தில் 5 அல்லது 6 அவுன்ஸும், 7 முதல் 9-வது மாதம் முடிய 6 அல்லது 7-அவுன்ஸுகளும், 9-வது மாதம் முதல் 12 வது மாதம் முடிய 8, 9 அவுன்ஸுகளும், கொடுத்து வரவேண்டும். இ. நே.

# AGRICULTURE.
# விவசாயம்.

## Cambodia Cotton.

கம்போடியர்ப் பருத்தி:—"கிருஷிகன்" பத்ராசிரியரான மிஸ்டர் ரங்கராஜு அவர்கள் தம் தோட்டத்தில் நிலம் என்று சொல்வதற்குக்கூட யோக்யதையில்லாத சரள் கற்கள் நிறைந்த இடத்தில் கம்போடியாப் பருத்தி விளைவித்து ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 368 ரூபாய் பெறுமான கம்போடியாப் பருத்தி மாஸூல் செய்து அப்பருத்தியில் கொஞ்சம் சென்னை அக்ரி ஹார்டிகல்சரல் ஸொஸைடியில் வைத்து வெள்ளிப்பதக்கம் வெகுமானமடைந்தார்.

## A Cattle Improvement Association.

கால்நடை வ்ருத்திஸங்கம்:—டென்மார்க்கு தேசத்தில் 12-பேர் சேர்ந்து, அவர்களுடைய மாடுகளை வ்ருத்திசெய்ய முயன்று, ஒரு ரஸாயன சாஸ்த்ரியை வைத்து எந்தெந்தத் தீவனம் கொடுத்தால் பால் அதிகமாகக் கறக்கு மென்றும், வெண்ணெய் அதிகமாகக் கிடைக்குமென்றும், சில வருஷங்கள் சோதனை செய்து பார்த்ததில், ஒரு பசுவானது முன்னால் ஒருவருஷத்தில் கொடுத்த பாலைவிட 900 படி பால் அதிகமாகக் கொடுக்கும்படி செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

## Water for Village Cattle.

க்ராமக்கால்நடைகளுக்கு ஜலவஸதி:—சென்ற மார்ச்சுமீ 15உயன்று கூடிய சட்டஸபையில் ஆனரபில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் க்ராமத்துக் கால்நடைகளைக் குளிப்பாட்டவும், அவைகளுக்குக் குடிதண்ணீர் கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்யும்படியாக 2 லக்ஷம் ரூபாய் 1913-ம் வருஷத்து பட்ஜட்டில் போடவேண்டுமென்று ப்ரேரிக்க, மனிதருக்கே இந்த வஸதி முற்றிலும் இல்லாமலிருக்க, மாடுகளுக்கு எப்படிச் செய்வதென்றும், ஆயினும் டிஸ்டிரிக்ட் போர்டுகள் இந்த விஷயமாய் கவர்ன்மெண்டை ஒத்தாசை கேட்கும் பட்சத்தில் அது ஒற்றுணர்ச்சியுடன் கவனிக்கப்படுமென்றும், கவர்ன்மெண்டு தரப்பில் பதில் சொல்லப்பட்டது.

## Raising Seedlings in Tank Beds.

குளத்தில் நாற்று விடுதல்:—ஸமீபத்தில் நடந்த சென்னை லெஜிஸ் லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார், குளத்தில் நாற்று விடுவதைப்பற்றி ஒரு தீர்மானத்தை ப்ரேரணை செய்தார். தஞ்சைஜில்லாவில் குளங்களில் நாற்றுவிடும் ஸ்வதந்த்ரத்தை மிராசுதார்கள் வெகு காலமாக தீர்வை அன்னியில் அனுபவித்து வந்திருக்கிறபடியால், அதற்காக விதிக்கப்படும் தீர்வையை ரத்து செய்துவிட வேண்டுமென்பது ப்ரேரணை. ஆனபிரல் மிஸ்டர் கே. சிதம்பரநாதமுதலியார் ஆமோதித்தார். ஏகபோக மிராசுதார்களுடைய நன்மையைக் கருதியே மேற்கண்ட ப்ரேரணை செய்யப்பட்டிருக்கிறதென்றும், நாற்றுவிட ஸ்வதந்த்ரத்தை அனுபவிக்கிறவர்கள் ஏன் தீர்வை செலுத்தக் கூடாதென்றும், ஆனரெபில் மிஸ்டர் பட்டர்வர்த் சொன்னார். ஆனரெபில் மெஸ்ஸர்ஸ் கேசவப்பிள்ளை, ராமச்சந்த்ரராவ், நரஸிம்ம அய்யர் ஆகிய இவர்கள் ப்ரேரணையைத் தாங்கிப் பேசினார்கள். ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன் எதிர்த்துப்பேசினார். வோட் எடுக்க தீர்மானம் தள்ளப்பட்டது.

## Selection of Seed Cocoanuts.

தென்னை நெற்றுகளைத் தெரிந்தெடுத்தல்:—சாத்துவதற்கு வேண்டிய தேங்காய் நெற்றுகள் ரொம்ப ச்லாக்யமாக இருக்கின்றனவா என்று பார்ப்பதில் ச்ரத்தை எடுத்துக்கொள்ளவேண்டிது அதிக அவச்யமானது. இப்படி ச்ரத்தை எடுத்துக்கொள்ளுவதால், காலமும், வேலையும், செலவும் அதிகரிக்குமே என்று பின்வாங்கக்கூடாது. ஏனென்றால் இப்பொழுது வைக்கும் தோட்டம் பிற்காலம் நல்ல ஸ்திதியில் இருப்பதும் இல்லாததும், நாம் எந்த மரத்திலிருந்து விதை நெற்றுகள் எடுக்கிறோம் என்பதைப் பொறுத்ததாயிருக்கிறது. 20-முதல் 50-வருஷம் வயஸுள்ள நல்ல பலன் கொடுக்கும் பருவத்திலுள்ள மரங்களிலிருந்து விதை நெற்றுகள் பொறுக்குவது நல்லது. மரம் நல்ல வளர்ச்சியுள்ளதாயிருக்கவேண்டும். தென்னம் மட்டைகள் ரொம்பப் பெரியவையாயும் அடர்த்தியாயும் இருக்கவேண்டும். குலைவைத்திருக்கும் பாளை கெட்டியாயும் குட்டையாயுமிருக்க வேண்டும். காய்கள் பெரியவையாயிருந்தாலும், அதிகமாயிருந்தாலுங் கூட காய்கள் உதிர்வது வழக்கமானால் அந்த மரத்து நெற்றுகள் ச்லாக்யமல்ல. மட்டைகள் குறைவாயா

வது, சாய்ந்து தொங்கிக்கொண்டாவது இருக்கும் மரங்களும் நெற்றெடுப்பதற்கு உதவா. சிலர் பெரிய நெற்றுக்களின்மேல் ப்ரியம்கொள்ளுகிறார்கள். ஆனால் நடுத்தரமான பருமனுள்ள நெற்றுத்தான் நடுவதற்கு நல்லது. ஏனென்றால் பிற்காலம் மரத்திலிருந்து கிடைக்கும் காய்களின் தொகையையும் அவைகளை விற்றால் வரும் லாபத்தையும் உத்தேசிக்க வேண்டியிருக்கிறது. ஒரு குலையில் எத்தனை நடுத்தரமான காய்கள் இருக்கின்றனவோ அதைவிட பெரிய அளவுள்ள காய்கள் குறைவாகவே யிருக்கும். ஏசர் கணக்காக தோட்டம் வைப்பதால் இந்தக் காய்களின் தொகையில் ஏற்படும் வித்யாஸம் ரொம்ப அதிகமாகவே இருக்கும். மேலும் தேங்காய்களை ஆயிரம் இவ்வளவு விலையென்று விற்கிறார்கள். ரொம்ப சிறியவைகளைத்தான் தள்ளி விடுகிறார்கள். காய்களை உடைத்துக் கொப்பரையாகநிறைச்கணக்கில் விற்றாலும், பெரிய காய்களைவிட நடுத்தரமான காய்கள் எண்ணிக்கையில் ரொம்ப அதிகமாயிருப்பதாலும் நடுத்தரமான காய்களே ச்லாக்யமானவை. தேங்காய் நெற்று சாத்தவேண்டு மென்றால் நடுத்தரமான பருமனும் உருண்டை வடிவமும், உள்ளதாயும் மெல்லிய மட்டையாயும், அதிக பருப்பும் உள்ளதாயுமான தேங்காய் நெற்றுக்களையே தெரிந்தெடுக்க வேண்டும்.

## Association of Farmers Institute Workers.

பார்மர்ஸ் இன்ஸ்டிட்யூட் வோர்க்கர்ஸ்:—இந்தப் பெயர்கொண்ட விவஸாயிகளின் ஸங்கமொன்று அமெரிக்காவில் ஸுமார் 16-வருஷ காலமாக நடந்து வருகிறது. இந்த ஸங்கத்தின் ஒழுங்கையும் முறையையும் பற்றி கவனிக்கும் கமிட்டி ஸமீபத்தில் நடந்த 16-வது வருஷ மீட்டிங்கில் ரிபோர்ட்டு ஒன்று வாசித்தது. அந்த ரிபோர்டிலுள்ள விஷயங்களை சுருக்கமாய் எழுதுகிறோம்.

1911-ம் வருஷம் நவம்பர் மாஸத்தோடு முடிந்த வருஷத்தில் ஐக்யமாகாணங்களில் இந்த ஸங்கத்தின் கூட்டங்கள் 16,741-வரையில் நடந்தன. இவற்றில் 3539 மீட்டிங்குகள் 1-நாள் முழுவதும் நடந்தவை, 1942 மீட்டிங்குகள் இரண்டு நாள் நடந்தவை. 172 மீட்டிங்குகள் 3-ம் அதற்குமேற்பட்ட நாளும் நடந்தவை. ஆகமொத்தம் 7935 நாள் ஸங்கங்கள் நடந்திருக்கின்றன. எல்லா இன்ஸ்டிட்யூட்டுகளிலும் (வித்யாஸ்தாபனம் போன்ற ஸங்கங்கள்) வந்திருந்தவர்களின் தொகை 24,12,600. இந்த இன்ஸ்டிட்யூட்டுகளுக்கு எல்லாவகையிலும் கிடைத்த உதவி 4,45,193 டாலர் (டாலர் என்பது 3 ரூபாய் 2-அணா).

அநேக மாகாணங்களில் ஜனங்களுக்கு விவஸாயமும் க்ருகபரிபாலனமும் கற்பிக்க விவஸாய காலேஜுகளேயன்றி அநேக முறைகளைக் கையாடுகிறார்கள். (1) விவஸாயிகளின் இன்ஸ்டிட்யூட்டுகள் (2) விவஸாய விஷயமாய் போதிக்க ரெயில் வண்டித் தொடர்கள். (3) விவஸாய முறைகளை ஆங்காங்கு செய்து காட்டல். (4) விவஸாய ஸம்பந்தமாய் ஆறு நாள் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தல். (5) பையன்கள் பெண்கள் இவர்களுடைய ஸங்கங்கள் (6) ஷை இன்ஸ்டிட்யூட்டுகளில் ஸ்திரீகள் பிரிவு ஏற்படுத்துதல். விவஸாயிகள் இன்ஸ்டிட்யூட் என்பது விவஸாய வ்ருத்தி முயற்சிகள் பலவற்றில் ஒன்றாகும். அது உபாத்யாயரும் மாணவர்களுமுள்ள ஒழுங்காய் நடைபெறும் ஒரு பள்ளிக்கூடமல்ல. இங்கே ஜனங்களுக்கு விவஸாயக்கல்வி புகட்டும் விதங்கள் என்னவென்றால், விவஸாய ஸம்பந்தமாய் தெளிவானவும் திட்டமானவுமான விஷயங்களையும், ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும் எடுத்துச்சொல்வதும், விவஸாயிகளுக்கு ரொம்ப உபயோகமான விஷயங்களை யாவரும் அறியும்படி தெரிவிப்பதுமே.

விவஸாய இன்ஸ்டிட்யூட் நன்றாய் வேலை செய்திருக்கிறதென்றால் அது குறைந்தது நான்கு காரியங்களைச் செய்திருக்கவேண்டும்.

(1) விவஸாய ஸம்பந்தமாய் உண்டாகும் கேள்விகளையும் ஸந்தேகங்களையும் தீர்ப்பதற்கு வேண்டிய விஷயங்களையும் ஸமாசாரங்களையும் மெம்பர்களுக்கு உதவி வரவேண்டும்.

(2) விவஸாயிகள் அடங்கிய ஒரு ஸமூகத்தார் என்ன விதமான வேலைகளைச் செய்து ஸுகமடையவேண்டு மென்று எடுத்துச்சொல்லுதல்.

(3) ஷை இன்ஸ்டிட்யூட்டின் கார்யங்களையும், அதன் செல்வாக்கையும் அதிகப்படுத்தவேண்டும்.

(4) விவஸாய அபிவ்ருத்திக்கு ஸாதகமாய் வேலை செய்வதற்காக அந்தந்த ப்ரதேசத்தில் ஒரு ஸங்கம், க்ளப், இன்ஸ்டிட்யூட் என்று ஏதாவது ஒரு ஸ்தாபனம் எப்பொழுதும் நடந்துகொண்டு வரும்படி செய்யவேண்டும்.

அமெரிக்காவில் 35 மாகாணங்கள் இந்த பார்மர்ஸ் இன்ஸ்டிட்யூட்டுகள்செய்யும் வேலையின் அவசியத்தை யுணர்ந்து அவைகளுக்கு திட்டமான பண உதவி செய்து வருகின்றன. சென்ற வருஷத்தில் அவைகள் செய்த பண உதவி 3, 72, 430 டாலராகும்.

# COMMERCE.
## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற டிஸம்பர் ஜனவரி மாஸங்களில் அடியில் கண்ட விவரப்படி கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப் பட்டன.

1912-ஸு டிஸம்பர் மாஸம்.—

| | | |
|---|---|---|
| 6 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | ... 25,00,000 |
| 5 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 2,90,000 |
| 3 | அச்சடித்துப் ப்ரசுரம் செய்யும் கம்பெனிகள் | ... 1,39,500 |
| 10 | -வ்யாபாரக்கம்பெனிகள் (மேற் சொன்னவை தவிர) | ... 17,10,000 |
| 1 | சணல் மில் கம்பெனி | ... 12,00,000 |
| 1 | அரிசி மில் கம்பெனி | ... 30,000 |
| 1 | மில் கம்பெனி (மேலே சொன் னவை தவிர | ... 2, 50,0 00 |
| 3 | தேயிலை,மற்ற தோட்டக்கம்பெ னிகள் | ... 7,00,7 00 |
| 2 | கிலக்கரி சுரங்கக் கம்பெனி | ... 3,8 5,0 00 |
| 1 | சுரங்கக் கம்பெனி (மேலே சொ ன்னவை தவிர) | ... 1,50,000 |
| 1 | சர்க்கரை தொழில் கம்பெனி | ... 10,00,000 |
| 1 | கம்பெனி (மேலேசொன்னவை தவிர) | ... 1,00000 |
| 35 | ஆக மொத்தம் ரூ | 84,55,200 |

1913-ஸு ஜனவரி மாஸம்.—

| | | |
|---|---|---|
| 4 | பாங்கி, லேவாதேவி கம்பெனிகள் | ... 12,19,600 |
| 4 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 1,65,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | ... 50,00,000 |
| 1 | அச்சடிக்கும் கம்பெனி | ... 25,000 |
| 10 | -வ்யாபாரக்கம்பெனிகள்(மேலே சொன்னவை தவிர; | ... 8,71,250 |
| 1 | பருத்தி மில் கம்பெனி | ... 16,25,000 |
| 3 | அரிசி மில் கம்பெனிகள் | ... 50,000 |
| 2 | தேயிலைக் கம்பெனிகள் | ... 8,00,000 |
| 1 | தோட்டவேலைக் கம்பெனி (மே லே சொன்னவை தவிர | ... 75,000 |
| 2 | கிலக்கரி சுரங்கக்கம்பெனிகள் | ... 2,50,000 |
| 29 | ஆகமொத்தம் ரூ. | 1,00,80,850 |

### Allahabad University and Commercial Education.

அலகாபாத் யூனிவர்ஸிடியும் வர்த்தகப் படிப்பும்.—பம்பாய் யூனிவர்ஸிடியார் வர்த்தகப் பரீட்சைகள் நடத்தி, வர்த்தகப்பட்டங்கள் கொடுக்க ஏற்பாடுகள் செய்திருப்பது தெரிந்த விஷயம். அந்த யூனிவர்ஸிடியில் பாகல்டி ஆப் காமர்ஸ் என்ற வர்த்தகப் பிரிவு ஸபையொன்றிருக்கிறது. பம்பாய் யூனிவர்ஸிடியாரைப் பின்பற்றி அலகாபாத் யூனிவர்ஸிடி ஸபையாரும் வர்த்தகப் படிப்பை வ்ருத்தி செய்யும் நோக்கத்துடன் அந்த யூனிவர்ஸிடியில் ஒரு பாகல்டி ஆப் காமர்ஸை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னை யூனிவர்ஸிட்டியாரும் வர்த்தகப்படிப்பை வ்ருத்தி செய்ய ஒரு பாகல்டு ஆப் காமர்ஸை ஸ்தாபித்தல் விரும்பத் தக்கதாகும்.

### Duty on Burma Rice.

பர்மா அ. சிக்கு வ..—பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசிக்கு, அந்த அரிசி இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலும் ஸரி, மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலும் ஸரி, ஏற்றுமதி வரி விதிக்கவேண்டுமென பர்மா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்களென்று தெரிகிறது. அந்த கவர்ன்மெண்டார் அம்மாதிரி யோசித்துக்கொண்டிருப்பது தெரிந்து, ரங்கூன் அரிசி வ்யாபாரிகள் பர்மா லெப்டினண்ட் கவர்னருக்கு ரங்கூன் அரிசிக்கு ஏற்றுமதி வரி விதிக்கக்கூடாதென்று ஒரு மகஸர் அனுப்பியிருக்கிறார்கள். அதில், பர்மா கவர்ன்மெண்டார் அரிசிக்கு ஏற்றுமதி வரி விதித்து, அந்த வரியைக் கொண்டு போக்கு வரவு வஸதிகளை ஏற்படுத்தி,அவைகளை நல்ல நிலைமையில் வைக்கப் பார்ப்பது ஸரியல்ல வென்றும், அச்செலவு இந்தியா கவர்ன்மெண்ட் க்ராண்டுகளைக்கொண்டு செய்யவேண்டுமென்றும், மற்ற மாகாணங்களில் அம்மாதிரி தான் செய்யப்பட்டிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டார் அரிசிக்குத்தான ஏறறுமதி வரி விதிக்கவேண்டுமென்பதற்கு ஸரியான காரணங்கள் எடுத்துக்காட்டியிருக்கவில்லை யென்றும், அரிசி வ்யாபாரத்துக்கு ஏற்படக்கூடிய அனுகூலம் வெகு சொற்பமென்றும், அரிசி வ்யாபாரம் இறங்கு முகங்காட்டி குறைந்து கொண்டு வந்திருக்கிறதென்றும், அரிசி வ்யாபாரத்தைவிட பூர வ்யாபாரம், தாதுப் பொருள்களில் வ்யாபாரம், ரப்பர் வ்யாபாரம், மண்ணெண்ணெய் வ்யாபாரம், இவைகள் போக்குவரவு வஸதிகளால் அனுகூலத்தை அடையுமாதலால் அவைகளுக்கு வரி விதிக்கலாமென்றும், ரங்கூன் அரிசி வ்யாபாரிகள் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

# INDUSTRY.

## கைத்தொழில்.

### Wood Pulp.

மரச்சோறு:—மரத்தை துண்டு துண்டாய் நறுக்கி அறைத்து மசியலாக்கி அந்த மசியலைக்கொண்டு காகிதம் செய்கிறார்கள். அமெரிக்கா ஐக்ய மகாணங்களில் வருஷமொன்றுக்குச் செலவாகிற மரச்சோறு 800,000 டன். ஜெர்மெனியில் 200,000-டன், கனடாவில் 100,000 டன். ஸ்வீடனில் 100,000-டன் ருஷியாவில் 250,000-டன்.

### World's Paper Industry.

உலகில் நடக்கிற காகிதத் தொழில்:—இங்கிலாந்து வருஷத்தில் 260,000 டன்

| | |
|---|---|
| ஜெர்மனி | 425,000 டன் |
| ப்ரான்ஸ் | 190,000 டன் |
| ஆஸ்ட்ரியா | 155,000 டன் |
| இத்தலி | 120,000 டன் |

ஆக இப்படி இவைகளெல்லாவற்றிலும் காகிதம் செய்யப்படுகிறது. அமெரிக்கா ஐக்ய மாகாணம் 1,330,000 டன் காகிதஞ் செய்கிறது. அங்கே காகிதச் செலவு மற்றத் தேசங்களைப் பார்க்கிலும் அதிகம்.

### Sugar Manufacture in Ceylon.

லங்கையில் சர்க்கரை செய்யும் தொழில்.—பனஞ்சாற்றிலிருந்து சர்க்கரை செய்ய லங்கையில் ஒரு ஏற்பாடு நடந்து வருகிறது. மிஸ்டர் வீஸல் என்பவரும் இன்னும் சில ஐரோப்பியர்களும், ஸ்வதேசிகளும் சேர்ந்து இது விஷயமாய் முயற்சித்து வருகிறார்கள். இந்தக் கம்பெனிக்கு 4 லக்ஷம் ரூபாய் மூலதனம் ஏற்படுத்துவார்களாம். பனைமரங்கள் உள்ள 1000-ஏகர் நிலம் யாழ்ப்பாணத்தில் குத்தகைக்கு வாங்கப் போவதாகத் தெரியவருகிறது. லங்கையிலே இதுவரையில் பனஞ்சாற்றுக்கு வரியில்லாதிருக்கிறதென்றாலும், இனி இப்படிப்பட்ட முயற்சிகளைக்கண்டு வரிவிதிக்கப்படுமே என்று கவர்ன்மெண்டாருடைய அபிப்ராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கு வேண்டிய யந்த்ரங்கள் இங்க்லாந்திலிருந்து சீக்ரம் தருவிக்கப்படும் என்று தெரிகிறது.

### Duck Rearing.

குள்ளவாத்து வளர்த்தல்.—சிலர் குள்ள வாத்து வளர்க்க வேண்டுமானால் சிறு வாத்துகள் நீந்துவதற்கு குட்டையாவது ஒடையாவது இருக்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அந்தத் தொழில் லாபகரமாயிராதென்றும் எண்ணுகிறார்கள். இப்படி எண்ணுவது மிகவும் தப்பு. ஏனென்றால் சிறு வாத்துகளை விற்பதற்காகவோ அல்லது உணவுக்குக்கொல்வதற்காகவோ வளர்க்கிறதாயிருந்தால் அவைகளை ஜலத்தில் நீந்த விடக்கூடாது. அவைகள் நீந்தாவிட்டால் தான் சீக்ரம் பெரியவை ஆகிக் கொழுத்து வளரும். குள்ளவாத்து முட்டைகளை அடைக்காக்க வைத்து நல்லபலன் அடைய வேண்டுமென்றால் பின் வருமாறு செய்ய வேண்டுமென்று "பௌல்ட்ரி ஜர்னல்" என்னும் பத்ரிகையில் ஒரு நிருபர் எழுதுகிறார்.

(1) பெரியவும் நல்ல வுறுதியான தேசமுள்ளவுமான வாத்துக்களின் முட்டையை உபயோகிக்க வேண்டும்.

(2) முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி வந்தது முதல்கொண்டு அவைகள் வளர்ந்து சொண்டு வரும்படி செய்யவேண்டும்.

குஞ்சு பொரித்தவுடன் 24-மணிநேரம் வரையில் குஞ்சுகளுக்குத் தீனிபோடக்கூடாது. பிறகு ஒரு தட்டத்தில் கொஞ்சம் ஜலம் ஊற்றி அதில் அதிக ஸன்னமாயில்லாத ஓட்ஸ் தான்ய மாவையும் சிறிது நொய்யையும் தூவவேண்டும். ஏனென்றால் முட்டையிலிருந்து வெளிவந்த குள்ள வாத்துக்குஞ்சுக்கு நொய் ஆகாரமாகக் கொடுப்பது ரொம்ப அவசியம். இதற்குப்பிறகு அவைகளுக்கு வென்னீரில் போட்டு சிறிது வேகவைத்த பிஸ்கோத்து மா தீனியாகக் கொடுக்க வேண்டும். சிறுவாத்துக் குஞ்சுகளை ரொம்பவும் ஜாக்ரதையாக போஷிக்கவேண்டும். அவைகளை மெலிந்துபோக விடக்கூடாது. ஏனென்றால் அவைகள் பிறந்து 9 அல்லது 10 வார மானவுடன் உணவிற்கு தகுதியானவையாக ஆகிவிடுகின்றன. மேலும் கடைசி இரண்டுவாரம் அவைகளுடைய உணவில் சிறிது காய்ந்தபுல்லும் சேர்க்கவேண்டும். அவைகளுக்கு ஆகாரமாக உடைத்த ஓட்ஸ் தான்யமும் பார்லிமாவும் மற்ற நொய்களும் பாலுடன் கலந்து கொடுக்கலாம். அவைகள் பிறந்து ஆறுவாரமானபிறகு கோதுமையை வேகவைத்துக் கொடுத்தால் வாத்துக்களின் மேல்தோல் வெண்மையாயும், மாம்ஸம் நல்ல ருசியாயும் இருக்கும். சிறுகுள்ள வாத்துகளை 11, 12 வாரங்களுக்குமேல் வைத்திருப்பதில் ப்ரயோஜனமில்லை ஏனென்றால் அவைகள் அப்பொழுதிருப்பதற்குமேல் வளருவதில்லை. பிறகு அவைகள் தங்கள் சிறிய இறகுகளை உதிர்த்துபெரிய இறகுகள் உண்டானதற்கப்புறந்தான் பெருக்க ஆரம்பிக்கின்றன.

# ECONOMICS.

## பொருளாதாரம்.

### Improvement of Small Holders.

சிறுகுடிகளின் அபிவிருத்தி.—சிறுகுடிகள் பட்டுப் பூச்சி வளர்த்தல், விவஸாயம் முதலிய தொழில்களைச் செய்வதால் அவர்களுக்கு ரொம்ப நன்மையுண்டாகக் கூடுமென்று அலஹபாத் பத்ரிகை ஒன்று எழுது கிறது. விவஸாயிகள் ப்ரதானமான தொழில் களோடு துணையாக வேறு சிறு தொழில்களையும் செய்துவந்தால் அவர்களுடைய ஜீவனமுறை மேம் பாடு உடையதாகும். இப்பொழுதிருக்கும் நிலைமை யில் அவர்களுக்கு ரொம்ப அவசியமான ஸௌகர்யங் களைச் செய்துகொள்வதற்கு அவர்களுக்கு வேண்டிய பணம் போதாமலிருக்கிறது. சிலர் மேல் நாடுகளில் யந்த்ரங்கள் ரொம்ப அதிகமாக உபயோகப்படுவதால் க்ராமாந்தரத்துக் கைத்தொழில்கள் அங்கே நசித்துப் போய்விட்டன என்று நினைக்கிறார்கள். அது தவ றாகும். இங்லாந்து ஸம்பந்தப்பட்ட மட்டில் இது உண்மையாயிருக்கலாம். ஐரோப்பாவின் மற்ற தேசங்களில் இப்படியில்லை யென்பது நிச்சயம். வாஸ்தவத்தில் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி ஆகிய இந்த தேசங்களில் க்ராமக் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்ய முயற்சிகள் நடந்துவருகின்றன. ஆகையால், எல்லாக் கார்யங்களுக்கும் யந்த்ரங்களையே கையாடினால் தான் இந்தியா மேம்பாடடையும் என்று சொல்லுகிறவர்கள் விஷயத்தை நன்றாய் க்ரஹிக்க வில்லை என்று எண்ணலாம். ஏராளமாய் யந்த்ரங்களை உபயோகிக்கும் ஐரோப்பாக்கண்டத்தில் நாட்டுபுறத் தொழில்கள் அதிகமாகி வருவதற்குக்காரணம் ஐக்ய நாணய ஏற்பாடு அந்த தேசங்களில் ரொம்ப ஜாஸ்தி யாக அபிவ்ருத்தி யடைந்திருப்பதே. இந்தியா மேம்பாடடைவதற்கும் கோவாபரேஷன் ஸாதகமா யிருக்கும் என்று மேற்சொன்ன பத்ரிகை எண்ணு கிறது. கோவாபரேஷன் முறையில் சரக்குகள் செய்யும் முறையானது ஒரு பெரிய புயல்காற்றுப் போல் இந்தியாவின் நாட்டுப்புறங்களில் எல்லாம் பர வும் என்பதற்கு ஏராளமான அறிகுறிகள் இருப்ப தாகவும் சொல்லுகிறது.

### Movement of Population.

ஜனங்கள் ஊர்விட்டு ஊர்போதல்.—சென்னை ராஜதானியில் சென்னப்பட்டணம் நீங்கலாக மற்ற இடங்களில் 1 000 க்கு 900 ஜனங்கள் அவரவர்கள் பிறந்த ஜில்லாக்களிலேயே இருப்பவர்கள். தென் கன்னடம் ஜில்லாவில் 1,000-க்கு 996 ஜனங்கள் அந்த ஜில்லாவிலேயே பிறந்தவர்கள். பெரும்பாகம் சிறுகுடிகளும், விவஸாய வேலையாட்களுமாக இருக் கும் ஜனங்களில் இவ்வித நிலைமை எதிர்பார்க்கக்கூடி யதே. தேசத்துக்குள்ளேயே ஓரிடத்திலிருந்து மற் றொரிடத்துக்கு தற்போது கொஞ்சம் போவதுங் கூட ஒரே இயல்புள்ள இடங்களில்தான் நடக்கிறது. பர்மாவுக்கு சென்னை வேலையாட்கள் குடியேறிப்போ வதை கணக்கில் சேர்க்காமல் விட்டுவிட்டால், சென்னை ராஜதானியிலிருந்து இந்தியாவின் மற்ற பாகங்களுக்குப் போவதும், அந்த மற்ற பாகங்களி லிருந்து சென்னை ராஜதானிக்கு வருவதுமாகிய ஸவல்ப ஜனக் குடியேற்றம், ஒன்றற்கொன்று ஸமீப மாயுள்ள ஜில்லாக்களிலும் ராஜ்யங்களிலுந்தான் நடக் கிறது. தகுந்த ஸௌகர்யங்கள் இருக்குமானால் சென்னை வேலையாட்கள் ஊர்விட்டு ஊர்போக அஞ்சமாட்டார்களென்பது நிச்சயம். இதற்கு ஸாட்சி பர்மா, ஸிலோன், இன்னம் தூரதேசங்களுக்குப் பொருள் தேடப்போகும் ஜனங்களைப்பார்த்தால் டோ தும். சென்னை ராஜதானியிலும், வேலையாளுக்குத் தெரிந்த இந்தியாவின் வேறு பாகங்களிலும், உள்ள நிலைமைகள்ஒரேமாதிரியாகஇருப்பதால்,தன்னூருக்கு ஸமீபத்திலேயே ஜீவனம் ஸம்பாதிக்க முடியும்போது, தன் னூரிலிருந்து வெகுதூரம்சென்று பிழைக்க அவ னுக்கு ப்ரியமுண்டாவதில்லை. அப்படிப் பிழைப்பதற் கும் கஷ்டமொன்றும் வந்து விட்டதாகத் தெரிய வில்லை. ஜனத்தொகை அதிகரித்து அவர்களுடைய தேவைகளும் அதிகரித்திருப்பதற்குத் தகுந்தபடி பாசனமும், விவஸாயமும் அபிவ்ருத்தி யடைந்திருக் கின்றன. ஜனங்கள் அதிகமாகிவிட்டாலும் அவர்களு க்கு வேண்டிய உணவுப்பொருள் போதுமான அளவு ஸாகுபடிசெய்ய ஒவ்வொரு ஜில்லாவிலும் வேண்டிய வஸதிகள் இருக்கின்றன. இப்படிக்கு 1911-ம் வரு ஷத்து ஸென்ஸஸ் ரிபோர்ட்டைப் பார்த்து கவர்ன் மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள்.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Share Milking.

கறவைமாடுகளின் பலனை பாகித்துக்கொள்ளு தல்.—ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்தில் ந்யூஸீலண்ட் என்று ஒரு தீவு இருக்கிறது. அதில் விவஸாயிகளும் பால்கறக்கும் தொழிலாளரும் தங்கள் கறவைமாடுகள் விஷயமாய் ஒரு ஏற்பாடுசெய்து அனுஷ்டித்து வருகிறார்கள். மாடுகளால் கிடைக்கும் பால், கன்றுகள், இவைகளை விவஸாயிகளும், பால்காரர்களும் கோவாபரேஷன் ஏற்பாட்டில் நிலத்தின் தன்மைக்குத் தகுந்தபடி ஸரியாகப் பிரித்துக்கொள்ளுகிறார்கள். விவஸாயியானவன் நிலம், கால்நடைகள், வீடு, இன்னம் மற்ற கட்டிடங்கள், ஆகிய இவைகளை உபயோகத்துக்கு விடுகிறான். பால்காரர்கள் வேலைசெய்வதோடு அநேக விடங்களில் தங்களுடைய ஸொந்த குதிரைகள், வண்டிகள், பால்கறப்பதற்கு வேண்டிய பாத்ரங்கள், ஆகிய இவைகளை உபயோகித்து, புல் முதலிய மாட்டுத் தீவனத்தின் செலவில் ஒருபாகமும் கொடுக்கிறார்கள். இந்த ஏற்பாடு விவஸாயிகளுக்கு ரொம்ப ஸௌகர்யமாயிருக்கிறதாம். ஏனென்றால், அவர்களுக்கு மாட்டைக் கட்டிக்கொண்டு பாடுபட வேண்டிய தொந்தரவு ஒன்றுமே கிடையாது. பால்காரர்களுக்கு நல்ல வரும்படி கிடைக்கிறது. அதிலும் பால்காரர்கள் கலியாணமானவர்களாயிருந்து அவர்களுக்கு திட சரீரமுள்ள குடும்பமும் இருந்து விட்டால், அவர்களுக்கு வாடகையில்லாத வீடு, தோட்டம், பால், குதிரைகள் மேய புல்நிலம், இவைகள் கிடைக்கின்றன. அநேக குடும்பங்கள் இப்படி கோவாபரேஷன் ஏற்பாட்டில் பால் கறந்துகொடுத்து சில வருஷங்களுக்குள் பணம்சேர்த்து ஸொந்தத்தில் நிலங்கள் வாங்கி யிருக்கின்றனவாம்.

### The Madura-Ramnad Co-operative Conference.

மதுரை ராமனாதபுரம் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—இந்த கான்பரென்ஸ் சென்ற மாஸம் மதுரையில் நடந்தது. அதற்கு கனம் சிவஸ்வாமி அய்யர் அக்ராஸனாதிபதியாயிருந்தார். கான்பரென்ஸில் மூன்று விசேஷங்கள் கவனிக்கத்தக்கவை. முதலாவது ப்ராமணரல்லாத டெலிகேட்டுகள் ரொம்ப அதிகமாய் வந்திருந்தார்கள். கான்பரென்ஸுக்கு வந்திருந்த 148 டெலிகேட்டுகளில் 38 பேரேப்ராமணர்கள். மற்றவர்கள் ப்ராமணரல்லாதவர்கள். அவர்களுள் 43 பேர் கள்ளஜாதி டெலிகேட்டுகளும், ஒருவர் பஞ்சமருமாவர். இந்த கான்பரென்ஸில் பஞ்சமர் டெலிகேட்டாய் வந்தது கவனிக்கத்தக்கது. டெலிகேட்டாய் வந்து உட்கார்ந்தது மட்டுமில்லாமல் கான்பரென்ஸ் நடவடிக்கைகளில் கலந்து பேசினார்.

இரண்டாவது விசேஷம் என்னவென்றால் கவர்ன்மெண்டின் உதவியைக் கேட்கும் தீர்மானங்கள் மிகக் குறைவாயிருந்தன. 17-தீர்மானங்களில் 4-தீர்மானங்கள் தான் கவர்ன்மெண்டின் உதவியை வேண்டிச் செய்த தீர்மானங்கள். அந்தத் தீர்மானங்களாவன:—விவஸாய ஆராய்ச்சிப் பண்ணைஸ்தாபித்தல், விவஸாய இன்ஸ்பெக்டர் ஏற்படுத்துதல், கவர்ன்மெண்டின் ப்ரசுரங்களை ஸப்ளைசெய்தல், எலிமென்ட்ரி பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி பாடங்களின் ஜாப்தாவில் விவஸாயத்தின் முக்யமான விஷயங்களைச் சேர்த்தல், ஆகிய இவைகளே. இப்படி இந்தக் கான்பரென்ஸ் தனது சக்தியில் நம்பிக்கையும், ஸ்வயேச்சையும் கொண்டிருப்பதை கோவாபரேஷனில் ஊக்கமுள்ளவர்கள் யாவரும் கவனமாய்க் கொள்ளவேண்டும். மூன்றாவது விஷயம் என்னவென்றால், தீர்மானங்களில் சொல்லியபடி, அநேக கார்யங்களைச்செய்து முடிக்க வேண்டுமென்று கான்பரென்ஸ் விரும்பியிருப்பது. என்னென்ன கோவாபரேஷன் முறையில் செய்யக்கூடுமோ அநேகமாய் அவைகளெல்லாம் தீர்மானங்களில் அடங்கியிருக்கின்றன. ஸாத்யமென்று தோன்றாத இந்த உயர்ந்த நோக்கம் அநேகவிஷயத்தில் நன்மைபயக்கக்கூடியதே. ஷை கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யர் சொன்னது போல "எடுத்துக்கொண்ட முயற்சிகள் சீக்ரத்தில் கைகூடுவதற்கு முடியாமல் ரொம்ப அதிகமாக இருக்கின்றன வென்று உங்களில் பலருக்கு தோன்றலாம்," "என் மட்டில், இந்தத் தீர்மானங்களை முதலில் எழுதியவர் அப்படிச் செய்தது ஸரியென்றே எண்ணுகிறேன். இந்தத் தீர்மானங்கள் உண்மையான நோக்கங்களாக மாத்ரம் இராமல் உங்களில் பலருடைய செய்கைகளும் நடவடிக்கைகளும் இவைகளினால் மாறுபடும் என்று எண்ணுகிறேன். இவைகளைக் காலமோ அகாலமோ அடிக்கடி திரும்பித் திரும்பிச் சொல்லவேண்டும். எனக்கு உன்னதமான நோக்கங்களில் நம்பிக்கையுண்டு. உன்னதமான நோக்கத்தை யடைய இடைவிடாமல் முயற்சிப்பதாய் எண்ணி, எண்ணத்தை வெளியிடுவதால்தான், அந்த நோக்கம் கைகூடி அதை அனுபவிப்பது நாம் ஸாத்யமாகும்"

# BANKING.
## பாங்கி வ்யாபாரம்.

### Banks in the Tamil Districts.

தமிழ் ஜில்லாக்களில் பாங்கிகள்.—ஜனங்கள் சிக்கனமாய் ஜீவித்து மிகுந்த பணத்தை நகைகளிலும் விவாகத்திலும் வீண் செலவு செய்யாமல் வட்டிக்குப் போட்டு வைப்பது எவ்வளவு முக்ய மென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. சொற்ப வட்டி வந்தாலும் பாதகமில்லை. ஏனெனில் பணம் ஸமயத்துக்கு உதவும். ஆகையால் இப்படி சிக்கனத்துக்குச் ஸாதகமான பாங்கிகள் தேசத்தில் அதிகமாய், ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன வென்று ஸந்தோஷப்படுகிறோம். ஐக்யநாணய ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு அங்கங்கே அர்பன் பாங்கிகளென்று இந்த ஸங்கங்களுக்கு ஸாதகமாக பாங்கிகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. மதுரையில் சென்ற வருஷம் மதுரை டிஸ்டிரிக்ட் பாங்க் போனமாஸம் கும்பகோணத்தில் தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட்பாங்கி என்று ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்த இரண்டிலும் க்ராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஐக்ய நாணய ஸங்கங்கள் மெம்பர்களை நியமிக்கலாம். பாங்கிகளிற் கிடைக்கும் லாபத்திலும் இந்த ஸங்கங்களுக்குப் பங்குண்டு. சென்னை மைலாப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அர்பன்பாங்கில் பல ஐக்ய நாணய ஸங்கங்கள் கடன்வாங்கி, அதனால் மைலாப்பூர் பாங்கி உயர்ந்த விகிதமாய் லாபம் ஸம்பாதித்த போதிலும், ஐக்யநாணய ஸங்கங்கள் அந்த பாங்கிக்கு மெம்பர்களை நியமித்து அனுப்பவாவது, லாபத்தில் பங்கு பெறவாவது பாத்ய மில்லாமலிருக்கின்றன. இது வெகுகாலமாய்ப் புகாராயிருந்து வருகிறது. பொது நலத்தை யுத்தேசித்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாங்கியானது பிடிவாதம் செய்வது ஸரியல்ல. ஆகையால் ஐக்யநாணய ஸங்கங்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு குறைந்தவட்டி விகிதங்களில் த்ருப்தி யடைந்து அவைகளும் அந்த பாங்கியுமாய் ஒத்துப்போகவேண்டும் என்று சுதேசமித்திரன் எழுதுகிறது.

### Four Big Banks.

நான்கு பெரிய பாங்கிகள்.—இங்கிலாந்திலே ரொம்பப் பெரியதான பாங்கிகள் அவை நான்கு இருக்கின்றன.

(1) லாய்ட்ஸ். (2) லண்டன் கௌண்டி அண்ட் வெஸ்ட் மின்ஸ்டர் (3) லண்டன்விடி அண்ட் மிட்லண்ட் (4) நாஷனல் ப்ரொவின்ஷியல் பாங்க் அப் இங்க்லாண்ட். இவைகளில் முதல் மூன்று பாங்கிகளில் ஒவ்வொன்றுக்கும் செலுத்தப்பட்ட மூலதனமும் ரிஸர்வுபண்டுமாக $10\frac{1}{2}$-கோடி ரூபாய்க்குமேல் இருக்கிறது. நாலாவதாகிய நாஷனல் ப்ரொவின்ஷ்யல் பாங்கிக்கு $7\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இருக்கிறது. லாய்ட்ஸுக்கும் லண்டன் கௌண்டி அண்ட் வெஸ்ட் மின்ஸ்டருக்கும் டிபாஸிட்டுகள் 120 கோடி ரூபாய்க்குமேல் போகின்றன. லண்டன் விடி அண்ட் மிட்லண்டுக்கு 117 கோடியாகும். நாஷனல் ப்ரொவின்ஷ்யலுக்குக் கிட்டத்தட்ட $94\frac{1}{2}$ - கோடி ரூபாயாகும். லண்டன் கௌண்டி அண்ட் வெஸ்ட் மின்ஸ்டர் பாங்கியில் சிறிய கணக்குகளைக் கூட வைத்துக்கொள்ளுகிறார்களாம். சிறிய வ்யாபாரியும், குமாஸ்தாக்களும் அதில் கணக்கு வைத்துக்கொள்ளுகிறார்கள். தற்போதும் லண்டன் கௌண்டி அண்ட் வெஸட் மின்ஸ்டருக்கு 344-கிளைபாங்கிகளும் லாயட்ஸுக்கு 565-கிளைகளும் லண்டன் விடி அண்ட்மிட் லண்டுக்கு 659 கிளைகளும் நாஷனல் ப்ரொவின்ஷ்யலுக்கு 264 கிளைகளும் இருக்கின்றன.

### Banking Legislation.

பாங்கிகளுக்கு சட்டமேற்படுத்துதல்.—இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் டிபாஸிட் கட்டவேண்டியது அவச்யமென்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே பாங்கிகளும் டிபாஸிட் கட்டவேண்டியது அவச்யமென்று சட்டம் செய்யக்கூடாதா? பாங்கிகளுக்கு ரிஸர்வு பண்டு இருக்கவேண்டுமென்று சட்டமேற்படவேண்டும். இப்படிச் செய்வதால் ஷேர்ஹோல்டருக்கும் டிபாஸிட்டர்களுக்கும் அவர்கள் போட்ட பணத்துக்கு ரொம்ப பத்ரம் ஏற்படும். பாங்கிப் பணத்தை வட்டிக்கு விடுவதற்கும் சில கட்டுப்பாடுகள் ஏற்படவேண்டும். பாங்கி ஏற்பட்ட இரண்டு மூன்று வருஷம்வரையில் பாங்கிகள் மாறாதபடி சில நிபந்தனைகள் ஏற்படவேண்டும். அது பாங்கியை ஆரம்பித்து நடத்துவோர்கள் கார்யங்களை ஸரிவர நடத்துவார்கள் என்பதற்கு ஒரு அடையாளமாக இருக்கும். இப்படிச் சட்டமேற்படுத்தினால் டிபாஸிட்டர்களுடைய பணமும் ஷேர்ஹோல்டருடைய பணமும் மோசம்போக ரொம்ப இடமிராது.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

**Length of Life.**

**ஜீவதசையின் அளவு.**—இன்ஷ்யூரென்ஸ் கணக்குகளால் இங்கிலீஷ் ஜாதியாரின் தேகஸௌகத்தின் நிலைமையைப்பற்றி சில விஷயங்கள் நன்ருய்த் தெரியவருகின்றன. அவைகளில் ஒன்று, மனிதரின் ஜீவகாலம் பைபிளில் சொல்லியபடி இன்னம் 70 வயஸாகவே இருக்கிறதென்பதே. 70-க்கும் 80-க்கும் மத்தியிலேயே அநேகருடையதேகம் மெலினமடைந்து காலகதியடைந்து விடுகிருர்கள். சென்ற நூறுவருஷ காலமாக 75-வயஸுக்குமேல் சாகிறவர்களின் விகிதத்தில் ஒரு குறைவும் ஏற்படவில்லையென்று கணக்குகளால் தெரியவருகிறது. தற்கால ஸுகாதாரநிலைமைகளும், ரொம்ப மிதமான ஜீவனமும் செய்திருப்பதெல்லாம், முன்னேவிட அதிக ஜனங்கள் 70-வயஸுவரையில் ஜீவித்திருக்கும்படி செய்திருப்பது தான். 80-என்பது இன்னம் தொண்டுகிழமான வயஸைக்குறித்து வருகிறது. சிலர் தான் தொண்டுகிழமாகிய 80-வது வயஸை எட்டிப்பார்க்கலாம்.

**A Lady and her House Insurance.**

**தன்வீட்டை இன்ஷ்யூர் செய்ய விரும்பின ஒரு ஸ்த்ரீ.**—வயது சென்ற ஸ்த்ரீ ஒருத்தி ஒரு பட்டணத்திலிருந்த ஒரு இன்ஷ்யூரென்ஸ் ஏஜண்டைப்போய்ப் பார்த்து தனது வீட்டை இன்ஷ்யூர் செய்ய விரும்புவதாகச் சொன்ஞள். "எவ்வளவு தொகைக்கு இன்ஷ்யூர் செய்யப்போகிறீர்?" என்று ஏஜெண்டு கேட்டார்.

"நூறுபவுனுக்கென்று வைத்துக்கொள்வோம்" என்ருள். "ரொம்பஸரி, நான் உமது வீட்டுக்கு வந்து எல்லாவற்றையும் விசாரித்துச் சொல்லுகிறேன்."

"எனக்கு இன்ஷ்யூரென்ஸைப்பற்றி அதிகமாய் ஒன்றும் தெரியாது" என்று அந்த ஸ்த்ரீ சொன்ஞள்.

"அது ரொம்ப ஸுலபமான விஷயமாயிற்றே" என்று ஏஜெண்டு சொன்ஞர்.

"என் வீட்டை நூறு பவுனுக்கு இன்ஷ்யூர் செய்திருந்து அந்த வீடு நெருப்பினல் எரிந்து போய்விட்டால் எனக்கு நூறுபவுன்கிடைக்கும், அப்படித்தானே?"

"ஆமாம்"

"வீட்டுக்கு நெருப்பு வைத்தது யார் என்று என்னைக் கேட்கமாட்டீர்களே?" "அவச்யம் கேட்போம். வீடு நெருப்புப்பிடித்த விஷயமாய் எல்லாவற்றையும் நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்" என்ருர் ஏஜெண்டு. "அப்படியாஞல் நீர் வரவேண்டாம். எங்கேயோ ஏமாற்றுகிருர்கள் என்று எனக்குத் தெரியும். இப்பொழுதுதான் அவர்கள் ஸமாசாரம் எனக்குத் தெரிகிறது," என்று சொல்லிவிட்டு கிழவி வெளியே போய்விட்டாள்.

**Swadeshi Insurance.**

**ஸ்வதேசி இன்ஷ்யூரென்ஸ்:**—ஸ்வதேசி இன்ஷ்யூரென்ஸைப் பற்றி இந்தியன் நேஷன் பத்ரிகை பின் வருமாறு எழுதுகிறது.

இப்போது அநேகம் ஸ்வதேச இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் இருக்கின்றன. அவைகளில் அநேகம் ப்ரீமியம் முதலியவைகளின் விகிதங்களைக் கணக்குப் போட அறிவு அல்லது அனுபவம் மிகக் குறைவாயுள்ளவர்களால் நடத்தப்படுகின்றன. இவைகள், பாலிஸி ஹோல்டர்களுக்கும், கான்வாஸ்ஸர்களுக்கும் அதிக லாபம் கொடுக்க முயற்சிசெய்து வீண் போட்டி போடுகின்றன. இதஞல் கம்பெனிகளுக்கு அதிக கெடுதல்கள் ஏற்படக்கூடும்.

இப்படிப் போட்டி போடுவதாலும் இன்னம் மற்ற கெட்ட வழக்கங்களாலும் உண்டாகும் கெடுதிகளைத் தடுப்பதற்கும் கம்பெனிகளுக்குள் ஒவ்வொன்றுக்கும் மற்றென்றைப்பற்றி நல்லெண்ணம் உண்டாக்குவதற்கும் கம்பெனிகள் எல்லாம் சேர்ந்த ஒரு ஸங்கம் ஏற்படவேண்டும் என்று ஷை பத்ரிகை எழுதுகிறது. இதுவரையில் இப்பேர்ப்பட்ட ஸங்கம் ஏற்படுத்த யாதொரு முயற்சியும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

# EDUCATION.
# வித்யா விஷயம்.

## Sending Indians Abroad.

இந்தியர்களை வெளிந்தேசங்களுந்து அனுப்புதல்:—இந்தியன் டெக்ஸ்டைல் ஜர்னல் பத்ராதிபர் மிஸ்டர் வாலேஸ் என்பவர் இந்தியமாணவர்களை அயல் தேசங்களுக்குப் போய் வ்யாபாரம் தொழில் இவைகளைக் கற்க அனுப்புவதில் ப்ரயோஜனம் உண்டென்பது ரொம்ப ஸந்தேகமென்கிறார். மாணவர்கள் அங்கே ரொம்ப உழைத்து அநேக பரிசுகள் பெறுகிறார்கள். ஆனால் அப்படி அங்கேபோய் அடையும் தொழில் பழக்கத்துக்குத் தக்கபடி இங்கே ரொம்ப சம்பளமுள்ள உத்யோகம் கிடைப்பது வெகுவாய் துர்லபமென்னலாம். அவர்கள் இந்த தேசத்திலேயே தங்கியிருந்து இந்நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு வேலை செய்து அவைகளைப்பற்றிய விஷயங்களை ஆராய்ந்தால் ரொம்ப நன்றாயிருக்கும். அதிகச் சம்பளம் பெறும்மில் மானேஜர்களெல்லாம் இந்தியாவிலேயே இருந்து அனுபவம் பெற்றவர்களா யிருக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும்மைகத்தொழில்கள் வ்ருத்தியாக ஆக வெளிதேசங்களுக்குப்போய் கற்கவேண்டியதின் அவச்யம் குறைந்து போகிறது. அப்படி வெளிநாடுகளுக்குப்போக வேண்டியது அவச்யமென்றால், மாணவரானவர் இந்தியாவின் தொழில்களைப் பற்றிய விஷயங்களில் அனுபவமடைந்த பிறகு வெளிதேசங்களுக்குப் போனால் அங்குள்ள விசேஷங்களை ஸரிவர கொள்ளஉணர்ந்துஸௌகர்யமாகும் என்று சொல்லுகிறார்.

## Provident Fund for Teachers.

உபாத்யாயர்களுக்கு ப்ராவிடெண்ட் பண்டு:—ஸமீபத்தில் நடந்த சென்னை லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் மீட்டிங்கில் ஆனரபிள் மிஸ்டர் சேஷகிரி அய்யர் ப்ரைவேட் மானேஜ் மெண்டுக்குட்பட்ட ஸெகண்டரி ஸ்கூல்களிலுள்ள உபாத்யாயர்களுடைய நன்மைக்காக கவர்ன்மெண்டின் விசாரணையில் ஒரு ப்ராவிடெண்ட் பண்டு ஏற்படுத்தவேண்டு மென்று ஒரு ப்ரேரணை கொண்டுவந்தார்.

இவ்விஷயத்தில் சென்னை கவர்ன்மெண்டார் அனுதாபங்காட்டி யிருப்பதும், இந்தியா கவர்ன்மெண்டுடன் யோசித்து வருதுவம் தமக்குத் தெரியுமென்றும், ஆயினும் இவ்விஷயமாக ஸ்பெஷல் ட்யூட்டியிலுள்ள மிஸ்டர் ஸ்டோனுடைய மெமோராண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற சிபார்சுகளில் சில மாறுதல் அவச்யமென்றும், உபாத்யாயர்களுக்கு இஷ்டமிருந்தால் பண்டில் சேரலாமென்றிருப்பதை கட்டாயமாகச் சேரும்படி செய்ய வேண்டுமென்றும், உபாத்யாயர்களும் கவர்ன்மெண்டுமே பண்டுக்குத் தொகை உதவ வேண்டுமென்றிருப்பதை ஸ்கூல் மானேஜர்களும் உதவ வேண்டுமென்று செய்யவேண்டு மென்றும், ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்யார்களுக்கும் ப்ராவிடெண்ட் பண்டு நன்மை உண்டாக வேண்டு மென்றும், ஆனரபிள் மிஸ்டர் சேஷகிரி அய்யர் பேசினார். தீர்மானம் கவர்ன்மெண்டால் அங்கீகரிக்கப்பட்டது.

## Government Expenditure on Education.

படிப்பைப்பற்றி கவர்ன்மேண்டின் செலவு;—சென்னை சவர்ன்மெண்டின் வரவு செலவுக் கணக்குகளை சட்டஸபை முன்பாகப் படித்து காட்டின ஸர். எச். ஸ்டூவர்ட் கல்வி விஷயமாய்ச் செய்யப்படும் ஸகல விதமான செலவுகளையும் கண்டு இரண்டு ஸ்டேட்மெண்டுகளை வாசித்தார். இந்த ஸ்டேட்மெண்டுகளில் வருஷ வாரிச் செலவோடுகூட மொத்தமாய்க் கட்டிடம் முதலியவைகளுக்குச் செய்யப்படும் செலவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. முதல் ஸ்டேட்மெண்ட் உயர்தரக்கல்வி முதலிய எல்லாவித கல்வியையும் பற்றினது. இரண்டாவது ஸ்டேட்மெண்ட் கீழ்த்தரப் படிப்பை மட்டும் பற்றினது.

(1) எல்லாவிதப் படிப்பின் மொத்தச் செலவு.

| வருஷம். | கவர்ன்மெண்ட் உதவி லக்ஷ ரூபாய். | ஸ்தல ஸ்தாபனங்களின் உதவி லக்ஷ ரூபாய். | மொத்தம் லக்ஷ ரூபாய். |
|---|---|---|---|
| 1911—12 | 48-86 | 15-10 | 63-96 |
| 1912—13 | 74-02 | 16-43 | 90-45 |
| 1913—14 | 103-25 | 19-31 | 122-56 |

(2) கீழ்த்தரப் படிப்புக்கு மட்டும்.

| வருஷம். | கவர்ன்மெண்ட் உதவி லக்ஷ ரூபாய். | ஸ்தல ஸ்தாபனங்களின் உதவி லக்ஷ ரூபாய். | மொத்தம் லக்ஷ ரூபாய். |
|---|---|---|---|
| 1911—12 | 28-94 | 1C-71 | 39-65 |
| 1912—13 | 42-72 | 11-49 | 54-21 |
| 1913—14 | 49-12 | 13-90 | 63-03 |

இந்த ஸ்டேட்மெண்டுகளில் ஸ்தல ஸ்தாபனங்களின் ஸொந்த ஐவேஜியிலிருந்து கட்டிடங்களுக்சாகச் செய்யப்பட்ட செலவுகள் சேர்க்கப்படவில்லை.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Banana Flour.

வாழைமா.—வாழைக்காயைக் காயவைத்து வற்ற லாக்கி மாவாயிடித்துப் பலகாரம் செய்கிறார்கள். இந்த மாவைப்பற்றி லான்ஸெட் பத்ரிகை பின்வருமாறு கூறுகிறது:— இந்த மா தேகத்தை புஷ்டியாக்கக்கூடியது. விரைவாய் ஜீர்ணமாகக் கூடியது. வாஸனையிலும், ருசியிலும் புதிய வாழைப்பழத்துக்கு ஸமானமானது. இந்த மாவினால் செய்த ரொட்டி மனிதருக்கு விசேஷ உணவுப் பொருளாகிறது: அதைப் பாலுடன் கலந்து சாப்பிட்டால் தனிப்பால் ஜீர்ணமாவதைவிட சீக்ரம் ஜீர்ணமாகிவிடுகிறது. ரஸாயனமுறைப்படி வாழைக்காயைப் பரீக்ஷை செய்ததில் அதில்

| | | | |
|---|---|---|---|
| நீர் | 100-க்கு | ... | 66·25 |
| சாம்பல் | ,, | ... | 1·15 |
| நார்ப்பொருள் | ,, | ... | 0·96 |
| கார்போஹைட்ரேட் | ,, | ... | 28·88 |
| ப்ரோடீட் (நைட்ரொஜின் ஸம்பந்த முள்ளது) | ,, | ... | 1,41 |
| கொழுப்பொருள். | ,, | ... | 1.35 |

இருப்பதாகத்தெரியவருகிறது. ஆபிரிக்காவிலும், மேலிந்தியத்தீவுகளிலும் வாழைக்காய் மாவை ரொம்பவும் உபயோகிக்கிறார்களாம்.

### Guinea Grass.

கினிப்புல்.—(1) இது சீக்ரத்தில் வளரக்கூடிய ஒரு பயிர். 45 நாட்களுக்குள் ஆறுமுதல் எட்டடி உயரம் வளரும். ஒரு ஏகர் நிலத்தில் ஸராஸரியில் 14 டன் நிறையுள்ள புல் கிடைக்கும்.

(2) ஒரு குறித்த காலத்துக்குள் ஒரு குறித்த விஸ்தீரண நிலத்தில் மற்றப் புல் பயிர்கள் எல்லாவற்றையும் விட அதிக அளவு கினிப்புல் விளையும். இந்தப்புல்லில் அதிக உணவு ஸத்து இருக்கிறதால் ஆடுமாடுகள் முதலியவைகளுக்கு நல்ல உணவாகும்.

(4) இது பலவருஷப்பயிராகும். ஒரு தலைமுறைகாலம் வரையில் அழியாமல் பூமியில் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

இதை ஸாகுபடி செய்வதில் அதிக செலவில்லை. விதை முதலுக்கும் அதிக பணம் போடவேண்டியதில்லை. களையெடுப்பது கிடையாது.

(6) ஒரு குறித்த அளவு பூமியிலிருந்து அதிக மாஸூல் எடுப்பதற்கு கினிப்புல் ச்லாக்யமான பயிராகும். ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள பூமியில் உண்டாகும் கினிப்புல்லானது, அதைப்போல் 8-மடங்கு விஸ்தீரணமுள்ள நிலத்தில் இரட்டிப்புச் செலவில் பயிரிடப்படும் சோளத்தட்டையைக் காட்டிலும். அதிகமாயிருக்கிறது இதற்கு மழை பெய்யாத காலத்திலும் கெடுதியில்லை. தீவனப்பயிர் குறைவாயிருக்கும் காலங்களில் இந்தப் பயிர் ரொம்ப உபயோகமுள்ளது.

(7) லூஸர்ன் தீவனப்பயிர், இன்னம் மற்ற தீவனப் பயிர்கள் போல் வ்யாதிகளால் பீடிக்கப்படுவதில்லை.

(8) தீவனப்பயிர் விற்பதில் நோக்கமுடைய விவஸாயிக்கு இந்தப் பயிரை ஸாகுபடி செய்வதில் எப்பொழுதும் நல்ல லாபம் கிடைக்கும்.

### Turmeric.

மஞ்சள்.—இது பொதுவாய் கிழக்கு உஷ்ண ப்ரதேசங்களில் பயிரிடப்படுகிறது. இதன் கிழங்கு பல உருவமும் அளவும் உள்ளது. இதன் முக்ய உபயோகம் சமையலில் சம்பாரப் பொருளாகவும், சமையல் பதார்த்தங்களுக்கு நிறங்கொடுக்கும் உபகரணமாகவும், ஸ்த்ரீகள் ஸ்நானம் செய்யும்போது உபயோகிக்கவும் ப்ரயோஜனப்படுகிறது. இன்னம், மஞ்சள் வார்னிஷூம், ஆல்கலி அதாவது மரவுப்பு இருப்பதைக் காட்டுகிற டர்மரிக் பேடர் என்று சொல்லப்படும். ஒருவித சடுதாசியும் செய்வதற்கு உபயோகப்படுகிறது. மஞ்சள் ஸாகுபடி இஞ்சி ஸாகுபடி போன்றது. அதைப்போலவே ஸுலபமானது. இதற்கு செழிப்பானதும் இளகலானதுமான பூமி ஏற்றது. ஒரு அடி அல்லது அதற்கு மேற்பட்ட அளவு தூரமுள்ள வரிசைகளில் விதைக்கிழங்குகள் நடப்படும். சிலர் மூன்றடி அகலமுள்ள பாத்திகளில் நடுவில் 12-முதல் 18 அங்குலம் படைச்சாலுக்கு விட்டும், கிழங்குகளை நடுகிறார்களாம். நிலத்தை நன்றாய் உழுது தயார்செய்த பிறகு பசுந்தாள் எருவாவது, சாணமாவது பூமிமேல் பரவலாயிட்டு, கிழங்கை நட்டு விடுகிறார்கள். பயிர் ஸுமார் 8-அங்குலம் உயரம் வளர்ந்தவுடன் புதிதாய் உண்டாகும் கிழங்குகள் வெளியில் தெரியாமலிருக்கும்படி பயிருக்கு மண்ணைக் கட்டவேண்டும். அதற்குப் பிறகு பயிரை அதிகம் கவனிக்கவேண்டியதில்லை. குளிர் டருவத்தில் மஞ்சள் வெட்டப்படும். கிழங்குகள் முற்ற ஆறுமாஸகாலம் செல்லும். ஆனால் மூன்று மாஸத்துக் குள்ளாகவே கிழங்குகளை பசசையாக உபயோகிக்கலாம். ஸரியாக ஸாகுபடி செய்தால் ஒரு ஏகர் நிலத்தில், 4000 ராத்தல் கிழங்கு கிடைக்கும். பயிர் வாடினவுடனே மஞ்சள் கிழங்கு வெட்டவேண்டும். கிழங்குகளை வென்னீரில் போட்டெடுத்துப் பின்பு வெயிலில் உலர்த்தினபின் அவை விற்பனைக்குத் தயாராக இருக்கும்.

# BUSINESS METHODS.
# வ்யாபார முறைகள்.

## One Thing at a Time.

ஒரு தடவைக்கு ஒரு ஸாமான்.—ஒரு தடவைக்கு ஒரு ஸாமான் விற்பதால் வழக்கமாய் வாங்காதவர்களும் அநேக விதத்தில் அவர்கள் கவனம் கவரப்பட்டு ஸாமான்கள் வாங்க ஆரம்பிப்பார்கள். மாஸத்துக்கு மாஸம் விளம்பரத்தை மாற்றி, ஸாமானைப்பற்றி புது நோடீஸுகளும் ஸர்க்குலரும் அனுப்புவது ஒரு சிறந்த முறையாகும். ஒவ்வொருவரும் புது ஸாமான்களையும் திருத்தமடைந்தவைகளையும் விரும்பினவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகிறபடியே ஸாமான்களைக் கொடுக்கவேண்டும். ஒரு கம்பெனியார் தங்களுடைய ஸாமான் ஒன்றை ஒரு மாஸம் ஒருவிதமான நிறமுள்ள கடுதாசியிலும், இன்னொரு மாஸம் வேறுவித நிறமுள்ள கடுதாசியிலும் படங்களுடன் விவரித்திருந்தார்கள். வெளிதேசத்திலுள்ளவர்கள் பலர் இவை இரண்டும் வேறு என்று நினைத்து அந்த ஸாமானை வாங்கலானார்கள். அதனால் இவர்களுக்கு அதிக ஆர்டர்கள் கிடைத்தனவாம். ஒரு தடவை விளம்பரங்களைப் போட்டுவிட்டு அவைகளை மாற்றும் வழக்கமில்லாத இந்தியா வ்யாபாரிகள் இவைகளை கவனிப்பது நல்லது.

## The Indian Saddlery Market.

இந்தியாவில் ஜேணம் வ்யாபாரம்.—ஸாட்லரி அண்ட் ஹார்னெஸ் பத்ரிகையில் ஒரு நிரூபர் இதைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதுகிறார். இந்தியாவிலுள்ளவர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்டபடிக்கும், தங்கள் மனஸுக்குத் தோன்றினபடிக்கும் ஜேணங்கள் வேண்டு மென்கிறார்களாம். அவர்கள் தாங்கள் வேண்டுகிற சரக்குகளுக்குத் தகுந்த பணம் கொடுப்பதற்கும் தயாராயிருக்கிறார்களாம். ஆனால் அவர்கள் எண்ணுகிறபடியுள்ள ஸாமான்கள்தான் அகப்படுகிறதில்லை. அவர்களுக்குப் புதிய ஸாமான்களில் ரொம்ப ஆவலிருப்பதால், இந்தியாவிலுள்ள கடைக்காரர்கள் வாரம் வாரம் அல்லது மாஸாமாஸம் இங்கிலாந்திலிருந்து வந்த புதுமையான சரக்குகளைப்பற்றி அந்தந்த வாரம் அல்லது மாஸம் புல்லட்டின்கள் (சிறு காட்லாக்குகள்) வெளியிடுகிறார்கள். அதே மாதிரி பாக்டரிகளும் தங்கள் ஸாமான்களைப் பற்றிய விவரங்களை (காட்லாக்) வெளியிடும்போது பத்ரிகைகளில் வெளியிடுவது நல்லது.

இன்னம், இந்தியாவிலுள்ளவர்களுக்கு இங்க்லீஷ் மார்க்குகள் போட்ட சரக்குகளில் ஆவல் அதிகம். குறிப்பிட்ட மார்க்கு (அல்லது அடையாளம்) வாங்குவோர்களுக்குப் பிடித்துவிட்டால் அநேக ஆர்டர்கள் வருகின்றன. ஜேணத்துக்கும் மற்ற குதிரைக்கு வேண்டிய தோல் ஸாமான்களுக்கும் நல்ல அடையாளம் போடவேண்டும். அது ஸுலபமானதாயும் பார்ப்போர் மனஸைக் கவரக்கூடியதாயுமிருக்க வேண்டும்.

"எங்கள் ஸாமானுக்கு ஆர்டர் கொடுக்கும்போது இன்ன ப்ராண்ட்" அதாவது அடையாளம் உள்ள ஸாமானைத் தருவித்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு லண்டன்கம்பெனி இந்தியாவில் இவை வாங்குவோருக்குத் தெரிவிக்கிறது. இன்னொரு கம்பெனி, "எங்கள் ஸாமானவாங்கும்போது (இன்ன) மார்க்குள்ள சரக்கை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" எங்கள் விலாஸத்தையும் மறக்காதேயுங்கள்" என்று தெரிவிக்கிறது. ஸாமானுக்கு ஒரு தகுதியான மார்க்குப் போடுவது ஒரு ஸாமர்த்தியமானகார்யம். அந்த மார்க்கு பலித்துவிட்டால் அதுவே உயர்ந்ததும் பிறரிடத்தில் விலைக்கு விற்கக்கூடியதுமான ஸொத்தாகும்.

இந்தியர்களுக்குள் இன்னொரு ஆவல் லண்டன் ஸாமான் வேண்டு மென்பதே. அநேக வெளியூர் பாக்டரிகளுக்கு லண்டனில் கிளையாவது ஏஜெண்டாவது இருப்பதால் அவர்கள் விளம்பரம் செய்யும்போதும் விலை ஜாப்தாப்ரசுரம் செய்யும்போதும் அவர்களுடைய லண்டன் விலாஸத்தை உபயோகித்து பாக்டரிக்கு மாத்ரம் அது ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் ஊரின விலாஸத்தை உபயோகிப்பது நன்றாயிருக்கும். அநேக நாட்டுப்புறத்து கம்பெனிகள் இப்படியே செய்து வருகின்றன.

இந்த மூன்றுவித ஆவலையும், அதாவது, புது ஸாமான்கள், மார்க்குகள் போட்ட ஸாமான்கள், லண்டன் சரக்குகள், இவைகள் வேண்டும் என்ற ஆவல் ஸரியானபடி திருப்திபடுத்த ரொம்ப ஏற்பாடுகள் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் நல்ல லாபம் வரக்கூடிய ஆர்டர்கள் கிடைக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. இந்தியாவில் ஜேணம் முதலியவைகளில் வ்யாபாரம் ரொம்ப அதிகமாக வ்ருத்தியாகி வருகிறது. அப்படி வ்ருத்தியானதற்குக் காரணம் தற்கால முறைகளை யனுஸரித்து விற்பனை செய்வதுதான். ப்ரிடன், ஜெர்மனி அமெரிக்கா தேசங்களிலுள்ள வ்யாபார மேதாவிகள் அதிக செலவு செய்ய வேண்டியதும் நல்ல லாபம் கொடுக்கக் கூடியதுமான இந்தியா ஜேண வ்யாபாரத்தை வ்ருத்தி செய்யப்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.
## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### A Novel Cow Milker.

ஒருவிநோதமான பால்கறக்கும்யந்த்ரம்.—அமெரிக்காவில் இண்டியானுபொலிஸ் என்னும் ஊரிலுள்ள ஜான்ஹக்ளர் என்பவர் பால் கறக்கும் யந்த்ரம் ஒன்று புதிதாய்ச் செய்து பேடண்ட் செய்திருக்கிறார். பால் கறக்கும்போது கை என்ன செய்யுமோ அப்படியே அந்த யந்த்ரமும் செய்கிறதாம். அந்த யந்த்ரம் மாட்டு மடியின் அடிப்புறத்தில் பொருந்தும்படி செய்யப்பட்டிருக்கிறது. அது மடியில் மேலுங்கீழுமாகவும் பக்கங்களிலும் நகரமுடியும். ஒவ்வொரு முலேக்காம்புக்கும் அநேக விரல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த யந்த்ரம் வேலேசெய்ய ஆரம்பித்தால் ஒவ்வொரு காம்பிற்கும் வைத்திருக்கும் விரல்கள் மேலிலிருந்து ஒவ்வொன்றும் ஆரம்பித்து கீழே அழுத்திக்கொண்டு வர பாலானது பீச்சப்படுகிறது.

### Agricultural Machinery in the Punjab.

பஞ்சாபில் விவஸாய யந்த்ரங்கள்.—பஞ்சாபில், முக்யமாய் கால்வாய் குடியேற்ற ப்ரதேசங்களில், வேலேயில் விவஸாயிகள் ச்ரமத்தைக்குறைக்க தற்கால யந்த்ரங்களே உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார், யந்த்ரங்களேயும் சீர்திருத்தப்பட்ட கருவிகளேயும் விவஸாயப்பண்ணேகளில் பரீக்ஷித்துப்பார்த்து உபயோகமுள்ளவைகளே ஜனங்கள் உபயோகிக்கும்படி செய்துவருகிறார்கள். அவை யாவன:—பயிரறுக்கும் யந்த்ரம், தூற்றும் யந்த்ரம், போரடிக்கும் யந்த்ரம், இரும்புக்கலப்பைகள், தீவனப் பயிர் அறுக்கும் யந்த்ரம், நிலத்தை ஸமப்படுத்தும் கருவிகள் ஆகிய இவைகளே. பஞ்சாப் கவர்ன்மெண்டார் யந்தரங்களால் வெகு லாபம் ஸம்பாதித்துவிடலாம் என்று வீண்வார்த்தைகள் சொல்லுவதில்லே. ஏனென்றால் முதலில் யந்த்ரங்கள் நல்லவை என்று நம்புவதற்கிட மில்லாமலிருக்கலாம். இரண்டாவது, விவஸாயிகள் யந்த்ரங்களே ஸரியாக உபயோகிக்கத் தெரியாமல் நஷ்டமடையவும் நேரிடும். மேலும் இந்த தேசத்தில் யந்த்ரங்கள் கெட்டுப்போனுல் ரிபேர் செய்யவேண்டிய ஸௌகர்யங்கள் போதாமலிருக்கையில், யந்த்ரங்களே உபயோகிக்கும்போதும், உபயோகித்தபின்னும், அவைகளே ரொம்ப ஜாக்ரதையாக வைத்துக்கொள்ளவேண்டியது அத்யாவச்யமாகிறது. நமது தேசத்து விவஸாயிகள் ரொம்ப கவனமுள்ளவர்களல்ல. கருவிகள் அல்லது யந்த்ரங்களில் ஏதாவது ஒரு பாகம் தளர்ச்சியடைந்துவிட்டாலும், அல்லது வேறு கெடுதல்கள் நேரிட்டாலும் அவைகளே ஸரியாய் கவனித்துவருவதில்லே. வேலே செய்யவேண்டிய பருவம் முடிந்துவிட்டால் தமது கருவிகளே ஒரு அறையிலாவது மூலேயிலாவது போட்டுவிட்டு மறுபடியும் வேலேக்கு எடுக்கும் வரையில் அவைகளே செப்பனிடுவதைப்பற்றி கவனிப்பதில்லே. கடைசிநாள் வரையில் ரிபேர் செய்யாமலிருந்துவிட்டு பின்பு ரிபேர் செய்யவோ, அல்லது யந்த்ரங்களின் தனிபாகங்கள் செய்யவோ வாங்கவோ அவஸரப்படுகிறார்கள். தற்காலத்து யந்த்ரங்களே வாங்குகிறவர்களுக்கு ஸாதகமாக விவஸாய டிபார்ட்மெண்டார் அவைகளே உபயோகிக்கும் விதத்தைப்பற்றிய துண்டு பத்ரங்கள் அச்சிட்டு ப்ரசுரம் செய்து அவர்களுக்குக் கொடுத்தால் கவலேயும் தொந்தரவும் ரொம்பவும் நீங்கிப்போகும்.

### Botanic Marvels.

அற்புதமான மரங்கள்:—இயற்கையில் ஒன்றுக்கொன்று வித்யாஸமான ஜீவராசிகள் பல இருப்பதற்குக் காரணம் ஒரு ஜாதி ஜீவராசியானது மெதுவாகவும் படிப்படியாகவும் மாறி வேறு ஜாதியாக மாறுவதே. இதுதான் தற்காலக் கொள்கை. இதற்குப் பரிணமவாதம் என்று பெயர். இதை டார்வின் என்னும் சாஸ்த்ரி ஏற்படுத்தினர். அது இப்பொழுது இரண்டு ப்ரெஞ்சு சாஸ்த்ரிகளால் மறுக்கப்படுகிறது. பாரிஸ் பட்டணத்தில் அற்புதமான மரங்கள் இரண்டு இருக்கின்றனவாம். ஒன்று பீச்மரம். இதில் பாதம்கொட்டை காய்க்கிறது. மற்ற மரம், பாதாமரம், இதில் பீச்பழம் காய்க்கிறது. ப்ரொபஸர் ஆர்மண்ட் கௌதியர், ஹென்றி பாயின்கரே என்னும் இரண்டு ப்ரெஞ்ச் சாஸ்த்ரிகள் பரிணமவாத சாஸ்த்ர ஸம்பந்தமாய் சில பரிக்ஷைகள் செய்கையில் இந்த மாதிரியாக மாட்டுக் கட்டினர்களாம். இவர்கள் தங்கள் பரீக்ஷை களேப்ரெஞ்ச் சாஸ்த்ர ஸபையில் விவரித்துச்சொன்ன போது, இயற்கையில், ஒரு ஜாதி ஜீவராசியானது மெதுவாயும் படிப்படியாயும் மாறி வேறு ஜாதியாக ஆவதில்லே யென்றும், திடீரென்று மாறுபாடுகள் ஏற்படுகின்றனவென்றும், தற்செயலாகவாவது வேண்டு மென்றாவது ஒட்டுக் கட்டுதல் நேருவதால் தான் இவைகள் வித்யாஸ மடைகின்றன வென்றும் சொன்னர்கள்.

# LAW.
# சட்டம்.

## The Position of a Debenture Holder,

கம்பெனி ஸொத்தின்மேல் கடன் கொடுப்பவ ரின் நிலைமை.—கம்பெனிகள் தங்கள் ஸொத்துக்க ளின் பேரில் கடன் வாங்குவதுண்டு. அப்படிப்பட்ட கடனுக்கு டிபென்சர் கடன் என்று பெயர். அப்படிக் கடன் கொடுத்தவர்களுக்கு டிபென்சர் ஹோல்டர் என்று பெயர். டிபென்சர் கடன் வாங்கின கம்பெ னியை மூடிவிடும்போது கடன்களைத் தீர்க்கையில், டிபென்சர் கடன் கொடுத்த ஈடுஸொத்தானது டிபெ ன்சர் கடனைத் தீர்க்கப்போதாமல்போனல் அந்த டிபெ ன்சர் ஹோல்டரின் நிலைமை என்னவாகும்? டிபெ ன்சர் கடன் கொடுத்தவன் எந்த ஈட்டின்மேல் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஈட்டிலிருந்து பணம் அடைந்தது போக பாக்கிப் பணத்துக்கு மற்றக் கடன் கொடுத்தவர்களோடு தானும் ஒரு கடன் கொடுத்தவனுகிருன். மற்ற கடன் கொடுத்தவர்க ளுக்கு மற்ற ஆஸ்தியிலிருந்து எவ்வளவு விகிதம் கிடைக்குமோ அவ்வளவு டிபென்சர் ஹோல்டருக் கும் உண்டு. டிபென்சர் பத்ரத்தில் எவ்வளவு தொ கை என்று எழுதப்பட்டிருக்கிறதோ அவ்வளவு தொ கை அந்த டிபென்சர் ஹோல்டருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டுமேயல்லாமல், டிபென்சர்கள் முத லில் எவ்வளவு தொகைக்கு விற்கப் பட்டனவோ அவ்வளவு தொகை கெடுக்கவேண்டியதில்லை.

## Master and Servant.

எஜமானனும்வேலைக்காரனும்:—எஜமானனையும் வேலையாளையும் பற்றியுள்ள சட்ட ஸம்பந்தமாய் அ லகபாத் ஹைகோர்ட்டில் ஸமீபத்தில் ஒரு தீர்மா னம் செய்யப்பட்டது. ஒரு குறித்தகாலத்துக்கு ஒரு தடவை சம்பளம் பெறுவதாக ஒப்பந்தம் பேசி வேலை செய்யும் ஒருவேலைக்காரன் வேலை செய்யமறுத்தாலும் ஸரி, அல்லது தன் எஜமானன் நோடீஸ_ கொடுக் காமலே வேலையைவிட்டு நீக்கிவிடபோதுமான ந்யாய மிருக்கும்படிவேலையை ஸரியாய்ச் செய்யாமல் போனு லும் ஸரி, அந்த வேலைக்காரனுக்குக் கடைசியாக சம் பளம் கொடுத்ததற்குப் பிறகு வேலைசெய்த காலத் துக்கு சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொல்வது ந்யாயமில்லை. அதாவது ஒரு வேலைக்காரனுக்கு மா ஸம் மாஸம் முதல் தேதியில் சம்பளம் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த வேலைக்காரன் தன்எஜ மானனுக்கு முன்னுல் நோடீஸ் கொடுக்காமல் 20-ம் தேதியில் வேலையைவிட்டு நீங்கினுலும் அல்லது ந்யாய மான காரணங்களை முன்னிட்டு வேலையிலிருந்து நீக்கப்பபட்டாலும்அவனுக்கு20-நாள் சம்பளம்கிடைக் காது. ஏனென்ருல் அவன் மாஸம் முழுமையும் வேலை செய்வதென்று பேசியிருந்த ஒப்பந்தத்தின்படி அவன் நடக்கவில்லை. இந்த ந்யாயம் தாழ்ந்த வேலையாட் களுக்சேயல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலத்துக் கொரு தடவை சம்பளம் பெறும் எல்லா உத்யோகஸ்தர்களுக் கும் பொருந்தும்.

## Suit against the Tirupathi Mahant.

திருப்பதி மகந்துவின்மேல் வ்யாஜ்யம்:—திருப் பதி மகந்துவின்மேல் தர்மரக்ஷண ஸபையார் சித் தூர் டிஸ்ட்ரிகட் கோர்டில் ஒரு வ்யாஜ்யம் செய்தி ருந்தார்கள். மகந்துவை அந்த ஸ்தானத்தி லிருந்து நீக்கவேண்டுமென்பதும், இல்லாவிடில் அவருடைய நிர்வாகத்தைப்பற்றிய கணக்குகளைப்பார்த்து ஆர்பத் நட்டில் போட்டு இழந்துபோன 3-லட்ச ரூபாய்க்கு அவரை ஜாவாப்தாரியாகச் செய்யவேண்டு மென்பதும் ப்ராதில் கண்ட ப்ரார்த்தனைகள். அந்த வ்யாஜ்யத்தில் பின் வருமாறு தீர்ப்புச் செய்யப்பட்டது:—அந்தத் தொகை மிகுதித் தொகையல்ல வாதலால், கவர்ன் மெண்ட் ஸெக்யூரிட்டிகளில் போடப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை; ஆகையால் நஷ்டத்தை ஈடு செய்ய மகந்து கட்டுப்பட்டவரல்ல. இரண் டாவது, ப்ரஸவாதம் முதலியவைகளை ப்ரதிவாதி ஸொந்தத்துக்கு உபயோகப்படுத்திக்கொண்டு விடுகி ருர் என்ற விஷயம், 1867-ம் வருஷத்துத் தீர்மா னத்திலேயே முடிவுசெய்யப்பட்டிருக்கிறது; அத ஞல் தேவஸ்தானத்துக்கு நஷ்டமில்லை; ஆகையால் நம்பிக்கை மோசமாகமாட்டாது. மூன்ருவது லாயங்களைப்பற்றிய பாத்யம் நன்ருய் விளங்காததால், அவ்விஷயமாய்த் தனி வ்யாஜ்யம் நன்ருய் எழுதப் பட்டு கொண்டுவரப்படவேண்டும். மற்ற தாவாக்க ளெல்லாம் ஆதாரமற்றவை யாயும் அற்பமாயு மிருக் கின்றன. ப்ராது தள்ளப்பட்டிருக்கிறது. வாதிகள் தங்களுடைய செலவைத் தாங்களே கொடுத்துக் கொள்ள வேண்டியது. ப்ரதிவாதி தன்னுடைய செலவை தேவஸ்தானம் ஐவேஜியிலிருந்து ஈடு செய்துகொள்ளவேண்டியது.

# MEDICINE.
## வைத்யம்.

### Whitening the Teeth.

பற்களை வெளுப்பாக்குதல்.—பற்களின் நிறம் ரொம்ப கெட்டுப்போனல் எலுமிச்சம் பழச்சாற்ருல் ப்ரஷ்ஷைக்கொண்டு சுத்தம் செய்யவேண்டும். ஆனல் எலுமிச்சம் பழச்சாற்றை உபயோகித்தவுடன் பல்லைமறுபடியும் ப்ரஷ்செய்து வாயைக் கொப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் எலுமிச்சம்பழத்திலுள்ள புளிப்பானதுபல்லில் பீங்கான் போலுள்ள வஸ்துவுக்குக் கெடுதிசெய்துவிடும்.

### Fruits.

பழங்கள்.—பழங்களில் சுத்தமான ஜலம் ரொம்ப பாகம் இருக்கிறது. அசுத்தமான ஜலம் குடிக்க நேரிடும் இடங்களிலும், காலங்களிலும் பழவர்க்கங்கள் ரொம்ப உதவியாயிருக்கும். பேரிக்காய், ஆப்பில் முதலிய பழங்களில் ஸுமார் நூற்றுக்கு 50 பங்கு பாகம் ஜலம் இருக்கிறது. சர்க்கரைக் கொம்மட்டிப் பழம், வெள்ளரி, முதலியவற்றில் இன்னம் அதிகபாகம் ஜலம் இருக்கிறது. கிச்சிலிப்பழத்திலும் எலுமிச்சம்பழத்திலும் பொடாஷ் ஸம்பந்தமான உப்புக்களும், விட்ரிக் ஆவிட்டும், இருப்பதால் மிகவும் ச்லாக்கியமானவை. அன்னசிப் பழம் உணவை ஜீரணம் செய்வதில் ரொம்ப உபயோக முள்ளது. அதில் பெப்ஸின் என்ருெரு பொருள் இருக்கிறது. அது ஆகாரத்திலுள்ள ஆல்புமன் ஸம்பந்தமான பாகத்தை ஜீரணிக்கச் செய்கிறது. ஜலதோஷத்தால் தொண்டைக்கட்டு ஏற்பட்டால் அதற்கு அன்னசி பழம் ரொம்ப ச்லாக்யமானது என்று சொல்லப்படுகிறது. குளிர் ஜ்வரத்திலும் மலேரியாவிலும் அது உபயோக முள்ளதாம். பேரிச்சம் பழம் வாழைப்பழம் ஆகிய இவற்றில் மனிதன் உயிரோடிருப்பதற்கு வேண்டிய பொருள் எல்லாம் இருக்கின்றனவாம். ஆப்பில் பழத்திலுள்ள உப்பு வகைகளும் ஆவிடுகளும் ரத்தத்தின் தன்மையை வ்ருத்தி செய்யுமாம்.

### Long Life on two meals a day.

தீர்க்காயுளும் இருநேர உணவும்:— 92 வயதுள்ள லெஸ்லி ப்ரேஸர் டன்கன் என்ற வயோதிகர் தம்முடைய தீர்க்காயுளுக்கும் ஸுகதேகத்திற்கும் காரணம் தாம் ஸதா இருவேளை உணவுடன் ஜீவித்ததுதான் என்று சொல்லுகிருர். அவர் ஐந்து ப்ராய முதற்கொண்டே இரண்டுவேளை உணவுடன் இருந்தார். ஒவ்வொருநாளும் ஆறுமைல் தூரம் நடந்து பள்ளிக் கூடம்போய், திரும்பி வரும் பொழுதும் ஆறுமைல் தூரம் நடந்தே வருவார். இப்படியாக 12வருஷம் இருவேளை சாப்பாட்டுடன் நடந்துபோய்ப் படித்தாராம். காலையில் எட்டுமணிக்கு கொஞ்சம் கஞ்சியும் பாலும் சாப்பிட்டுவிட்டு, அதற்குப் பின் எட்டுமணிக்குத்தான் சாப்பிடுவாராம்.

இப்படி வளர்ந்து 16-வது வயதில் 6 அடி உயரமுள்ள தாஷ்டீக தேகமுள்ள பலசாலியாயிருந்தார். இப்பொழுது அவர் உயரம் 6அடி 6 அங்குலம். 50 வருஷகாலம் லண்டனில் ஒவ்வொருநாளும் பதினைந்து மணிநேரம் இருவேளை சாப்பாட்டுடன் வேலை செய்தார். தம்முடைய ஜீவிய காலமுழுவதும் சுருட்டு, லாகிரி வஸ்த்துக்கள் ஒன்றும் உபயோகித்ததில்லையாம். அவர் நாலுதடவை விவாகம் செய்தவர். ஒரு மாதத்திற்கு முன்புதான் அவருடைய நாலாவது மனைவி இறந்துபோய்விட்டாளாம்.

### Cure for Consumption.

க்ஷயம்மாற்றல்:—புரு இறைச்சியிலிருந்தெடுக்கப் பட்ட ஓர்வித நச்சுத்ராவகத்தைக்கொண்டு பீட்மான் என்னும் ஜர்மனி வைத்ய ரொருவர் கன்ஸம்ஷன் என்று சொல்லப்படும் ரோகத்துக்கு வைத்யம் செய்கிருர். அந்த த்ராவகத்தைப் பால்குத்தலாற் தேகத்திற் செறிப்பதே அவர் செய்யும் விசேஷமுறையாம். அவர் இப்போது ஜெர்மனியிலிருந்து ந்யூயார்க்குச் சென்று, அங்குள்ள ஹோடல் ஒன்றில் தங்கி இவ் வைத்யத்தை நடத்துகிருர். க்ஷயரோகிகளனேகர் அவரிடத்திற்சென்று பரிகரிப்புப்பெறுகிருர்கள்.

அமெரிக்கா ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் தம் பொறுப்பில் அவ்வைத்யரிடமிருந்து மருந்துபெற்று வைத்யசாலைகளுக்கனுப்ப யோசிக்கிருர்கள். கனடா அரசாட்சியாரும் அந்த நோக்கத்தோடு அவரைக் கண்டு பேசிவரும்படி ஆளனுப்பி யிருக்கிருர்கள். புரு இறைச்சியை ரோக நிவாரணத்துக்கேற்ற பத்ய முறையென நம்தேச வைத்யர் கூறுகிருர்கள். ஆகவே மேற்படி பீட்மன் கண்டுபிடித்திருக்கும் இப்புது மருந்து நம்தேசத்தார்க்கும் ஏற்றதாகும் என்று நம்ப இடமுண்டு.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Some Notable Pens.

**சில பேர்பெற்ற பேனாக்கள்.**—ஐஸாக்ரீட் என்பவனிடத்துள்ள ஒரு பேனாவுக்கு 75,000 டாலர் விலை கொடுப்பதாகச் சொல்லியும் கொடுக்க மறுத்துவிட்டான். இந்தப் பேனாவானது அந்த தேசாதிபதியாகிய வாஷிங்க்டன் என்பவருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வெகுமதியாய்க் கொடுக்கப்பட்ட ஒரு பெட்டியின் சக்கை யொன்றினால் செய்யப்பட்டதாம். அப்பெட்டியானது முதல் முதல் அமெரிக்காவுக்குப்போன பில்க்ரிம் பாதர்வினுடைய கப்பலின் ஒரு துண்டால் செய்யப்பட்டதாம். ஆகையினால் இது இவ்வளவு விலையேறப் பெற்றதாம்.

சார்லஸ் டிக்கென்ஸ் என்னும் பெரிய அக்ஸ்ய நூலாசிரியன் தன்னுடைய நூல்களை யெழுதிய பேனாவை 300-ரூபாய்க்கு விற்றான்.

### A Lawyer's Bill.

**ஒருவக்கீலின் மரண சாஸனம்:**—ஆயிரக்கணக்காய் த்ரவியத்தை ஸம்பாதித்த ஒரு லாயருக்கு ஸந்ததி யில்லாமற்போக, தன் ஸொத்தைப் பைத்யக்காரருக்கும் அவிவேகிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி எழுதி வைத்திவிட்டு அவர் மரணமடைந்தார். யாரிடமிருந்து தனக்கு அதிகமாகப் பணம் கிடைத்ததோ அவருக்கே கொடுத்துவிடுதல் ந்யாயமென்று அந்த மரண சாஸனத்தில் எழுதினாராம்.

### A Miser.

**ஒரு லோபி:**—தானதர்மங்களின் பலனைக் குறித்து வெகுநேரம் கேட்கும்போது மனங் கரையும்படி ஒரு ஸ்வாமிகள் உபந்யாஸம்செய்தார். அப்பொழுது ஒரு லோபியாகிய தனவான் எழுந்து, ஆகா! இன்றைய உபந்யாஸத்தை எவ்வாறு புகழ்வேன்? அதைக்கேட்ட பிறகு கண்டவர் எல்லாரையும் தர்மம் கேட்டு த்ரவியம் ஸம்பாதிக்க மனம் வராதவர்கள் யாராவது இருப்பார்களா?" என்று சொல்லிக்கொண்டாடினான்.

### Will float next day.

**மறுநாளே மேலே மிதப்பார்கள்:**—புசற்காற்றடிக்கும் ஒருநாள் சில ஜனங்கள் படகிலேறி ஒரு நதியைச்கடந்து கொண்டிருக்சையில் காற்று அதிகரிக்க எல்லாரும் பயப்படத் தொடங்கினார்கள். அப்போது அந்தப் படகிலிருந்த ஒரு கிழவி மாலுமியைப்பார்த்து இந்தத் துறையிலே எப்பொழுதாவது மனுஷ்யாள் விழுந்து மூழ்கிப்போனது உண்டாவென்று கேட்க, எப்பொழுதும் மூழ்கிப்போகவில்லை; விழுந்தவர்கள் மறுநாளே மேலே மிதப்பார்களென்று பதில் சொன்னான்.

### The Innocent Boy.

**ஒன்றும் தெரியாத பையன்:**—ஒரு பையன் தரப்பில் வாதித்துக்கொண்டிருந்த ஒருலாயர் தான் மேஜைமேல் குத்தும் போதெல்லாம் அழும்படி அவனுக்குச் சொல்லி வைத்தார். பிறகு வாதிக்கும்பொழுது அந்த லாயர் தவறுதலாய் மேஜைமேல் குத்தப் பையன் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான். அதைக்கண்டு ஜட்ஜ் காரணம் கேட்க, அந்தப் பையன் தன் லாயர் சொல்லிக்கொடுத்த மர்மத்தை வெளியிட்டான். உடனே அந்த யுக்திசாலியாகிய வக்கீல் ஜட்ஜியின் பக்கம் பார்த்து—'பார்த்தீர்களா! இந்தப்பையன் எவ்வளவு தெரியாதவன், இப்படிப்பட்டவன் இத்தனை யுக்தியும் சூதும் செய்து இந்தக் குற்றத்தைச் செய்திருப்பான் என்று கோர்ட்டார் நம்புகிறீர்களா?' என்றுவாதிக்ககோர்ட்டார் பையனை உடனே விடுதலைசெய்தார்.

### Mr. Lloyd George and Anecdotes.

**மிஸ்டர் லாயிட் ஜார்ஜும், வேடிக்கைக்கதைகளும்:**—மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் ப்ரிட்டிஷ் எகாதிபத்ய மந்த்ரிகளில் ஒருவர். அவர் வேடிக்கைக் கதைகளில் மிகுந்த ப்ரியமுள்ளவராய் நகைப்பை விளைவிக்கக் கூடிய துண்டுக் கதைகளை நெட்டுருசெய்து வருகிறாராம். அவர் ஸமீபத்தில் ஒரு விருந்தில் கீழ்கண்ட துண்டுக் கதையைச் சொல்லி அனைவருக்கும் பெருநகைப்பை விளைவித்தார்:—அயர்லாந்து தேசத்தான் ஒருவன் ஒரு பன்றிக்குட்டியை வெகு ப்ரியமாய் வளர்த்து வந்தான். அந்தப் பன்றிக்குட்டிக்கு என்ன பெயர் வைப்பதென யோசித்துக் கொண்டிருக்கையில் அண்டை வீட்டுக்காரன் வந்து என்ன யோஜிக்கிறாய், "ஜார்ஜ்" என்று பெயரிடு என்றான். உடனே அந்த ஐரிஷ்காரன் "அதுஅரசனை அவமதிப்ப தாகுமல்லவா" என, அதைக் கேட்ட நண்பன் லாய்ட் ஜார்ஜ் என்றல்லவா சொன்னேன். என்றான் அது பன்றியை அவமதிப்பதாகுமே என்று ஐரிஷ்காரன் சொல்லிவிட்டு வேறு பெயரிட்டான்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Thinking Horses.

யோசிக்கும் திறமையுள்ள குதிரைகள்.—ஜெர்மனியில் "க்ளெவர் ஹான்ஸ்" என்று அற்புதக் குதிரை ஒன்று உண்டு. அதற்குக் கணிதமும் பாஷையும் நன்றாய்த் தெரியுமாம். இது பத்து வருஷத்துக்கு முன்னாலேயே ரொம்ப க்யாதி யடைந்துவிட்டதாம். இப்போது அதைப்போலவே அற்புத சக்தி வாய்ந்த இரண்டு குதிரைகள் மத்ய ப்ரஷ்யாவில் எல்பர்பீல்ட் என்னும் ஊரில் இருக்கின்றனவாம். அவைகள் இரண்டும் அராபிக் குதிரைகளாம். அவைகளின்பெயர் முறையேமகம்மட்,ஸாரிப்என்பனவாம். அவை இரண்டும் ஒரு உபாத்யாயருக்கு ஸொந்தமானவைகளாம். அவர் அவைகளுக்கு யோசனை செய்யவும் கணக்குப் போடவும் கற்றுக்கொடுத்திருக்கிறார். அவைகளுக்கு நான்குவருஷம் ச்ரமப்பட்டு ஜெர்மன் பாஷையும். ப்ரெஞ்ச் பாஷையும் கற்றுக் கொடுத்திருக்கிறாராம், அந்த பாஷைகளைப் பேசினாலும் ஸரி, அவைகளை எழுதிக்காட்டினாலும் ஸரி, அவைகள் அந்த பாஷைகளை அறிந்து கொள்ளுகின்றனவாம். கேள்விகள் கேட்டால் அவைகள் பதில்களைக் காலால் தட்டிக்காட்டுகின்றனவாம். அவைகளுக்கு கணிதத்திலுள்ள அறிவு ரொம்பவும் ச்லாகிக்கத்தக்கது. குட்டை வகுத்தல், நீண்ட வகுத்தல், பெருக்கல், கூட்டல், கழித்தல் முதலிய கணக்குகளுக்கு ஸரியாய் விடை சொல்லுகின்றனவாம். 5-ஸ்தானமுள்ள ஒரு எண்ணை வெகு சீக்ரம் நான்கால் பெருக்கி தப்பில்லாமல் விடைகொடுக்கின்றன. அவைகள் தங்கள் பெயரை எழுத்துக்கூட்டுவதோடு நாட்களின் பெயரையும் மாஸத்தின் பெயரையும் தெரிவிக்கின்றனவாம். ஹாம்பர்க்கிலுள்ள ஒரு பத்ரிகைக்காரன் இந்தக் குதிரைகளைப்பற்றிய விஷயங்களை முதல் தடவையாக வெளிப்படுத்தினர். ஸாரிப் என்னும் குதிரை அவர் முன்னிலையில் பின்வரும் அற்புதமான வேலைகளை செய்து காட்டிற்று.

64-என்னும் எண் கருப்புப் பலகையில் எழுதிக் காட்டப்பட்டது. ஸாரிப் என்னும் குதிரை இடது முன்னங்காலால் 6 தடவையும் வலது முன்னங்காலால் 4-தடவையும் பூமியைத் தட்டிற்று.

எண்களை திரும்பி வாசிக்கும்படி சொல்ல 46 என்னும் எண்ணைக் காலால் தட்டிக் காட்டிற்று அந்தஎண்களைக்கூட்டு" என்று கட்டளையிடவே தரையில் 10-தடவை தட்டிற்று. கூட்டி வந்ததை 4-ல் பெருக்கச் சொல்ல, இடது காலால் 4-தடவை தட்டிவிட்டு வலது காலை அசைக்காமல் இருந்தது! ஐந்தை ஏழால் பெருக்கினால் எவ்வளவு என்று கேட்க 35-என்று சொல்லிவிட்டது. அதன்மேல் அதன் ஸொந்தக்காரர்—உபாத்யாயர்,—அது எவ்வளவு தப்பாகும்? என்று கேட்டார். உடனே ஸாரிப் காலால் ஒரு தடவை பூமியைத்தட்டிற்று! "நேற்று என்ன தேதி" என்று கேட்டதற்கு "25" என்று ஸரியாய்ச் சொல்லிற்று. இன்னம் மாஸம் முடிய 4-நாள் இருக்கின்றன வென்றும், இன்னொரு கேள்விக்கு லீப்வருஷம் நான்குவருஷத்துக்கு ஒரு தடவை வருகிறதென்றும் பதில் கொடுத்தது. உபாத்யாயர் ஒருமுகக் கண்ணாடியை அதன் முகத்துக்கெதிரே காட்டி "அதுயார்" என்று கேட்க Ich (I-நான்) என்னும் வார்த்தைக்கு வேண்டிய எழுத்துக்களைப் பொறுக்கி எடுத்து வைத்தது. அதன் பெயராகிய ஸாரிப் என்னும் வார்த்தையை ஸரியாய் எழுத்துக்கூட்டிற்று. மகம்மத் என்னும் குதிரையும் இதைப் போலவே அற்புதச் செய்கைகளைச் செய்து காட்டிற்று". இந்தக் காலத்தில் இவைகள் ரொம்பவும் ஆச்சர்யமாகவே இருக்கின்றன.

### 27 Children at Thirty-five.

35-வயதில் 27-பிள்ளைகளைப் பெற்றவள்:—அமெரிக்கா ஐக்ய மாகாணத்துக் கிளீவ்லண்டிலுள்ள க்ளார்க் என்னும்மாது 27-பிள்ளைகளைப்பெற்றவளாம் அவளுக்கு வயது 35 அவள் கடைசியாக 4-பிள்ளைகளைப் பெற்றாள். இவ்வாறே இதற்கு முன்பும் இவள் நான்கு பிள்ளைகளைப்பெற்றாள். மூன்றுமுறை மும்மூன்று பிள்ளையும், ஐந்து முறை இரட்டைப் பிள்ளைகளையும் பெற்றாள். இவ்வாறு ப்ரஸவித்த 27 பிள்ளைகளுள், 6-பிள்ளைகள் தான் உயிருடனிருக்கின்றன, மூத்த பிள்ளையின் வயது-12இளைய பிள்ளையின் வயது2. இந்தஸ்திரீயின் தாயார் 28-பிள்ளைகளைப் பெற்றார்களாம். இவர்களும் ஒரே ப்ரவஸத்தில் மூன்று பிள்ளைகளையும் பெற்றிருக்கிறார்களாம்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### To Remove the Odour of Castor Oil.

சித்தாமணக்கெண்ணெயின் துர்நாற்றம் நீக்கு முறை.—ஒரு அவுன்ஸ் சித்தாமணக் கெண்ணெயை ஒரு மேஜைக் கரண்டியளவு தேனுடன் ஒரு கோப்பை சுடுநீரி லூற்றி நன்ருகக் கலக்கித் தெளிந்த பிறகு எண்ணெயை வடித்துக்கொண்டால் அதில் துர்நாற்றம் சிறிது மிராதாம். இம்முறை சித்தாமணக்கெண்ணெ யுண்பவர்க்கு மிகவு முபயோகமானது.

### Protection against Mosquitoes.

கொசுக்கடிக்கோர் உபாயம்.—கொசுக்களுக்கு சிவப்புநிறம் வெகு ப்ரியமாம். மஞ்சள் நிறம் அவைகளுக்கு அறுவெறுப்பு. ஸாதாரண இருட்டிலுங்கூட நிறங்களின் வித்யாஸத்தை அறியக்கூடிய சக்தி கொசுக்களுக்குண்டு. ஆகவே நித்ரை செய்யும் போது மஞ்சள்நிற உடுப்புகளை உபயோகித்தால் கொசு கிஞ்சித்தும் தொந்தரவு செய்யாதாம்.

### How to Make an Old File Cut Like New.

பழைய அரத்தைபுதிய அரம்போல் ராவச்செய்தல்.—பழைய அரம் ஸரியாய் ராவாவிட்டால் அடுப்புக்கரியை அதன்மேல் இரண்டொரு தடவை தேய்க்கவும். பிறகு அதை உபயோகித்தால் ஸரியாய் ராவும். அரபொடியும் அரத்தில் தங்கித் தடை செய்யாது.

### The Rat Trouble.

எலி உபத்ரவம்.—டார்டார் எமடிக் என்னும் மருந்தை எலிகளுக்கு ப்ரியமான உணவில் கலந்து அவைகளின் வளைகளுக்குப் பக்கத்தில் வைத்து விட்டால் எலிகள் தங்களிருப்பிடத்தை விட்டுவிட்டுப் போய் விடும் என்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை கூறுகிறது. இதைப்பரீக்ஷித்துப் பார்ப்பது நல்லது.

### Medicine Bottle Cork.

மருந்து புட்டிக்கு மூடி.—ஒரு புட்டியிலிருக்கும் மருந்தை சொட்டு சொட்டாக விடவேண்டுமென்ருல், அதன் கார்க்கு மூடியை பின்வருமாறு செய்து போடலாம். கார்க்குக்கு இரண்டு பக்கத்திலும் சிறிது ஆழமாக நீளக்கீறிவிடவேண்டும்; பக்கவாட்டில் எதிர் எதிராகச் செய்யவும். வழக்கம்போல் அதை வைத்து புட்டியின் வாயை மூடி பிறகு கவிழ்த்தால், ஒரு கீறல் த்வாரத்தின் வழியாகக் காற்று புகுந்து, மற்ருெரு கீறல் வழியாக மருந்து வழிந்துவந்து சொட்டும். மருந்து அதிக நீராயிருந்தால் சிறிய கீறல்போதும்; கெட்டியான ஷர்பத்தும் எண்ணெயுமா யிருந்தால் த்வாரத்தைச் சற்று அகலமாகச் செய்து கொள்ள வேண்டும்.

### Care of Books.

புஸ்தகங்களை ஜாக்ரதையாக வைத்திருத்தல்.—விலையுயர்ந்திருப்பதால் அடிக்கடி வெளியில் எடுத்துத்துடைத்து வைக்கும் சில புஸ்தகங்களை மாத்ரம் கண்ணுடி பீரோக்களில் வைக்கலாமே ஒழிய புஸ்தகங்களை வைக்கும் விஷயத்தில் கண்ணுடி பீரோக்களை எப்பொழுதும் தவிர்ப்பது நல்லது. கண்ணுடி பீரோமுதலியவைகளில் காற்று புகமுடியாமல் காற்ருேட்ட மில்லாமலிருப்பதால், பூச்சி,செல் முதலியவை உண்டாவதற்கு ஹேதுவாகிறது. பீரோவின் அறைகளில் புஸ்தகங்களுக்குப் பின்னுல், துணி அல்லது ப்ளானல் துண்டுகளை, பென்ஸைன், பினைல், புகையிலையின் சாறு, டர்பென்டைன் ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றில் நனைத்து வைப்பதால் புஸ்தகங்கள் கெடாமல் இருக்கும். அடிக்கடி பழைய துண்டுகளை எடுத்தெறிந்து விட்டு புதுத்துண்டுகள் உபயோகிக்கவேண்டும்.

### Hot Salt Water.

உப்புக்கரைத்த வென்னீர்.—ரொம்ப நேரம் நிற்பதாலும் நடப்பதாலும் கால்கள் வலியெடுத்தாலும், ரொம்ப நேரம் வேலைசெய்வதால் கைகால்கள் களைத்துப் போனுலும், அவைகளுக்கு உப்புக்கரைத்த வென்னீர் விட்டுக் கழுவுவது ரொம்ப ச்லாக்யமானது. ஜலம் பொறுக்கக்கூடிய சூடாக இருக்க வேண்டும். உப்பும் நிறைய இருக்கவேண்டும். ஆனல் மிதமிஞ்சியிருந்தால் சதை புண்ணுகி எரிச்சலெடுக்கும். கணுக்காலில் சுளுக்குஉண்டானுல், அந்த பாகத்தை அரைமணி நேரம் உப்புக்கரைத்த ஜலத்தில் கழுவவும். ஜலம் சூடு குறைந்து போனுல் மறுபடி சுடவைத்துக்கொள்ளவேண்டும். பிறகு கம்பளியால் (ப்ளானல்) சுற்றிவைத்துப் பிறகு மூன்று நான்கு மணிக்கொருதரம் மறுபடியும் உப்புக்கரைத்த வென்னீரால் கழுவவும்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

ஏப்ரல்மீ 1-தேதி.—

**விலைவாசி ஏற்றத்தைப்பற்றிய விசாரணை.**—விலைவாசி ஏற்றத்தைப்பற்றிய விசாரணை முடிந்து விட்டது. அதைப்பற்றிய ரிபோர்ட் அடுத்த மாஸம் இந்தியா கவர்ன்மெண்டாரிடம் கொடுக்கப்படும்.

**துருக்கி பால்கன் யுத்தம்.**—பல்கேரியர்கள் அட்ரியனேபிலைப் பிடித்ததில் அவர்களுடைய ஸைன்யத்தில் இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் சேர்ந்து 10,000 பேர் முதல் 12,000 பேர் வரையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

2-தேதி.—

**வைஸ்ராயின் பிறந்தநாள் கொண்டாட்டம்.**—வைஸ்ராய் அவர்கள் டெல்லி விபத்துக்குப் பிறகு முதல் முதலில் வெளிவந்த சுபதினத்தின் ஞாபகமிருக்கும்படி ஏதேனும் ஒரு தர்மம் செய்வதற்காக அநேக கனவான்கள் நன்கொடைகள் கொடுத்துவந்தார்கள். அந்தக் கொடைகள் லேடி ஹார்டிஞ்ஜின் இஷ்டம்போல் செலவழிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டுவந்தன. லேடி ஹார்டிஞ்ஜ் அவர்கள் வைஸ்ராயின் பிறந்தநாளாகிய வருகிற ஜூன்மாஸம் 20 தேதி யன்று இந்தியாவிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஒரு விருந்துசெய்ய எண்ணினதாகவும், அது தம்மிடமுள்ள தொகையைக்கொண்டு செய்யமுடியாத காரியமென்று கண்டு, பின்பு இந்தியாவில் ஹாஸ்பிடல்களில் நோயால் வருந்திக்கொண்டிருக்கும் சிறுவர் சிறுமிகளுக்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்து அவர்களை ஸந்தோஷப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருப்பதாகவும் ஸர்ஜன் ஜனரல் ஸர் பார்டி லூகிஸூக்குத் தெரிவித்திருக்கிறார்.

**காலஞ்சென்ற க்ரீஸ் அரசர்.**--காலஞ்சென்ற க்ரீஸ் அரசரின் சவச்சடங்கு இன்றையதினம் நடந்தேறியது. அநேக வெளிநாட்டு ராஜ வம்சத்தார்கள் வந்திருந்தார்கள். 60 ஆர்ச் பிஷப்புகள் சடங்கை நடத்தினார்கள்.

**துருக்கி பால்கன் யுத்தம்.**—மாண்டி நிக்ரோ தேசத்தார் ஸ்கூடேரி தங்களுக்கு வேண்டுமென்று விரும்புகிறார்கள். புதிதாய் ஏற்படுத்தப்படும் ஆல்பேனியா தேசத்தோடு ஸ்கூடேரி கோட்டை சேரவேண்டுமென்றும், அந்தக் கோட்டையை மாண்டி நிக்ரோவுக்குக் கொடுக்கக்கூடாதென்றும் வல்லரசுகள் எண்ணுகின்றன. இதற்காக மாண்டி நிக்ரோவைப் பயமுறுத்த கப்பல் படை சேகரிப்பதைப்பற்றி வல்லரசுகள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

3-தேதி.—

**தென்னிந்திய உபாத்யாயர்களின் சங்கம்.**—மேற்படி ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டாகிய ரெவரண்டு ஏ. எப். கார்டினரும் சில மெம்பர்களும் சேர்ந்து கவர்னரைக் கண்டுகொண்டு ஒரு அட்ரெஸ் வாசித்தார்கள்.

**மிஸஸ் பாங்கர்ஸ்ட்.**—ஸ்திரீ ஸ்வதந்த்ர வாதிகளின் தலைவியாகிய மிஸஸ் பாங்கர்ஸ்ட், லாய்ட் ஜார்ஜின் வீட்டைக் கொளுத்தும்படி ஏவிவிட்ட குற்றத்திற்காகக் கைதிசெய்யப்பட்டு 3 வருஷம் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டார்.

4-தேதி.—

**பம்பாய் புது கவர்னர்.**—பம்பாயின் புதிய கவர்னராகிய லார்ட் வில்லிங்டன் அவர்களும் லேடி வில்லிங்டனும் இன்று பம்பாய்க்கு மெயில் ஸ்டீமரில் வந்திறங்கினார்கள்.

**கவர்னர் செய்த ஒரு விருந்து.**--இன்று ஸாயந்திரம் சென்னை கவர்ன்மெண்ட் ஹவுஸில் கவர்னர் அவர்கள் சட்டஸபை மெம்பர்களுக்கு ஒரு விருந்து செய்வித்தார். மற்ற கனவான்களும் ஹைகோர்ட் ஜட்ஜூகளும் வந்திருந்தார்கள்.

**துருக்கி பால்கன் யுத்தம்.**—மாண்டி நிக்ரோ ஸ்கூடேரியை விட ஸம்மதிக்காததினால், மாண்டி நிக்ரோ கடற்கரை முற்றுகை போடப்படும் என்றும், ஆனால் சண்டை ஒன்றும் நடக்காதென்றும், உணவுப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து வரமுடியாமல் மாண்டிநிக்ரோ கஷ்டப்பட்டு சொன்னபடி கேட்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதென்றும் சொல்லப்படுகிறது. யுத்தகப்பல்கள் மாண்டிநிக்ரோ கடற்கரையை முற்றுகையிடும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கின்றன.

துருக்கி பால்கன் யுத்தம்.—ஸ்கூடேரியை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று எண்ணி மாண்டி நீக்ரோ ஸ்கூடேரி கோட்டையைத் தாக்கினதில், 4000 மாண்டிநீக்ரோ போர்வீரர்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

5-தேதி.—

சட்ட ஸபை.—இன்றையதினம் நடந்த சென்னை சட்டஸபையில் மாகாண வரவு செலவு மதிப்பு திட்டக் கணக்குகளைப் பற்றிய விவாதம் முடிவுபெற்றது. லார்ட் பெண்ட்லண்ட் தமது முடிவுப்பேச்சில் ஆனரபில் மெம்பர்களுக்கு நன்றி செலுத்திவிட்டு, ஜனப்ரதிநிதிகளில் ஸீனியர் மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை தம் பேராலும், தமது ஸகபாட்டிகள் பேராலும் கவர்ன்மெண்ட் போனவருஷம் செய்து வந்த வேலையை மதித்துப் பேசினது தகுதியே யாகுமென்றும், கவர்ன்மெண்டாருக்கு அவர் பேசியது உத்ஸாகத்தைக் கொடுக்கிறதென்றும், அவர் அப்படி கவர்ன்மெண்டை மதி[illegible] பேசினதற்காகத் தாம் அவருக்கு நன்றி செ[illegible]வதாகவும் சொன்னார். அவர் கவர்ன்மெண்டை [illegible]முடைய கவர்ன்மெண்ட்" எனச் சொன்னது [illegible]க்கு மிகுந்த உத்ஸாகத்தைக் கொடுக்கிறதென்றும் [illegible]சான்னார்.

பம்பாய் கவர்னர்.—பம்பாய் கவர்னராயிருந்த லார்ட் ஸைடன்ஹாமும் லேடி ஸைடன்ஹாமும் இன்றையதினம் பகல் 2 மணிக்கு பம்பாயை விட்டுப் புறப்பட்டார்கள்.

பம்பாயில் புது கவர்னர்.—பம்பாயின் புது கவர்னராகிய ல்ார்ட் வில்லிங்டன் அவர்கள் இன்று காலை 11½-மணிக்கு கவர்ன்மெண்ட் ஹௌஸில் கவர்னர் ஸ்தானத்தை வகிக்கத் தொடங்கினர்.

8ந்தேதி.—

துருக்கி பால்கன் யுத்தம்.—பல்கேரியர்கள் அட்ரியநோபிலைப் பிடித்ததில் நேர்ந்த ச்ரமத்தாலும் சடால்ஜாவில் ஸமீபத்தில் நேர்ந்த அபஜெயத்தில் மேலான வம்சங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ரெஜிமெண்டுகள் (ஸைன்யங்கள்) நிர்மூலமாக்கப்பட்டதாலும், பல்கேரியாவுக்கு ஸமாதானத்தில் விருப்பம் உண்டாயிருக்கிறதாம்.

சீன குடி யரசு.—சீனக் குடியரசின் முதல் பார்லிமெண்டு இன்றையதினம் தலைநகராகிய பெகிங்கில் கூடிற்று. 500 ஜனப்ரதிநிதிகளும், 177 ஸெனேடர்களும் வந்திருந்தார்கள். ஜனப்ரதிநிதிகளின் ஸபையில் ஸீனியர் மெம்பரானவர் ப்ரதிநிதிகளை வரவேற்று பார்லிமெண்டைத் திறந்து வைத்தார். யுவான்-ஷி கே டெலிகேட்டுகளுக்கு ஒரு சுபத் தந்தி ஸமாசாரம் அனுப்பி குடியரசு 10,000 வருஷமளவும் இருக்குமென்று வாழ்த்தினர்.

லார்ட் கர்ஸனின் உருவ கற்சிலை.—இந்தியாவின் வைஸ்ராயாயிருந்த லார்ட்கர்ஸனின் உருவக்கற்சிலையை வங்காளத்துக் கவர்னர் லார்ட் கார்மிகேல் அவர்கள் இன்று கல்கத்தாவில் திறந்துவைத்தார்.

போப்.—ரோமிலுள்ள போப் அவர்கள் ரொம்பவும் அஸௌக்யமா யிருக்கிறதாகத் தெரியவருகிறது.

எச். இ. கவர்னர்.— இன்றையதினம் கவர்னர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காகப் புறப்பட்டுப்போனர். முதலில் கோயம்புத்தூருக்குப் போகிறார்.

9-தேதி.—

காலஞ்சென்ற ரானடே.—காலஞ்சென்ற ஜட்ஜ் ரானடேயின் உருவச்சிலை இன்று ஸாயந்திரம் ஆனரபல் மிஸ்டர் வி. எச். எ. ஹில் அவர்களால் கூபரேஜ் மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்தச்சிலை மிஸ்டர் ஜி. கே. மாட்ரே என்னும் மராட்டிய சிற்பியால் செய்யப்பட்டது. அந்த வேலைக்காக அவருக்கு ரூ. 17,000 கொடுக்கப்படுமாம். (ரானடேயின் சரித்ரத்தைப் பார்க்க.)

கவர்னர்.—இன்று காலையில் கவர்னர் அவர்கள் கோயமுத்தூரில் இறங்கி கலெக்டரால் வரவேற்கப்பட்டுப் பின்பு கலெக்டர் பங்களாவுக்குப் போனர். காலை போஜனம் ஆனபிறகு முனிஸிபாலிடியாரும் டிஸ்ரிக்ட் போர்டாரும் உபசாரபத்ரம் வாசித்தார்கள். அதற்குப்பதிலாக கவர்னரவர்கள் ப்ளேக்கை ஒழிப்பதற்காக கவர்ன்மெண்டார் பண உதவியும் ஜன உதவியும் செய்வார்கள் என்றும், சிறுவாணிநதியிலிருந்து ஜலம் கொண்டுவந்து பட்டணத்திற்கு ஜலம் ஸப்ளை செய்யும் ஸ்கீமை ஸானிடரி போர்டார் ஒப்புக்கொண்டால் கவர்ன்மெண்டார் அந்த ஸ்கீமின் செலவில் பாதிக்கு அதிகப்பட்ட தொகையை உதவியாகக் கொடுத்து மீதித் தொகையைக் கௌன்ஸிலுக்குக் கடன் கொடுக்கக்கூடுமென்றும், சில இடங்களிலுள்ள ஆஸ்பிடல் கட்டிடங்களுக்காக 34,000ரூ கவர்

ன்மெண்டார் ஸாங்க்ஷன் செய்திருக்கிறதாகவும் சொன்னார்.

பிறகு கலெக்டர் அங்குவந்திருந்தவர்களில் பலரை கவர்னருக்கு அறிமுகம் செய்வித்தார்.

பின்பு அவ்வூரிலுள்ள காஸ் பாரஸ்ட் ம்யூஸம் முனிஸிபல் ஆஸ்பத்ரி இவைகளைப் போய்பார்த்தார்.

எச். இ. கவர்னர் அவர்கள் கோயம்பத்தூர் விவஸாயக் காலேஜைப் போய்ப்பார்த்தார். அங்கே ப்ரின்ஸ்பல் அவர்கள் கவர்னரை வகுப்புகளுக்கும் சாஸ்த்ர சோதனை சாலைகளுக்கும் கூட்டிப்போய்காட்டினார். பிறகு காலேஜ் ஹோஸ்டலையும், பண்ணைத்தோட்டத்தையும் போய்ப்பார்த்தார்கள். தோட்டத்தில் புதுக்கலப்பையால் உழுவதையும் கம்போடியாப் பருத்தி எடுப்பது முதலிய மற்ற வேலைகளையும் பார்த்துவிட்டுப் பின்பு மாடுகள் இருக்கு மிடத்தைப் போய்ப்பார்த்தார்.

## 11-தேதி.—

**கவர்னர்.**—இன்று காலையில் எச். இ. கவர்னர் அவர்கள் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்ட் வீவிங்மில்லைப் போய்ப் பார்த்தார். பிற்பகலில் கலெக்டர் பங்களாவில் கவர்னர் கோயம்புத்தூர் ஜில்லா டிவிஷனல் ஆபீஸர்களையும் தாசில்தார்களையும் கண்டு அவரவர்களுடைய அதிகார ப்ரதேசங்களுக்கு வேண்டிய தேவைகளைப் பற்றியும், முக்யமாய் ரோடுகள், போக்குவரவு ஸாதனங்கள், ஜலஸப்ளை ஸுகாதாரம் இவற்றைப்பற்றியும் அவர்களோடு பேசினார். பிறகு வேறு கனவான்களுக்கும் பேட்டி கொடுத்தார். ஸாயந்திரம் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட காரனேஷன் பார்க் என்னும் பூந்தோட்டத்தைத் திறந்து வைத்தார். அந்தப் பார்க்கில் ஏற்படுத்தப்பட்டிருந்த விளையாடும் இடத்தில் புட்பால் (Foot ball) சிறிது நேரம் ஆடினார். பிறகு ஜில்லா வித்யாதிகாரிகளுடன் வித்யா ஸம்பந்தமாய் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். ராத்ரி $10\frac{1}{2}$ மணிக்கு கள்ளிக்கோட்டைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## 12-தேதி.—

**மிஸஸ் பாங்கர்ஸ்ட்.**—சிறையிலடைக்கப்பட்டிருக்கிற ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதியாகிய மிஸஸ்பாங்கர்ஸ்ட் ஜெயிலில் ஆகாரம் சாப்பிடாமல் ஹடம் செய்கிறாள். ரொம்ப நேர்த்தியான உணவுகள் கொடுத்தாலும் அவைகளைத் தொடுவதில்லையாம்.

**எச். இ. கவர்னர்.**—எச். இ. கவர்னரவர்கள் இன்று காலையில் $6\frac{3}{4}$ மணிக்கு கள்ளிக்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தார். கலெக்டரும் டிஸ்ட்ரிக் ஜட்ஜும் அவரைக் கண்டுகொண்டார்கள். பிறகு கலெக்டராபீஸுக்குப் போனார்கள். அங்கே முனிஸிபல் சேர்மன் மிஸ்டர் ஒ. க்ருஷ்ணன் அவர்கள் கவர்னரை வரவேற்று மேல் மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கே முனிஸிபல் கௌன்ஸில் மெம்பர்கள், டிட்ஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்கள் இன்னம் மற்ற நிலஸ்வான்தார்கள் முதலிய கனவான்கள் வந்திருந்தார்கள். முனிஸிபாலிட்டி டிஸ்ட்ரிக்ட் போர்ட், ஜென்மி ஸபை, இந்த மூனறும் கவர்னருக்கு உபசாரப்பத்ரம் வாசித்தன. கவர்னரவர்கள் அவர்கள் செய்த உபசாரத்துக்காக வந்தனம் செலுத்தி, தாம் அந்த ஜில்லாவில் ஸ்வல்ப காலமே இருக்க நேரிடுவதற்காக வருத்தப்படுவதாகவும், தாம் தமது ஆட்சியின் ஆரம்பத்திலேயே இந்த ஜில்லாவுக்கு நேரில் வந்து அவர்கள் [illegible]ற்சிகளையும் குறைகளையும் கண்டும் கேட்டும் [illegible]துகொள்ள முடிவதைப் பற்றி தமக்கு ஸந்தோஷ[illegible]ருக்கிற தாகவும், அந்த ஜில்லாவின் ரோடுகள், [illegible]வி, ஸுகாதாரம் ஆகிய இவைகளுக்கு கவர்ன்[illegible]டார் தக்க உதவி செய்யக்கூடுமென்று தாம் நம்பு[illegible]வதாகவும், ஜென்மிஸபையார் கூறிய சில விஷயங்களை கவர்ன்மெண்டார் நன்றாய் கவனிப்பார்கள் என்றும் கூறினார். பிறகு கவர்னர் கலெக்டருடைய வாஸஸ்தலத்துக்குப் போனார்.

## 13-தேதி.—

**ஸ்பேய்ன் தேசத்து ஆல்பான்ஸோ அரசர் சுடப்பட்டார்.**—ஸ்பெய்ன் தேசத்து அரசர் ஆல்பான்ஸோ மன்னர் இன்று ஸைன்யத்தைப் பார்வையிட்டு விட்டுத்திரும்பி வந்து கொண்டிருந்தார். பாங்க் அப் ஸ்பெய்ன் கட்டிடத்துக்கு எதிரில் வருகையில் ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு துஷ்டன் அரசன் முன் ஒடி வந்து குதிரையின் கடிவாளத்தை இடது கையால் பிடித்துக்கொண்டு வலது கையால் கைத்துப்பாக்கி (பிஸ்டல்) எடுத்துச் சுட்டான். அரசன் ஆபத்தையறிந்து கொண்டு குதிரையைப் பின்பக்கம் நகரச் செய்தார். குண்டு குதிரைமேல் பாய்ந்தது. உடனே ஒரு போலீஸ்காரன் அந்தத் துஷ்டனைக் கீழே தள்ளினான். துஷ்டன் மறுபடியும் அரசனை நோக்கிச் சுட போலீஸ்காரன் அந்த குண்டுகள் அரசன்மேல்

விழாமலும் ஆகாசத்தை நோக்கிப் போகும்படிச்கும் செய்துவிட்டான். அந்த துஷ்டனைக் கைது செய் திருக்கிறார்கள். இது, இந்த அரசரைக்கொல்ல ஏற் பட்ட இரண்டாவது முயற்சியாகும். இவருடைய கல்யாண காலத்தில் இவரைக்கொல்ல ஒரு பாதகன் முயன்றான்.

14-தேதி.—

எச். இ. கவர்னர்.—இன்று பகலில் கவர்னர் கள்ளிக்கோட்டையில் மலையாளம் ஜில்லா டிவிஷனல் ஆபீஸர்கள், தாசில்தார்களோடு அவர்களுடைய அதி கார ப்ரதேச ஸம்பந்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். பிறகு வித்யாதிகாரிகளுடன் வித்யாவிஷயமாய்ப் பே சிக்கொண்டிருந்தார். ஸாயந்திரம் ஜில்லா கலெக்டர் அவர்கள் கவர்னருக்காக ஒரு தோட்டவிருந்து கச் சேரி செய்துவைத்தார். அநேக கனவான்கள் வந் திருந்தார்கள்.

15-தேதி.—

எச். இ. கவர்னர்.—இன்று காலையில் கவர்னர் பேஸல் மிஷன் ஹாஸ்பிடல், வை.எம்.ஸி.ஏ. கட்டி டம், கவர்ன்மெண்ட் ட்ரெய்னிங் ஸ்கூல் முதலிய வைகளைப் போய்ப் பார்த்தார். பிறகு கப்பலேறி லக்ஷத்தீவுகளைப் பார்க்கப் போய்விட்டார்.

போப்.—போப் குணமடைந்து வருவதாகவும், அவர் தேகஸ்திதி த்ருப்திகரமாயிருப்பதாகவும் தெரி கிறது.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் இன்று கடைசி நாளாக லாகூரில் கூடிற்று. கமிஷனின் ப்ரெஸிடெண்டவர்கள் விசாரணை முடிந் வுடன், "கனவான்களே, இதோடு இந்த மாகாணத் தில் பகிரங்க விசாரணை முடிந்து விடுகிறது. இந்தி யா முழுவதற்கும் விசாரணையும் முடிந்து போயிற்று" என்று சொன்னார்.

16-தேதி.—

ஜெய்ப்பூர் மகாராணி.—விசாகப்பட்டணம் ஜில் லாவிலுள்ள ஜெயப்பூர் ஸமஸ்தானத்தின் மகாராணி யாகிய ஸ்ரீ பட்டமகாராணி ஸர்க்கார் அவர்கள் அதி சாரத்தால் இறந்து போனார். அவர் ரொம்ப பக்தியும், தர்மகுணமும் வாய்ந்தவர்.

டிடானிக்கப்பல் விபத்து முதல் வருஷமுடிவு.— டிடானிக்கப்பல் விபத்தின் முதல் வருஷ முடிவுக் காக இன்றையதினம் ஸௌதாம்ப்டன் துறைமுக த்தில் துக்கநாள் கொண்டாடப்பட்டது. டிடானிக் கப்பலின் ஸொந்தக்காரர்களாகிய வைட்ஸ்டார் லைன் சம்பெனிமேல் நஷ்டத்திற்காக இதுவரை 810 வ்யா ஜ்யங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். நஷ்ட வ்யாஜ் யங்களின் மதிப்பு 4 கோடி ரூபாய்க்கு மேலாகிறது.

17-தேதி.—

துருக்கி பால்கன்யுத்தம்.—இன்னம் ஸமாதானம் முடிவு பெறாவிட்டாலும், துருக்கியரும்பல்கேரியரும் யுத்தத்தை நிறுத்தி வைப்பதென்று ஸம்மதித்திருக் கிறார்கள்.

19-தேதி.—

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—இன்றையதினம் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்கள் பம்பாயை விட்டு லண்டனுக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

ஸங்கீத கான்பரென்ஸ்.—இன்றையதினம் தெ ன்னிந்தியா இந்திய ஸங்கீத கான்பரென்ஸ் தஞ்சா வூரில் கூடிற்று. இந்தக் கான்பரென்ஸை ஏற்பாடு செய்து நடத்துகிறவர் ராவ் ஸாகிப் எம். அப்ரகாம் பண்டிதராவர். இவரே இந்த ஸபையின் ப்ரெஸி டெண்ட். அநேக வித்வான்கள் வந்திருந்தார்கள். அப் ரஹாம் பண்டிதர் அவர்கள் டெலிகேட்டுகளை உபசரி த்து, இந்திய ஸங்கீதம் அபாரமானதென்றும், அது விஷயமாய் ஆராய்ச்சி செய்வது ரொம்ப ச்ரமமான தென்றும், பலருடைய உதவி வேண்டி யிருக்கிற தென்றும், அதுவிஷயமாய் அதிகமான வேலை இன் னம் நடக்காவிட்டாலும் விடா முயற்சியோடு உழை த்து வந்தால் காலக்ரமத்தில் நல்ல வேலை செய்யலா மென்றும் சொன்னார். அநேக வ்யாஸங்கள் வாசிக்கப் பட்டன.

பம்பாயில் ஆயுர்வேத கான்பரென்ஸ்.—பம்பாய் வைத்ய ஸபை ஆதரவின்கீழ் பம்பாயில் ஆயுர்வேத கான்பரென்ஸ் கூடிற்று. சென்னை ஆயுர்வேத காலேஜுக்கு ப்ரின்ஸ்பாலான பண்டிட் டி. கோ பாலாசார்லு அக்ராஸனம் வகித்தார்.

20 தேதி.—

லார்ட்ஸைடன் ஹாம்.—முன்பு பாம்பாய் கவர்ன ராயிருந்த லார்ட்ஸைடன்ஹாமும், அவர் மனைவி யாகிய லேடி ஸைடன்ஹாமும் இன்றையதினம் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அநேக கன வான்கள் அவரை எதிர்கொண்டழைத்தார்கள். இர்

தியா மந்திரிக்குப் பதிலாக ஸர் ஜேம்ஸ டன்லாப் ஸ்மித் அவரைப் போய்ப் பார்த்தார்.

**மதுரைக் கால்நடைக் காட்சி.**—இன்றையதினம் மதுரைக் கால்நடைக் காட்சி ராமனுதபுரம் ராஜாவால் திறந்துவைக்கப்பட்டது. திறந்து வைக்கையில், இது போன்ற கால்நடைக் காட்சிகள் வருஷத்தில் ஒன்றுக்கு மேலும் நடத்தவேண்டுமென்றும், இதேமாதிரி ராமனுதபுரத்திலும், தஸரா காலத்தில் ஒரு காட்சி நடத்துவதற்கு ஏற்பாடுசெய்ய எண்ணியிருப்பதாகவும், மதுரையில் ஒரு விவஸாய காலேஜின்கிளை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் சொன்னர்.

**மதுரை கால்நடைக் காட்சி.**—மதுரையில் நடந்துவரும் கால்நடைக் காட்சி ஸம்பந்தமாய் இன்று ஸாயந்திரம் விவஸாயிகளின் மீட்டிங் ஒன்று நடந்தது. ராமனுதபுரம் ஸமஸ்தானம் திவான் ராவ்பகதூர் எம். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் மீட்டிங்கின் ப்ரெஸிடெண்டாயிருந்தார். அநேக வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன.

22 தேதி.—

**மதுரைக் கால்நடைக் காட்சி.**—இன்று இந்தக் காட்சி ஸம்பந்தமாய் விவஸாயிகளின் மீட்டிங் ஒன்று நடந்தது. அநேக கனவான்கள் விவஸாயிகளுக்கு ஏற்ற விஷயங்களைப்பற்றிப் பேசினர்கள். விவஸாய டிரெக்டர் மிஸ்டர் சாட்விக் அவர்களும் பேசினர்.

23 தேதி.—

**எச். இ. கவர்னர்.**—இன்றையதினம் கவர்னருக்கும் லேடி பெண்ட்லண்டுக்கும் உதகமண்டலத்தில் ஒரு உபசரிப்பு நடந்தது. அநேக பெரிய கனவான்கள் வந்திருந்தார்கள். உதகமண்டலம் முனிஸிபல் கௌன்ஸில் ஒரு அட்ரெஸ் வாசித்தார்கள். கவர்னர் அவர்கள் அட்ரெஸ் வாசித்ததற்காக வந்தனங்கூறி தாம் இந்த மலைப்பட்டணத்தைப் பற்றி நூல்களில் வாசித்திருப்பதாகவும், இந்தப் பட்டணம் இப்பொழுது ரொம்ப முன்னேற்ற மடைந்திருப்பதாகவும், இதன் அபிவ்ருத்திக்காக கவர்ன்மெண்டார் வேண்டிய பணஉதவி செய்திருப்பதாகவும், இன்னம் பண உதவிசெய்யத் தயாராயி இருப்பதாகவும்,இது தக்ஷண ஸைன்யங்களின் ஹெட்க்வார்ட்டராக இருக்கிறதென்று கேட்டு ஸந்தோஷப்படுவதாகவும், பதில் கூறினர்.

**துருக்கி பால்கன் யுத்தம்.**—இதுவரையில் பிடிக்காதிருந்த ஸ்கூடேரியை மாண்டிநீக்ரோ பிடித்துவிட்டது.

24 தேதி.—

**துருக்கி பால்கன் யுத்தம்.**—ஸ்கூடேரி பிடிபட்டதற்குக் காரணம் ஆகாராதிகள் குறைந்து போனதே என்று சொல்லப்படுகிறது. கோட்டையிலிருந்து துருக்கியர்கள் தங்கள் துப்பாக்கிகளையும், சிறு பீரங்கிகளையும் எடுத்துக்கொண்டு பட்டணத்துக்கு வெளியில் சென்றுர்கள். அவர்கள் எதிராளிகளால் மரியாதையாக நடத்தப்பட்டார்கள்.

**இந்தியா ஸிலோன் இருப்புப்பாதை.**—தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியின் ஏஜெண்டாகிய மிஸ்டர் மூர்ஹெட் வி. ஐ. இ. இந்தியா ஸிலோன் இருப்புப்பாதை வ்யாபாரப் போக்குவரத்து ஸம்பந்தமாய் ஸிலோன் கவர்னரோடு ஆலோசனைசெய்து விட்டு அங்கிருந்து திரும்பிவிட்டார். பத்ரிகை ப்ரதிநிதியொருவர் அவரைக்கண்டு பேசியதில், இந்தியா ஸிலோன் இருப்புப் பாதையில், இந்தியாவின் பாகம் அடுத்த ஜூலை மாஸத்திற்குள் முடிந்துவிடு மென்றும், ஸிலோன் பாகமும் கூடிய சீக்ரத்தில் துரிதமாகவே முடிவுபெறுமென்று சொன்னர்.

25 தேதி.—

**துருக்கி பால்கன் யுத்தம்.**—ஸ்கூடேரியைப் பிடித்த மாண்டி நீக்ரோ ஜாதியார் ஸ்கூடேரியை விட்டுப் போகவேண்டும் என்றும், இல்லாவிட்டால் வல்லரசுகள் அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றும், அல்லது தான் அவர்களை அப்புறப்படுத்த அனுமதி கொடுக்கவேண்டும் என்றும், ஆஸ்ட்ரியா வல்லரசுகளைக் கேட்டிருக்கிறது.

**போப்பின் தேகஸ்திதி.**—போப்புக்கு உடம்பு குணமாகி வருகிறது. இப்பொழுது படுக்கையை விட்டு எழுந்துவந்து அநேக மணிநேரம் உட்கார்ந்திருக்கவும் முடிகிறதாம்.

26 தேதி.—

**வடஸர்க்கார் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.**—மேற்படி கான்பரென்ஸ் குண்டூர் ஜில்லாவிலுள்ள தெனலியில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் அக்ராஸனம் வகித்தார்.

கூட்டுறவு முயற்சியால் மதத்வேஷம் குறைகிறதென்றும், இந்தக் கூட்டுறவால் பொருளாதார ஸம்பந்தமாகவும் தொழில் ஸம்பந்தமாகவும் ஸன்மார்க்க ஸம்பந்தமாகவும் அநேக நன்மைகள் உண்டாகக் கூடும்

என்றும், பஞ்சாயத்து முன்காலத்தில் இருந்ததுபோல் இப்போது ஏற்படுவதாய் இருந்தால் தாழ்ந்த வகுப்பாருக்கு அதில் ஸ்தானம் கிடைக்காதாகையால் அதற்குப் பதிலாக கூட்டுறவு ஸங்கங்கள் அவைகளின் வேலையைச் செய்யும் என்றும் இன்னம் பல விஷயங்களையும் சொன்னார்.

27 தேதி.—

வடஸர்க்கார் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—இன்றையதினம் மேற்படி கான்பரென்ஸ் கூடி அநேக தீர்மானங்கள் செய்தது.

கோவாபரேடிவ் யூனியன்களும், ஜில்லா ஸெண்ட்ரல் பாங்கிகளும், உடனே ஏற்படுத்த வேண்டுமென்றும், அநேக க்ராமங்களுக்கு ஒரு ஸங்கம் இருப்பது நல்லதல்லவென்றும், கோவாபரேஷனது விவஸாயம், க்ராமக் கைத்தொழில்கள், கால்நடை இன்ஷ்யூரென்ஸ், ஆகிய இவைகளுக்கும் உபயோகப்படுமென்றும், இன்னம் பல விஷயங்களைப் பற்றியும் தீர்மானங்கள் செய்தது.

28 தேதி.—

எஸ்ஸட் பாஷா.—ஸ்கூடேரியை இதுவரை காத்துவந்த எஸ்ஸட் பாஷா தாமே அல்பானியா ப்ரதேசத்துக்கு அரசன் என்று அறிவித்திருக்கிறார். [அல்பானியா என்னும் ப்ரதேசம் இதுவரை துருக்கிக் கீழ் அடங்கியிருந்தது. வல்லரசுகள் இந்த ப்ரதேசத்தை தனி நாடாக்க எண்ணியிருக்கிறார்கள். இதற்குள் எஸ்ஸட் பாஷா தாம் அதற்கு அரசராக ஆய்விட்டதாக தெரிவித்திருக்கிறார்.]

துருக்கி பால்கன் யுத்தம்.—மாண்டி னிக்ரோ தான் பிடித்திருக்கும் ஸ்கூடேரியை விட்டுவிட வேண்டுமென்றும், ஸ்கூடேரியிலிருக்கும் மாண்டி னிக்ரோக்கள் அந்நகரத்தைவிட்டு நீங்கவேண்டும் என்றும், வல்லரசுகளின் மந்திரிகள் அறிக்கை பத்ரம் ஒன்றை மாண்டினிக்ரோவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாண்டி னிக்ரோ இவர்கள் சொல்வது அந்யாயமென்றும் கொடுமையென்றும் சொல்லுகிறது.

30 தேதி.—

துருக்கி பால்கன் யுத்தம்.—க்ரீக் ஈஸ்டர் விடுமுறை நாளுக்கு முன்னால் தான் ஒரு முடிவான பதிலும் சொல்ல முடியாதென்று மாண்டி னிக்ரோ வல்லரசுகளுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

# SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1913௵ ஏப்ரல்௴ 1௳யிலிருந்து 1913௵ மே௴ 1௳வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| சோபால்பூர் | 0 · 0 | 0 ·80 |
| வால்டேர் | 0 ·44 | 0 ·88 |
| காக்கினாடா | | 0 ·64 |
| மசூலிப்பட்டணம் | 0 ·02 | 0 ·66 |
| நெல்லூர் | | 0 ·42 |
| மதராஸ் | 0 .02 | 0 .61 |
| கூடலூர் | | 0 71 |
| நாகப்பட்டணம் | 0 ·10 | 0 ·71 |
| பாம்பன் | 0 ·18 | 1 ·99 |
| கொழும்பு | 12·18 | 10·53 |
| திருவநந்தபுரம் | 4 ·42 | 4 ·96 |
| கொச்சி | 1 ·74 | 5 .41 |
| கள்ளிக்கோட்டை | 0 ·03 | 3 ·98 |
| மங்களூர் | 0 ·79 | 1 ·51 |
| மெர்க்காரா | 2 ·04 | 2 ·71 |
| ஐதராபாத் | 0 ·27 | 1 ·12 |
| பல்லாரி | 0 ·78 | 0 ·89 |
| கர்நூல் | 0 ·07 | 0 ·74 |
| கடப்பை | | 0 ·54 |
| ஹாஸ்ஸான் | 0 ·62 | 2 ·48 |
| பெங்களூர் | 0 04 | 1 ·46 |
| கொடைக்கானல் | 4 ·18 | 4 ·48 |
| உதகமண்டலம் | 2 ·63 | 2 ·59 |
| கோயம்புத்தூர் | 1 ·08 | 1 ·77 |
| வேலூர் | 2 ·32 | 1 ·09 |
| சேலம் | 1 ·17 | 2 ·14 |
| திருச்சினாப்பள்ளி | 0 ·25 | 1 ·89 |
| புதுக்கோட்டை | 0 ·93 | 1 ·47 |
| மதுரை | 0 ·78 | 2 ·36 |
| திருநெல்வேலி | 0 ·57 | 2 ·95 |

# Calender—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்ன பாக்கி | அகசு | துலு | இங் | தமி | வா | 47-ப்ரமாதீச வருஷ வைகாசிமீ உத்தராயணம்-வஸந்தருது { வைசாகம் ஜ்யேஷ்டம் } கொல்லம்-1088 பஸலி-1322 ; இங்கி-1913 வருஷம் மேமீ-ஜூன்மீ ; ஹிஜரி-1331 ஜமாதிலவல்-ஜமாதிஸானி |
|---|---|---|---|---|---|---|---|
| சிஅ | 5 43 | 31 14 | 7 | 14 | 1 | புத | நவ 50-10, மக 26-28, துரு 11-2, பால 22-59, சே 2-16, ரா 14-1, ரிஷபசூன்யதி, விஷ்ணுபதி, புண்யகால [சூன்யார்க்கம் |
| சிம | 4 54 | 15 | 8 | 15 | 2 | வி | தச 41-22, பூர 22-42, வியா 3-46, உப 52-34, தை 17-15, ரா 8-16, ரிஷபசூன்யதி |
| சிஅ | 44 | 16 | 9 | 16 | 3 | வெ | ஏகா 38-25, உத் 18-15, வஜ் 48-48, வணி 11-23, ரா 7-7, ஸர்வ ஏகா, ரிஷப ஏகாதசீதி, |
| ம | 34 | 17 | 10 | 17 | 4 | ச | த்வா 32-36, ஹஸ் 14-48, வித் 41-21, பவ 5-27, கவ 59-40, ரா 2-14, சனிப்பிரதோஷ |
| சி | ரிஷபம் 25 | 18 | 11 | 18 | 5 | ஞா | த்ர 26-52, சித் 10-59, விய 34-7, கர 54-14, தி 24-9, திரயோதசீதி, விபசிரா, நரசிம்மஜயந்தி |
| அம | 15 | 19 | 12 | 19 | ரிஷபமீ 6 | தி | சசி 21-44, சுவா 7-37, வரீ 27-20, பத் 46-26, தி 20-55, திதி த்வய, கூர்மஜயந்தி |
| மசி | 5 | 19 | 13 | 20 | 7 | செ | ○ 17-20, விசா 4-56, பரி 21-12, பால 45-31, தி 14-34, பிரதமாதி, ஆகாராமர்வை கரிநாள் |
| அசி | 3 55 | 20 | 14 | 21 | 8 | புத | ப்ர 14-0, அனு 3-14, சிவ 15-16, தை 12-49, தி 17-0, மிதுனயனம் 40-48, வைசாகபகுள, இஷ்டி |
| பிசி | 46 | 21 | 15 | 22 | 9 | வி | த்வி 12-1, சேட் 2-49, சித் 11-46, வணி 41-36, தி 23-1, ரா 28-28 |
| அபி | 36 | 22 | 16 | 23 | 10 | வெ | த்ரி 11-36, மூல 3-56, சாத் 8-51, பற 42-2, சே 3-49, தி 28-51, சங்கட சதுர்த்தீ |
| சி | 26 | 23 | 17 | 24 | 11 | ச | சது 12-54, பூரா 6-43, சுப 7-18, கவு 44-12, தி 28-1, |
| அ | 16 | 23 | 18 | 25 | 12 | ஞா | பஞ் 15-55, உரா 11-10, சுப் 7-6, கர 48-2, தி 22-4, சிரவண உபவா, ஷஷ்டீதி |
| அசி | 7 | 24 | 19 | 26 | 13 | தி | ஷஷ் 20-29, திருவோ 17-7, பிரா 8-7, பத் 53-13, தி 28-14, அதிதி |
| சிம | 2 57 | 25 | 20 | 27 | 14 | செ | ஸப் 26-9, அவி 24-11, மா 10-[illegible], பால 59-17, ரா 13-4, ஸப்தமீதி, வைசிரா, அக்னி டமீ, இராமா — நாள் முடிவு 43-33 |
| சிஅ | 47 | 26 | 21 | 28 | 15 | புத | அஷ் 32-27, சத 31-52, வை 12-33, கவு 32-27, ரா 18-31, காலாஷ்டமீ, புதாஷ் |
| சி | 37 | 27 | 22 | 29 | 16 | வி | நவ 38-38, பூட் 39-27, விஷ் 15-10, தை 5-35, தி வாமா, கரிநாள் |
| சிஅ | 28 | 28 | 23 | 30 | 17 | வெ | தச 44-8, உட் 46-21, பிரீ 17-24, வணி 11-30, தி 5-59, கரிநாள் |
| பிசி | 18 | 28 | 24 | 31 | 18 | ச | ஏகா 48-23, ரே 52-4, ஆயு 18-51, பவ 16-26, தி 13-2, ஸர்வஏகா |
| சிபி | 8 | 29 | 25 | 1 | 19 | ஞா | த்வா 51-3, அசு 56-14, ஸவு 19-11, கவு 19-55, ரா 14-10 |
| சிம | 1 58 | 29 | 26 | 2 | 20 | தி | த்ர 52-0, பர 58-42, சோ 18-12, சர 21-44, தி 21-25, பிர தோஷ |
| சிஅ | 49 | 30 | 27 | ஜூன்மீ 3 | 21 | செ | சசி 51-15, கிரு 59-31, அதி 15-53, பத் 21-50, தி 29-18, மாஸசிவரா, கிருத்திகை, கிருஷிணங்காரக சதுர்த்தசி |
| சி | 39 | 31 | 28 | 4 | 22 | புத | ● 48-59, ரோ 58-54, சுக 12-15, சது 20-17, ரா 7-44, ஸர்வ அமா, பிண்டபிதிரு |
| ம | 29 | 31 | 29 | 5 | 23 | வி | ப்ர 45-28, மிரு 57-4, திரு 7-29, கிம் 17-22, தி 12-34, ஜ்யேஷ்ட சுத்த, இஷ்டி, கரவீரவிருத |
| சி | 19 | 32 | 30 | 6 | 24 | வெ | த்வி 40-58, திரு 54-18, சூல 1-45, உப 53-32, பால 13-4, தி 17-11, சந்திரதர்சனம். |
| சி | 10 | 32 | 1 | 7 | 25 | ச | த்ரி 35-47, புன 50-59, விரு 48-23, தை 8-26, தி 22-42, ரம்பாவிருத |
| சி | 0 | 33 | 2 | 8 | 26 | ஞா | சது 30-13, பூச-47-20, துரு 41-11, வணி 32, பவ 57-22, தி 9-47, சதுர்த்தீதி, சதுர்த்தீவிருத, உமாவ தாரம். |
| சிம | 0 50 | 33 | ஜமாதிஸானிமீ 3 | 9 | 27 | தி | பஞ் 24-31, ஆயி 43-35, வியா 23-54, கவு 51-40, தி 17-20, திதித்வயம், அபரா அந்த 25-14, ஷஷ்டியுப |
| சி | 40 | 33 | 4 | 10 | 28 | செ | ஷஷ் 18-51, மக 39-56, ஹர் 26-40, கர 46-4, தி 11-44, ரா 27-11, ஸப்தமீதிதி அப ஆதி 18-56, இராமா |
| அ | 31 | 34 | 5 | 11 | 29 | புத | ஸப் 13-19, பூர 36-28, வஜ் 19-34, பத் 40-38, சே 2-45, ரா 21-54, அஷ்டமீதி, புதாஷ்டமீ, திவாமா |
| மசி | 21 | 34 | 6 | 12 | 30 | வி | அஷ் 8-1, உத் 33-16, வித் 12-41, பால 35-29, ரா 21-38, ரிஷ்பநவமிதிதி, வியசிரா |
| அசி | 0 11 | 34 | 7 | 13 | 31 | வெ | நவ 3-1, உப 55-22, ஹஸ் 30-22, விய 6-0, உப 53-38, தை 30-39, ரா 17-54, ரிஷபதசமீதிதி, அவம |

| | | | |
|---|---|---|---|
| செ ரா | பு சு | ர ச | |
| | 11-ரிஷ-பு 25-மேகெ 25-மிது-பு | | |
| குரு | | | கே |

# சாஸ்திரீய உரங்கள்.

237

## எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்கள்.

நைட்ரேட் ஆப் ஸோடா Nitrate of Soda, இந்த சரக்கிலடங்கிய நைட்ரஜன் முழுமையும் போட்டவுடன் உணவாகக்கூடிய நிலைமையிலிருக்கிறது. இதில் 100-ல் 15 முதல் 1-வரை நைட்ரஜன் உத்தரவாதம் செய்கிறோம்.

ஐவ்வு (Bone sinews.) இது வினைகாலம் நீடித்துள்ளதும், நைட்ரஜன் அதிகமாய் வேண்டியதுமான கரும்பு, வெற்றிலை, சிலஜாதி நெல் போன்ற பயிர்களுக்கு ஓர் நல்ல உரம். இது நாளடைவில் நைட்ரஜனையும், இந்திரிய வஸ்துவையும் கொடுக்கக்கூடியது. 100-ல் 10 முதல் 12 வரையில் நைட்ரஜன் உத்திரவாதம் செய்கிறோம்.

**நைட்ரஜன் பாஸ்பேட் உரங்கள் (Nitrogenous and Phosphatic manures.)**

எலும்புத்தூள் (Bone meal) முதல்தரமானதும், ரொம்ப சன்னமாய்த்தூள் செய்யப்பட்டதுமான எலும்புத்தூள் எங்கள் கம்பெனியில் விற்கப்படுகிறது. இதை உடனே உரமாக உபயோகிக்கலாம். இதில் 100-ல் 21 முதல் 23 வரையில் பாஸ்பாரிக் ஆஸிட்டும், 4 முதல் 4½ வரையில் நைட்ரஜனும் உத்திரவாதம் செய்கிறோம்.

அரைத்த மீன் (Milled Fish). இது கலப்பு உரங்களில் சேர்க்கக்கூடியதும், நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட், இந்திரிய வஸ்து இவைகளைக் கொடுக்கக்கூடியதுமான ஓர் நல்ல உரம். இதில் 100-ல் 4 முதல் 5வரையில் அமோனியாவும், 8 முதல் 10 வரையில் பாஸ்பேட்டும் உத்திரவாதம் செய்யப்படும்.

மேற்கூறிய விசேஷ உரங்களின் விலைகள் எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

***The Presidency Manure Works, Ltd.,***

***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madra***

**ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, ராணிப்பேட்**


**மானேஜிங் ஏஜண்டுகள்:—**

**பாரி அண்டு கம் ...**

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## "ஸர்தார்"



இது மேல்சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் வெகு நாளைக்கு ஓடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.


## "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்கு ஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும் கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயுமிருக்கும்.



தபாற்கூலியுள்பட — விலை ரூ. 10

## கோல்ட் மெடல் "ப்ராங்கீ" ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினால் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.

...mpson & Co. at the Minerva Press
... Sunkurama Chetty Street, George Town, Madras.